

கிராம நலம்

ஜூன், 1961 : : 13.ந.பை

லட்சியத்தில் உறுதி

"உங்களுடைய லட்சியத்தில் நம்பிக்கை இருந்தால், அதன் பொருட்டு உங்கள் முழு சக்தியையும் நீங்கள் உபயோகிக்க வேண்டும். "சத்தியமே ஜெயிக்கும்" என்று சாத்திரங்கள் முறையிடுகின்றன. இது உலகமே ஒப்புக் கொள்ளும் ஓர் உண்மையாகும். எங்கேயாவது இது வெற்றி பெறவில்லையென்று தோன்றினால், அதற்குக் காரணம் இந்தத் தத்துவம் பூரணமாயில்லாதிருப்பது அன்று; இதை அனுஷ்டிப்பவரின் பூரணமில்லாதத் தன்மையே, இதிலிருந்து வெளியாகிறது. இந்தத் தத்துவத்தை, நீங்கள் அறிந்து கொண்டீர்களேயானால், எந்த லட்சியமும், கைகூடும். அதற்கு, லட்சியத்தில் நம்பிக்கை வேண்டும். அத்துடன், லட்சிய சித்திக்கு இன்றியமையாததான அஞ்சாமையும் உங்களை வந்து அடையும்."

மகாத்மாவின் மணிமொழி

'கிராம நல' இதழ் ஆலோசனைக் குழு

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ்.,
பிரதமச் செயலாளர்.

ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி
கிராம அபிவிருத்திக் கமிஷனர்

ஸ்ரீ எஸ். இருஷ்ணசாமி பிள்ளை
துணைக் க ...ி [பஞ்சாயத்து]

ஸ்ரீ கே. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [பயிற்சி]

ஸ்ரீ டி. என். சேஷன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [வேலைமுறை]

ஸ்ரீ எஸ். வேங்கடரமணன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி, நிதித்துறை [திட்டம்]

ஸ்ரீ எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.,
பொதுஜனத் தொடர்பு அதிகாரி-ஆசிரியர்.

"கிராம நலம்" பத்திரிகையில் வெளியிட கதை, கட்டுரை, பாட்டு முதலியனவும் அவை சம்பந்தப்பட்ட கடிதங்கள் அனைத்தும் "ஆசிரியர், "கிராம நலம்", கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கிராம நலம்—சந்தா விவரம்

ஆண்டு சந்தா ரூ. 1·50 ந.பை.
ஆறுமாத சந்தா 0·75 ந.பை.
தனிப் பிரதி 0·13 ந.பை.

சந்தா, மற்றும் "கிராம நலம்" பத்திரிகை சம்பந்தப்பட்ட எல்லா கடிதப்போக்குவரத்துகளும் 'பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு எழுதப்படவேண்டும். ஸ்டாம்புகள் பெற்றுக்கொள்ளப்பட மாட்டா. வி. பி. பி. மூலம் பிரதிகள் அனுப்பப்படமாட்டா.

கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 6 | ஜூன் 1961 | படி 9

பொருளடக்கம்

	பக்கம்.
சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசுத்திட்டம்	2
மறந்து விட்டிருந்த பணி மறுபடியும் மலர்ச்சி பெறுகிறது	3
கல்லுப்பட்டி காட்டும் வழி—திரு. வ. சம்பந்தம்	5
கேள்வியும் பதிலும்	7
கலெக்டர்கள் மகாநாட்டில் முதல் அமைச்சரின் வேண்டுகோள்	10
சோஷியலிச சமுதாய அமைப்பும் பஞ்சாயத்தும்—திரு. அ. பெ. ஜெயராமன்	11
"கிராமவாசிகள் பயனடைய பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் முயலவேண்டும்"	13
ஆதிவாசி மாணவர்களுக்குப் புதிய உணவு விடுதி	14
நீலகிரி மாவட்ட கிராம முன்னேற்ற ஊழியர்கள் மகாநாடு	14
காந்தியடிகளும் கிராம வாழ்க்கையும்— திரு. வெ. சாமிநாத சர்மா ..	15
சென்னைக்கு அருகில் ஒரு நட்புறவுச்சாலை	17
பரிசுப்பத்திரக் குலுக்கல்	18
"வாழ்வு பிறந்ததடி" (கவிதை)—திரு. கவிஞர் பாரதிமோகன்.. ..	18
"அறிவொளி பரவுகிறது—கிராம வாழ்வுக்கு விஞ்ஞானம்"	27

பகுதி 2—பஞ்சாயத்து—அரசினர் இதழ்

அரசாங்க ஆணைகள்	i—xix
வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்	xx

கிராமப் பஞ்சாயத்து வளர்ச்சிப் பணிகள் :

சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசுத் திட்டம்

சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள் தமிழ்நாட்டில் ஏராளமாக உள்ளன. புதிய பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, பஞ்சாயத்து சம்பந்தப்பட்டவர்களும், கிராம மக்களும் ஊரை உயர்த்தும் திருப்பணியில் ஆர்வத்துடன் ஈடுபடுவதைக் காண்கிறோம். இந்த ஆர்வம் மேலும், நல்ல முறையில் பயன்படும் வகையில், ஒரு பரிசுத் திட்டத்தை அளிக்க " கிராம நலம் " முன்வந்துள்ளது.

கீழே எட்டுத் தலைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் ஏதாவது ஒன்றினை அடிப்படையாக வைத்துக் கட்டுரைகள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். கட்டுரைகள் "கிராம நல"த்தில் இரண்டு பக்கங்களுக்குமேல் போகக்கூடாது வெள்ளைத் தாளில், இரண்டு பக்கங்களிலும் எழுதாமல், ஒரே பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டும்.

பொருள் :—

1. கிராமப் பொருளாதார வளத்தைப் பெருக்கப் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்.
2. வயது வந்த குழந்தைகள் எல்லோருக்கும் கல்வியறிவு புகட்ட, பஞ்சாயத்துக்கள் செய்ய வேண்டியதென்ன ?
3. பள்ளிச் சிறுவர்களுக்கு மதிய உணவு அளிக்கும் திட்டத்தை, திறமையுடன் நடத்துவது எப்படி ?
4. கிராமக் கைத்தொழில் வளர்ச்சிக்கு, பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் என்ன செய்யலாம் ?
5. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க, பஞ்சாயத்துக்கள் என்ன திட்டங்களை மேற்கொள்ளலாம் ?
6. பொது இடங்களில் மரங்களை நட்டுப் பராமரித்தல் பற்றி, பஞ்சாயத்துக்களின் கடமைகள்.
7. ஜனத் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க, பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் என்ன செய்யலாம் ?
8. உணவு உற்பத்தி விஷயத்தில், பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்கள்.

மேற்குறிப்பிட்ட துறைகளில், உங்கள் கிராமத்தில் எத்தனையோ திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கலாம். செய்துள்ள சாதனைகள் என்னென்ன, கிடைத்த பலன்கள், வெற்றி தோல்விகள் எல்லாவற்றையும், அனுபவ வாயிலாக அடைந்த படிப்பினைகளின் அடிப்படையில், விளக்கிக் கட்டுரை வடிவில் எழுதி அனுப்ப வேண்டும். என்னென்ன செய்யலாம் என்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்காமல், மற்றப் பஞ்சாயத்துக்களுக்கும் பயன்படும் வகையில், செய்துள்ளவேலைகளைப்பற்றிய விவரங்கள் மட்டுமே முக்கிய இடம் பெறவேண்டும். 'சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்' என்ற தலைப்பில் டி. கல்லுப்பட்டிவட்டாரத்திலுள்ள, "காரைக்கேணி","காடனேரி" ஆகிய கிராமப் பஞ்சாயத்துக்களைப் பற்றிய கட்டுரைகள், முறையே "கிராம நலம்" மார்ச், மே இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. இந்தக் கட்டுரைப் போட்டியில் கலந்துகொள்பவர்கள், இந்த இரு கட்டுரைகளையும் கவனத்துடன் படித்து, அந்த முறையிலேயே தங்களுடைய கட்டுரைகளை எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒவ்வொரு மாதமும் மூன்று சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசளிக்கப்படும்.

முதற் பரிசு ரூ. 25.00.

இரண்டாவது பரிசு ரூ. 15.00.

மூன்றாவது பரிசு ரூ. 10.00.

ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து இப்பரிசுகள் வழங்கப்படும். கட்டுரையின்மேல் "கிராம நலம் கட்டுரைப் போட்டி" என்று தலைப்பிட்டு அனுப்பவும். அத்துடன் தங்களுடைய முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பஞ்சாயத்து உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் உறுப்பினர்கள், மற்றும் பஞ்சாயத்து வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

ஆசிரியர்,
" கிராம நலம்,"

கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறை,
தமிழ்நாடு அரசாங்கத் தலைமை அலுவலகம்,
சென்னை-9.

[Rural Development and Local Administration Department,
Secretariat, Madras-9.]

மறைந்த பணி மறுமலர்ச்சி பெறுகிறது

பாபநாசம் (தஞ்சை மாவட்டம்) பஞ்சாயத்து யூனியன் வழிகாட்டுகிறது

மக்களே முன்வந்து செயலாற்றும் குடி மராமத்து வேலைகள்

[1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், தமிழ் நாடு நிர்வாக வரலாற்றிலே, ஒரு திருப்பு மையம். நாட்டு நிர்வாகத்திலே இது நாள் வரை அக்கறையே இல்லாமல் கிடந்த கிராம மக்களிடையே, ஒரு புதிய விழிப்புணர்ச்சி இன்று ஏற்பட்டுள்ளது. ஊரை உயர்த்தும் திருப்பணியில், மக்களே முன்வந்து பணியாற்றுவதென்பது பழங்காலத்து நல்ல வழக்கம். இன்று, அது புத்துயிர் பெற்று நம் கண்முன்னே காட்சியளிக்கிறது. கிராமப் புறங்களிலே, குடி மராமத்து என்றால், அதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம் என்று மக்கள் கேட்டுக்கொண்டு, தூங்கிக் கிடந்த காலம் ஒன்றிருந்தது. ஆனால், அதுவெல்லாம் பழங் கதை. இன்று கிராமிய மறுமலர்ச்சி என்ற புது வரலாறே எழுதப்படுகிறது. புத்துணர்ச்சியும், ஆக்கத் திறனும், சேர்ந்து உருவாக்கும் இந்தப்புதியவரலாற்றுக் காவியத்திலே, முதல் படலம், ஆரம்பமாகிவிட்டது. தஞ்சை மாவட்டம், பாபநாசம் பஞ்சாயத்து யூனியனிலே நடைபெற்றுவரும் குடி மராமத்து வேலைகள், புதிய பொறுப்புணர்ச்சியின் பயனாக ஏற்பட்ட முதல் சாதனை ; முக்கிய சாதனை. (இது பற்றிய படங்கள் 23-ம் பக்கம் பார்க்க.) —ஆசிரியர்.]

"வரப்பு உயர நீர் உயரும்! நீர் உயர நெல் உயரும்!" என்று அறிவுரை கூறுகிறாள் செந்தமிழ்ச் செல்வி ஔவைப் பிராட்டி. பாய்கால், வடிகால் வசதியுடன், வற்றாத நீர் வளமும் இருந்தால்தான், பயிர் செழித்து, விளைவு சிறக்கும். பண்டைத் தமிழ் மக்கள் அவர்தம் வயல்களில் வரப்புகளை உயர்த்தி வந்தனர். வயல்களில் நீர் பாய, வாய்க்கால்களை ஆழப்படுத்தி, நீர் பெருக்கி, வயல்களில் நீர் நிரம்பி நிற்க சுற்றியும் வரப்புக்களை அமைத்து, நிலமகளைக் கொழிக்க வைத்தனர். நிலமென்னும் நல்லாள் அவர்களுக்கு பிரதிபலனைக் கருதாமல், நெற்கதிர்களை வாரிவாரி வழங்கினாள். "சனியும், கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தருநாடு—இது நித்த நித்தம் கணக்கின்றித் தரு நாடு" என்று மகாகவி பாரதியார், நிலமென்னும் நல்லாளுக்குப் புகழ்மாலை சூட்டி மகிழ்கிறார். விளைவு குறைந்தால், வறுமை மிகுந்து, பற்றாக் குறையினால் வாழ்க்கை கெட்டுவிடுகிறது. குடிகள் வளமின்றி வறுமையால் வாடினால், நாட்டிலே, அமைதி கெடுகிறது. அமைதிகுறையும் பொழுது, அரசு செம்மையுடன் நடைபெற முடியாது. அரசு செம்மையாக நடைபெற, குடி மக்கள் வறுமையின்றி வாழ வேண்டுவது அவசியமாகிறது. பழந் தமிழ் மக்கள் இந்தக் கருத்தினை நன்கு உணர்ந்திருந்தனர். பழந் தமிழ் மன்னர்கள், ஆறுகளையும், கால்வாய்களையும் வெட்டி, வரப்பெடுத்துக் கழனிக்குத் தண்ணீர் பாய வசதிகள் செய்து தந்தார்கள். "காவிரிக்கு கரை எடுத்த கரிகால் பெருவளத்தான்" இந்தப் பண்புக்குப் பழம் பெரும் உதாரணமாய் இன்றும் திகழ்கிறான்....

அந்நியர் ஆட்சி விளைத்த கேடு

இடைக்காலத்திலே, நிலைமை சீர்கெட்டது. அந்நியர் ஆட்சி இந்த நாட்டிலே விளைத்த கேடுகளில் எல்லாம் பெரிய கேடு, மக்களை உற்சாகமற்றவர்களாய், உறுதி குன்றியவர்களாய், வாழ்விலே பொது விஷயத்தில் அக்கறை இல்லாதவர்களாய்ச் செய்ததுதான். பண்டைக் காலந்தொட்டு இருந்துவந்த "குடிமராமத்து வேலை", இடைக்காலத்திலே சீர்கெட்டுப் போய்விட்டது. மனவளம் குறைந்தது. அத்துடன் நிலவளமும் குறைந்தது.

அரசியல் விடுதலை யடைந்த பின்....

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், மக்களிடையே இயற்கையாகவே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. நாட்டின் சீரமைப்புக்கான திட்டங்கள் பல தீட்டப்பட்டு, வெற்றியுடன் செயலாக்கப்படுகின்றன. மக்கள் தங்கள் பொறுப்புக்களை உணர்ந்து கொண்டு, நாட்டின் நலனுக்காகப் பணியாற்ற, தாங்களே முன்வந்துள்ளனர். அதிகாரப் பரவல் முறை, என்ற அடிப்படையில், நாட்டின் முதுகெலும்பான பஞ்சாயத்துக்கள் கையில், பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னர், கிராம மக்களிடையே ஏற்பட்டுள்ள பொறுப்புணர்ச்சியும், சேவை மனப்பான்மையும் குறிப்பிடத்தக்கன. கிராமப் புறங்களில் மக்களால் இதுவரையில் கவனிக்கப்படாமல், சீர்கெட்டுக் கிடந்த வாய்க்கால் வெட்டு போன்ற குடி மராமத்து வேலைகள், இன்று மறுபடியும் மக்களால், அதன் அவசியம் உணரப்பட்டு, அவர்களாலேயே தமிழ் நாட்டில் செயலாற்றப்படுவது, வரவேற்கத் தக்க மாற்றமாகும். தமிழ் நாட்டில் நெடுங் காலத்திற்குப் பிறகு கிராம மக்கள் குடி மரா

மத்து பணியினைப் புரிய முன்வந்துள்ளனர். இதற்குச் சிறந்த உதாரணம், தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம் வட்டாரத்தில், இன்று அந்தப் பஞ்சாயத்து யூனியனுல் நிறைவேற்றப்பட்டுவரும் குடிமராமத்து வேலைகளேஆகும்..

பொன்னி நல்லாளின் அருமைத் தங்கையான கொள்ளிடத்தின் அரவணைப்பில் வளர்ந்து வருகிறது பாபநாசம், மிலட்டூர், பகுதிகளடங்கிய பாபநாசம் வட்டாரம். "வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி" பாயும் சோழ வள நாட்டின் ஒரு பகுதியான இந்த வட்டாரம், சுமார் 98 சதுர மைல் பரப்புள்ளது. இப்பிரதேசத்தில் அடங்கியிருப்பவை 83 ரெவின்யூ கிராமங்களாகும். 57 ஊராட்சி மன்றங்கள், அக்கிராமங்களைக் கட்டிக் காத்து வருகின்றன. மக்கள் தொகை, 95,076. நிலவரி வருவாய் ரூ. 6,17,360. 54 ஆரம்பப் பள்ளிகள், 35 தனியார் பள்ளிகள் இந்த வட்டாரத்தில் உள்ளன.

புதியதோர் திருப்பத்திற்கு வித்து

கடந்த மார்ச் 8, 9 தேதிகளில் தமிழ் நாடு அரசாங்கப் பிரதம செயலாளர் **திரு ஆர். ஏ. கோபாலசாமி ஐ.சி.எஸ்.**, அவர்கள், பஞ்சாயத்து யூனியன் செயல் முறைகளைப் பார்வையிட வந்தபோது, வேளாண்மைக்கு மிகவும் இன்றியமையாத குடி மராமத்து வேலை, கவனிப்பாரற்று, சீர் கெட்டுக் கிடந்த நிலையினைக் கண்டார். பொது வேலைத் துறையின் [P.W.D.] அதிகாரத்துக்குக் கட்டுப்படாத, பல வாய்க்கால் வழியாக வயல்களுக்கு நீர்பாய வேண்டியிருந்தது. கால்வாய்கள் வெட்டிச் செப்பனிடாததினுல், தண்ணீர் வயல்களுக்கு சீராகப் பாய்வதற்குத் தடையாக இருந்தது. இதனுல் மகசூல் குறைந்தது. அத்துடன், இந்தக் குடி மராமத்துப் பணியில்அரசாங்கம் எவ்வளவுதான் அக்கறை காட்டினுலும், கிராம மக்களே நேரடித் தொடர்பு கொண்டு பணியாற்றினுல் தவிர, செம்மையான முறையில் நடைபெற முடியாது. இதை எல்லாம் தெரிந்த அவர், தன்னுடைய கருத்தைக் கிராம மக்களிடையே எடுத்து விளக்கினுர். பாபநாசம் வட்டார மக்கள் மிகவும் மேன்மையான முறையில் அவருடைய எண்ணத்தை நிறைவேற்ற, ஒன்றுபட்டு, உற்சாகத்தோடு முன்வந்தனர்.

இத்திட்டத்தை மற்ற வட்டாரங்களிலும் மேற்கொள்ளும் வகையில், பரீட்சார்த்தமாக, தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம், கீழ்வேளூர் ஆகிய இரு பஞ்சாயத்து யூனியன்களிலும், இந்தக் குடி மராமத்து வேலையை ஆரம்பித்து, ஜூன் மாத இறுதிக்குள் முடிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. மராமத்து செய்யும் பணிகளை ஆயக்கட்டுதாரர்கள், கிராமத்தினர்களைக்கொண்டு, பஞ்சாயத்துக்கள் மேற்பார்வையிலே நடத்தி, அதில் ஏற்படும் செலவைப் பஞ்சாயத்தே ஏற்றுக்கொண்டு, பஞ்சாயத்துச் சட்டத்தின் 85 (2) -வது பிரிவின் பிரகாரம் திரும்ப சரிக்கட்ட வேண்டியது. ஏக்கர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வரை செலவை ஆயக்கட்டுதாரர்கள் ஏற்றுக்கொள்ளவும், அதற்குமேல் ஏற்படும் செலவில் மூன்றில் இரண்டு பாகத்தை அரசினர் ஏற்று, மிகுதியை மட்டும் ஆயக்கட்டு தாரர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

பாபநாசம் வட்டாரத்தில் 36 பஞ்சாயத்துக்களில் குடிமராமத்து வேலைகளைச்செய்ய முடிவு செய்தனர். அதன்படி சுமார் ஒரு லட்சம் ரூபாய் செலவில், 125 மைல் நீளத்திற்கு வாய்க்கால்களை ஆழப்படுத்தத் திட்டமிடப்பட்டு இருக்கிறது.

பாபநாசம் வட்டாரத்தின் 36 பஞ்சாயத்துக்களில், வாய்க்கால் வெட்டு வேலைகள் துவங்கப்பட்டன. அரசாங்கம், பஞ்சாயத்து யூனியனுக்கு முன் மானியத் தொகையாக, குடி மராமத்து வேலைக்கு ரூ. 21,000 அளித்தது. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களில் வேலை தொடங்கி, கிராம மக்கள் உற்சாகத்துடனும், சேவை மனப்பான்மையுடனும் குடி மராமத்து வேலையில் இறங்கியுள்ளனர். சத்திய மங்கலம் பஞ்சாயத்துப் பிரதேசத்தில் வழி வாய்க்கால், மோட்டு வாய்க்கால், பிராயடி வாய்க்கால் என்று மூன்று வாய்க்கால்கள் வெட்டப்படுகின்றன. வாய்க்கால்கள் தூர்ந்துபோய் மேடாக மண் மேடிட்டுக் கிடந்தவை, இன்று நல்ல ஆழத்திற்கு தோண்டப்பட்டுள்ளன. வாழ்க்கை என்று சிறு கிராமம். அந்தக் கிராமத்து மக்கள் குடி மராமத்துப் பணியில் அதிக உற்சாகத்துடன் ஈடுபட்டுப் பாடுபடுகின்றனர். திருவைகாவூர் பஞ்சாயத்தால் திருவை காவூர் வாய்க்கால், நீலத்தநல்லூர் வாய்க்கால் என்று வாய்க்கால்கள் வெட்டப்படுகின்றன. இவை சுமார் மூன்று மைல் நீளத்திற்கு $1\frac{1}{2}$ அடி ஆழத்திற்கு வெட்டப்பட்டுள்ளன. ஆதனூர் பஞ்சாயத்தில் கொங்கன் வாய்க்கால், பாதிரி மேட்டு வாய்க்கால், நடு வாய்க்கால், தென்பாதி வாய்க்கால், கல்லுகுடிகாணி வாய்க்கால், ஆகிய வாய்க்கால்கள் வெட்டப்பட்டுள்ளன. இவை சுமார் 15 மைல் நீளமுள்ளவை. திருமண்டக்குடி என்ற ஊர் தொண்டரடிப்பொடியாழ்வார் பிறந்த ஊர். அமைதியும், இயற்கை எழிலும் சூழ்ந்த அந்த ஊரில் வெட்டப்பட்டிருக்கும் வாய்க்கால் சுமார் 12 அடி அகலமுள்ளதாகும். கிராம மக்களின் கூட்டு முயற்சியின் சாதனையாக விளங்குகிறது இவ்வாய்க்கால். இதே முறையில், மற்ற மற்றப் பஞ்சாயத்துக்களும் இந்தத் துறையில் முழு மூச்சுடன் வேலை செய்கின்றன.

பாபநாசம் வட்டாரத்திலே, ஒரு அமைதியான "விவசாயப் புரட்சி" நடைபெற்று வருகிறது. குடி உயர்த்தும் குடி மராமத்துப் பணியில், இதுவரையில் அக்கறையே காட்டாமல் இருந்து வந்த கிராம மக்கள், இன்று விழிப் புணர்ச்சி பெற்று, தாங்களே முன் வந்து, இந்தப் பணியினை நிறைவேற்றுகின்றனர். மக்கள் நேரடிப் பங்கு கொண்டு செயலாற்றினுல், நிறைவேருதபணியும் உண்டா? தஞ்சை மாவட்டத்தில், கிராம மக்களால் செயலாற்றப் பட்டுவரும் "குடி மராமத்து வேலை" தமிழ்நாட்டின் மற்ற கிராமங்களுக்கும் ஒரு சிறந்த உதாரணமாக விளங்குகிறது. இந்த முக்கிய சாதனைக்குக் காரணமாக இருந்து சேவை செய்பவர்கள் பாபநாசம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் **திரு ஆர். சௌந்தரராஜ மூப்பனுரும்** அவருடைய சகாக்களும் தான். முதன் முதலில் கிராம மக்களே முன்வந்து, குடி மராமத்து பணியினைப் புரியும் பேறு பெற்ற பாபநாசம் வட்டாரத்தையும், அந்த வட்டாரத்துப் பஞ்சாயத்துத் தலைவர்களையும், பஞ்சாயத்து யூனியனையும் எவ்வளவு பாராட்டினுலும் தகும். கிராம மக்களின் கூட்டு முயற்சி வெல்க! பாபநாசம் காட்டும் பாதையில் தமிழகம் விரைந்து முன்னேற வேண்டுமென்று ஆசைப்படுவதில் தவறு ஒன்றுமில்லையே!

கல்லுப்பட்டி காட்டும் வழி

[தமிழ் நாட்டில், காந்தியடிகளின் பெயரால் அமைந்து, சிறந்த பணியாற்றி வரும் நிறுவனங்களுள் அம்பாத்துறையை அடுத்த காந்தி கிராமம், கல்லுப்பட்டி காந்தி நிகேதன் ஆசிரமம், ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கன. ஆரவாரமின்றி, அமைதியான முறையில் பணியாற்றி வரும் இந் நிறுவனங்களில், கல்லுப்பட்டி காந்தி நிகேதன் ஆசிரமத்தைப் பற்றி விளக்குவது இந்தக் கட்டுரை. இந்த ஆசிரமத்தின் சிறந்த பணியையும், செயல் முறையையும், தமிழக மக்கள் அறிய வேண்டியது அவசியம் என்ற கருத்துடன், இந்த ஆசிரமத்தின் நடைமுறைகளை நேரில் சென்று கண்டு வந்த "கிராம நலம்" துணையாசிரியர் திரு. வ. சம்பந்தம் அவர்கள் இக்கட்டுரையினை எழுதியுள்ளார். —ஆசிரியர்]

பாண்டிய நாட்டுத் தலைநகரான பழம் பெருமையும் புதுப் பொலிவும் பெற்று விளங்கும் மதுரையம்பதிக்குத் தெற்கே, 24 மைல் தொலைவில் உள்ளது கல்லுப்பட்டி. மதுரை மாவட்டத்துக்கு எத்தனையோ சிறப்புக்கள் உள்ளன. "மாடுகட்டிப் போரடித்தால் மாளாது என்று யானை கட்டிப் போரடிக்கும் அழகான தென் மதுரை" என்று தமிழ் இலக்கியம் பாண்டி நாட்டு வளத்தைப்பற்றி பெருமையுடன் பாடுகிறது. மதுரையின் மண் வளத்தின் ராசி அப்படி. அருகிலே கள்ளழகரின் அழகிய திருக்கோலம்; திருப்பரங்குன்றத்திலே முருகனின் படை வீடு. பழம் பெருமையும், புதுப் பெருமையும் இணைந்து இலங்குவது மதுரை மாவட்டம்.

வான்முட்டும் கோபுரங்களையுடைய பாண்டி மாநாடு, நாட்டின் சுதந்திர இயக்கத்தின்போது, ஆற்றிய பணி மகத்தானது. தேசியப் போராட்டத்திலே என்றுமே மதுரை மாவட்டம் சோடை போனதில்லை. "வெள்ளையனே வெளியேறு" என்ற அண்ணல் காந்தியடிகளின் சூளுரையைச் சிரமேற்கொண்டு, இந்த நாட்டிலே லட்சோபலட்சக்கணக்கான மக்கள் தன்னுடையது என்று இருந்த அத்தனையையும் துச்சமென உதறி எறிந்துவிட்டு, சுதந்திரப் போராட்டத்திலே குதித்தார்களே, அந்த மகத்தான தியாக வரலாற்றிலே பாண்டி நாட்டுக்கு ஒரு தனி இடமுண்டு. பழம் பெருமை மட்டுமல்ல; சுதந்திரப் போராட்டத்திலே முதலிடமட்டுமல்ல; நாட்டுக்குத் தேவையான நல்ல பல காரியங்களை, அமைதியான காலத்திலும், அழகும் பண்பும் மிளிர செய்து முடிப்பதிலே, மதுரை மாவட்ட மக்கள் கைதேர்ந்தவர்கள். அவர்களுடைய செயல் திறமைக்கும், தேசிய ஆர்வத்திற்கும், சேவை மனப்பான்மைக்கும் சான்றாக விளங்குகின்றன அம்பாத்துறையை அடுத்த காந்திக் கிராமமும், கல்லுப்பட்டி காந்திநிகேதன ஆசிரமும். மகாத்மா காந்தி அடிகள் கண்ட கிராம ராஜ்ஜியக் கனவை தமிழகத்திலே நனவாக்கிக்கொண்டு இருக்கின்றன இந்த இரு நிறுவனங்களும்.

அன்று விதைத்த விதை இன்று ஆல்போல் வளர்ந்து..

கல்லுப்பட்டி காந்தி நிகேதன ஆசிரமத்தின் துவக்கக் கதை தமிழ் நாட்டுச் சுதந்திர போராட்டத்திலே முக்கிய அத்தியாயத்தைச் சுட்டிக் காட்டுகிறது. நாட்டின் சுதந்திர போராட்டத்திலே பாண்டி நாட்டு இளைஞர்கள் ஆர்வத்துடனும், துடிப்புடனும், அஞ்சாத நெஞ்சு உரத்துடனும், லட்சியத் திண்மையுடனும், பெருவாரியான அளவிலே குதித்திருந்த நேரம். அந்தச் சீமையிலே நாட்டின் விடுதலை இயக்கத்தின் தளமாக அமைந்த இடம் கல்லுப்பட்டி. இன்றைய கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு கோ. வேங்கடாசலபதி அவர்கள் அன்று துடிப்புள்ள இளைஞராய், தேசிய போராட்டத்திலே பெரும் பங்கு கொண்டு கல்லுப்பட்டியை விடுதலைப் பாசறையாக மாற்றியமைத்தார். அவருடைய ஆர்வம் வெறும் உணர்ச்சிக் குவியலாய் சிதறி விடவில்லை. மாறாக, சிறந்த ஆக்க வேலைக்கு நல்லதொரு உறுதுணையாய் நின்றது. காந்தியடிகளின் லட்சியக் கனவை நனவாக்கும் திருப்பணியிலே, அவர் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு, கல்லுப்பட்டியிலே காந்தி நிகேதன் ஆசிரமத்தை நிறுவினார். அன்று 1940-ல் அவர் விதைத்த விதை, இன்று ஆல்போல் வளர்ந்து, அரசுபோல் வேர் விட்டு, எங்கும் நிறைந்த நாதமாய், எழில்வண்ண நிறுவனமாய்த் திகழ்கிறது. இதயத்திலே பீறிட்டு எழும் உணர்ச்சிக் குவியல்கள் சிந்தாமல் சிதறாமல் கட்டுக்கோப்பான முறையில் ஆக்க வேலையில் ஈடுபடுத்தப்பட்டால், அதனால் விளையும் பயன் எவ்வளவு மகத்தானதாக இருக்கும் என்பதை நமக்கு எல்லாம் அறிவுறுத்துக்கொண்டே இருக்கிறது கல்லுப்பட்டி காந்தி நிகேதன ஆசிரமம்.

அருமையான லட்சியங்களின் அடிப்படையில்..

அன்பும், அமைதியும் தவழ்ந்து விளங்கும் கல்லுப்பட்டி ஆசிரமத்தின் இன்றையச் செயலாளராக இருந்து நடத்தி வருபவர் திரு ஆர். குருசாமி அவர்கள். அவரும், அவருடைய சகாக்களும் பெரும்பாடுபட்டு, இரவு பகல் என்று பாராமல் இடையறாது உழைத்து இந்த ஆசிரமத்தை மகத்தான நிலைக்குக் கொண்டு வந்துள்ளனர். கல்லுப்பட்டி ஆசிரமத்தை ஒரு தடவை பார்ப்பவர் அதை மறக்கவே முடியாது. லட்சியக் கிராமம், லட்சியக் கிராமம் என்று அடிக்கடி சொல்கிறோமே, அந்த லட்சியக் கிராமத்தை எப்படி உருவாக்குவது என்பதை கல்லுப்பட்டிக்கு ஒரு தடவை சென்று பார்த்தால் புரிந்து விடும். நல்ல லட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு காந்தி

நிகேதனம் செயலாற்றி வருகிறது. சமுதாயத்தின் அடித் தட்டிலே கிடந்து உழலும் சாதாரண மனிதன் கூட, இந்த நாட்டின் எதிர்காலத்தை உருவாக்குவதில் தனக்கும் பங்கு உண்டு என்று பெருமிதத்தோடு சொல்லும் வாய்ப் பினை அவனுக்கு அளிக்கவும், சமுதாயத்திலே உயர்ந் தவன் தாழ்ந்தவன் என்ற வர்க்க பேதமற்ற நல்ல தொரு நிலையை உண்டாக்கவும், எல்லோரும் ஒரு குலம் என்ற அடிப்படையில் வேறுபாடுகளைக் களைந்தெறிந்து விட்டு மக்கள் அத்தனைபேரும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்த வர்கள் என்ற உணர்வை ஊட்டவும், கதர் கிராமக் கைத்தொழில்கள் மூலம் முழுப்பட்டினி, அரைப்பட்டினி என்று கிடந்து அல்லாடும் ஏழை மக்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்கள் பசியைப் போக்கவும், சுதந்திர மாளிகையின் அடித்தளமாக விளங்கும் ஆதாரக் கல்வி முறையைப் பரப்பவும், இத்தகைய சீரிய லட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது கல்லுப்பட்டி காந்தி நிகேதன் ஆசிரமம்.

ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்று சுயபல மும், சுயசக்தியும் வாய்ந்து, பிறர் கையை எதிர்பாராமல் வாழ வேண்டும் என்ற அடிப்படை லட்சியக் கனவை, இந்த ஆசிரமம் மெள்ள மெள்ள நனவாக்கிக் கொண்டு வருகிறது. கிராமங்கள் பிறர் கையை எதிர்பார்த்து வாழாமல் தன் பலத்திலேயே நிற்க வேண்டுமானால், வேளாண்மையும், கிராமக் கைத்தொழில்களும் ஓங்கி வளரவேண்டும். இந்த லட்சியத்தை நிறைவேற்றும் வகையில், காந்தி நிகேதன ஆசிரமம் அனுதினமும் பாடுபட்டு வருகிறது.

ஆசிரமத்தில் இயங்கி வரும் அற்புதங்கள்

பலவிதமான கிராமக் கைத்தொழில் நிறுவனங்கள் ஆசிரமத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. கைக் குத்தல் அரிசி நிலையம், மண்பாண்டம் செய்யும் தொழில், எண்ணெய் தயாரித்தல், சோப்பு தயாரித்தல், தோல் கருவிகள் தயாரித்தல், தீப்பெட்டி தயாரித்தல், கையாலே காகிதம் செய்தல், தேனீக்கள் வளர்த்தல், பனை வெல்லம் தயாரித்தல் ஆகிய பல கிராமக் கைத் தொழில்கள் இந்த ஆசிரமத்தில் சீரிய முறையில் நடை பெறுகின்றன. அத்துடன், உயர்மட்ட ஆதாரக் கல்வி நிலையம், தொழில் வளர்ச்சி அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் கதர்க் கிராம உத்தியோக வித்தியாலயம், கதர் வளர்ச்சி அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் நிலையம், காந்தி நிகேதன கைத்தொழில்கள், கூட்டுறவு நிறுவனம் ஆகியவை ஆசிரமத்தின் நிர்வாகத்தில் நடைபெறுகின்றன. அத்துடன், கிராமக் கைத்தொழில்கள் மாதிரி நிறுவனம், கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையம், தொழில் துறைப் பயிற்சி நிலையம், குடும்பக் கல்வி பயிற்சி நிலையம் ஆகிய நான்கு அரசாங்கச் சார்பு உடைய நிலையங்களும் ஆசிரமத் தில் இயங்குகின்றன. கிராம வளர்ச்சித் துறையில் ஈடுபட் டுள்ள அனைவருமே தெரிந்துகொள்ள வேண்டிய விஷ யங்கள் ஏராளமாக இங்கே உள்ளன. அந்தத் துறை யில் ஈடுபட்டுள்ளோருக்கு நல்லதொரு பயிற்சி நிலையமாக, அரியதொரு கருவூலமாகத் திகழ்கிறது காந்தி நிகேதன ஆசிரமம்.

கைக் குத்தல் அரிசி தயாரித்தல்

கைக் குத்தல் அரிசி நிலையம், ஆசிரமம், தொடங்கிய நாளிலிருந்தே, அதாவது 1940-ம் ஆண்டிலிருந்தே, இயங்கி வருகிறது. இந்த ஆசிரமத்தினுள் இருப்பவர்கள், அவர்கள் யாராயிருந்தாலும் சரிதான், இந்தக் கைகுத்தல் அரிசியைத்தான் உபயோகிக்கிறார்கள். புழுங்கல் அரிசி, பச்சரிசி இரண்டும் தயாரிக்கப்படுகிறது. சுற்றுப்புற கிராமத்திலிருந்து 13 பெண்கள் இங்கே இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு தினந்தோறும் கூலி கொடுக்கப்படுகிறது. தினக் கூலி யாக ஒரு படி அரிசியும், கால் படி குருணையும் ஒவ்வொரு வருக்கும் கொடுக்கப்படுகிறது. மரத்தினாலும், கல்லி னாலும் ஆன சக்கிகளில்தான் அரிசி கையினால் குத்தப் படுகிறது. இந்தச் சக்கிகள் வைட்டமின் சத்துப் போய் விடாத நிலையில் அரிசியைக் காப்பாற்றித் தருகின்றன. சக்கிகள், போன்ற உபகரணங்கள் ஆசிரமத்திலேயே தயாரிக்கப்பட்டு அருகில் உள்ள கிராமங்களுககுத் தேவையானதை ஆசிரமத்தார் வழங்குகிறார்கள். திருந் திய முறையில் உபகரணங்களைத் தயாரித்துள்ளார்கள். கல்லுப்பட்டியில் உள்ள பொதுமக்களும், சுற்றுப் புறத்தில் கிராமங்களில் உள்ள மக்களும் கைகுத்தல் அரிசியை உபயோகிக்கத் தொடங்கியுள்ளனர். இந்த முறையை அருகாமையில் உள்ள கிராமங்களில் பரப்ப ஆசிரமம் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது. இந்தத் துறையில் பக்கத்து கிராமங்களில் ஒரு கணக்கு எடுக்கப்பட்டது. எத்தனை மக்கள் கைக்குத்தல் அரிசியை உபயோகிக்கின்றனர் என்று கணக்கு எடுத்ததின் பலனாக, அருகாமையில் உள்ள "காரைத்கேணி" கிராமத்தில் ஒரு கைக்குத்தல் அரிசி நிலையம் துவக்கப்பட்டுள்ளது இந்தக் கைக்குத்தல் அரிசி நிலையத்தில் வேலை செய்யும் கிராம ஸ்திரீகளுக்கு "முதியோர் கல்வி" அளிக்கப் படுகிறது. இந்த விஷயத்தில் ஆசிரமத்தின் இயக்குனர் களில் ஒருவரான ஸ்ரீ துளசி நாயுடு அவர்கள் காட்டும் ஆர்வம் பாராட்டபற்பாலது.

மண்பாண்டத் தொழில்

மண் பாண்டம் செய்யும் தொழில் ஆசிரமத்தாரால் நடைபெறுகிறது. கிராமக் கைத் தொழில்களில் ஒன்றான மண்பாண்டம் செய்யும் தொழிலை ஊக்குவிக்க வேண்டி, 1955-ல் இங்கே அதற்கான நிலையம் ஒன்று துவக்கப் பட்டது. அகில இந்திய கதர், கிராமக் கைத் தொழில் கமிஷன் இந்த மாதிரி ஒரு பயிற்சி நிலையம் நடத்த அனுமதித்ததின் பேரில், இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டு பணியாற்றி வருகிறது. இந்த நிலையம், ஒரு உற்பத்தி நிலையமாகவும் அதே சமயத்தில் ஒரு பயிற்சி நிலைய மாகவும் உள்ளது. மண்பாண்ட வேலைப்பாடுகள் அத்தனையும் இங்கே செய்யப்படுகின்றன. இங்கே

[19-ம் பக்கம் பார்க்க]

கேள்வியும் பதிலும்

கேள்வி.—1. (அ) 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், பஞ்சாயத்துத் தலைவர்மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர இடமளிக்கிறதா? இப்பொழுது அந்த விதி அமுலில் இருக்கிறதா?

(ஆ) அவ்வாறு இடமளித்தால், தலைவரை நீக்குவதற்கு எத்தனை அங்கத்தினர்கள் தீர்மானத்தை ஆதரித்து ஓட்டளிக்க வேண்டும்? **[ஜி. நாராயணசாமி, தலைவர், குலால்பாடி ஊராட்சி மன்றம, செங்கம் தாலூகா.]**

பதில்:—(அ) பஞ்சாயத்துக் தலைவர் அல்லது துணைத் தலைவரின்மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர, 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 152-வது பிரிவில் வகைசெய்யப்பட்டுள்ளது. மேலும், தலநிர்வாகத்துறையின் 8—10—60 தேதியிட்ட அரசாங்க ஆணை (எண் 1672)யில், இப்போதுள்ள பஞ்சாயத்துக்களுக்கு அது பொருந்துகின்ற வகையை விளக்கி உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட சட்டப் பிரிவில், அனுமதிக்கப்பட்ட பஞ்சாயத்து அங்கத்தினர்களின் தொகையில் ஒரு பாதி உறுப்பினர்கள் கையெழுத்திட்டு. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படும் செய்தியை எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையுடன், கொண்டுவர இருக்கும் தீர்மானத்தின் நகலும், தலைவர், அல்லது துணைத்தலைவர் இவர்களில் யார்மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறதோ அவர்மேல் கூறப்படும் குற்றச் சாட்டுகளைப் பற்றிய ஒரு அறிக்கையும் சேர்த்து, இவற்றை மேற்படி அறிக்கையில் கையெழுத்திட்டுள்ள இரண்டு அங்கத்தினர்கள், நேர்முகமாகச் சம்பந்தப்பட்ட தாசில்தாரிடம் கொடுக்கவேண்டும். அப்படி அது கிடைத்ததும், தாசில்தார் எப்படி நடந்துகொள்ளவேண்டும், என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது பற்றி மேற்குறித்த சட்டப் பிரிவின், (3) முதல் (12) வரையில் உள்ள துணைப்பிரிவுகள் விளக்குகின்றன.

(ஆ) 1958-ம் வருடத்திய பஞ்சாயத்துக்கள் சட்டம் பிரிவு 152-ன் துணைப்பிரிவு (13)-ன் கீழ் தலைவர் அல்லது துணைத் தலைவரின்மேல் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம், பஞ்சாயத்தின் அனுமதிக்கப்பட்ட அங்கத்தினர் தொகையில் மூன்றில் இரண்டு பகுதியினரின் ஆதரவுடன் நிறைவேற்றப்படவேண்டும். அப்படி நிறைவேறிவிட்டால், மேற்பார்வையாளர் (Inspector) சம்பந்தப்பட்ட தலைவரையோ அல்லது துணைத்தலைவரையோ நீக்குவார். அந்தப் பிரிவின்படி, கலெக்டர் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டு, மேற்பார்வையாளரின், அதிகாரங்களையும், கடமைகளையும் அவர் நிறைவேற்றுவார்.

கேள்வி 2. சிறிய பஞ்சாயத்துக்களில் வரி வசூலிப்போராகவும் குமஸ்தாவாகவும் வேலை செய்வோர் (Clerk-cum—Bill collector) இனி எடுக்கப்பட்டு விடுவார்கள் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது; சிறிய பஞ்சாயத்துக்களில் வேலை செய்யும் ஊழியரின் சம்பள வீதத்தின் "திருத்தச்சம்பள வீதம்" என்ன என்று அறிவிக்கப்படவில்லை. வரி வசூல் வேலை கிராம அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் போவதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு ஒப்படைக்கப் பட்டால் கிராம அதிகாரிகளோ, பஞ்சாயத்துத் தலைவர்களோ பஞ்சாயத்து சம்பந்தமான பிற வேலைகளைக் கவனிக்க முடியாது. அதை விடப் பொது நிர்வாகத்துக்கென்று ஒரு தனிக் குமஸ்தா அமர்த்தப் படுவது நலம்—இவ்விஷயங்களில் அரசாங்கத்தின் நோக்கத்தையும் விளக்கத்தையும் அறிவிப்பீர்களா?

(எஸ். ராமசுந்தரம், துடியலூர் பஞ்சாயத்து)

பதில்: கிராம அபிவிருத்தித் துறையின் 1960-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை (644) யின்படி, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் சம்பந்தமான எல்லா வசூல் வேலைகளும் கிராமத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வசூல் வேலையை கிராமத் தலைவர்களிடம் ஒப்படைக்கும் விஷயத்தைப் பஞ்சாயத்துக்களின் விருப்பத்துக்கு விடவில்லை என்றாலும், பஞ்சாயத்து வளர்ச்சி சம்பந்தமான சில குறிப்பிட்ட கடமைகளைச் செய்வதற்காகக் கிராமக் கர்ணத்தைப் பஞ்சாயத்துச் செயலாளராக நியமித்துக் கொள்ளும் விஷயம் பஞ்சாயத்தின் விருப்பத்துக்கே விடப்பட்டுள்ளது. மேற் குறித்த ஆணையின் 20-வது பாராவில், வரி வசூலிப்போராகவும் அதே நேரத்தில் குமஸ்தாவாகவும் பணியாற்றுவோரைக் குறித்துக் கூறப்பட்டுள்ள விளக்கத்தைக் கவனிக்கவும்.

புதியதாக அத்தகைய "வரிவசூலிப்போர்—குமாஸ்தா" (Clerk-cum Bill collectors) இனி மேல் நியமிக்கப்பட மாட்டார் என்று அந்த விளக்கத்தில் கூறப் பட்டுள்ளது. ஏற்கெனவே அமர்த்தப்பட்டு அமுலில் இருக்கும் இடங்களில் தொடர்ந்து வைத்துக் கொள்வதா, வேண்டாமா என்பதை முடிவு செய்யும் விஷயம் சம்பந்தப் பட்ட பஞ்சாயத்துக்கே விடப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் குமாஸ்தாவின் வேலை, பஞ்சாயத்துச் செயலாளரின் வேலையின் (மேற்படி ஆணையின் 10-வது பாராவில் வரையறுத்துள்ளபடி) அளவேயாகும். எல்லா வசூல் வேலையும் கிராம அதிகாரிகளுக்கே மாற்றப்படும். மேற்படி ஆணையின்படி செயல்படத் தொடங்கினால் வரி வசூலிப்போர், கூட்டுக் குமாஸ்தா, முதலான வேலைகள் எடுக்கப்பட வேண்டியது தேவையாகிறது என்று மேற்படி சட்டத்தின் 21 பாராவில் கூறப்பட்டுள்ளது. அந்த வேலையிலிருந்தவர்களுக்கு, பஞ்சாயத்து யூனியன் அமைப்பில் சேவகர், அல்லதுகுமாஸ்தா (தகுதிக்கொப்ப) முதலான மாற்று வேலைகள் கொடுக்கப்படும். ஆகவே மேற்படி அரசாங்க ஆணையின் வரிவசூலிப்போர் —குமாஸ்தாக்கள் (Clerk-cum—Billcollector) எடுக்கப்படுகிறார்கள் என்ற பிரச்சினைக்கே இடம் இல்லை.மேற்குறித்த விதிகளுக்கு உட்பட்டு, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து, பஞ்சாயத்துச் செயலாளரின் கடமைகளை நிறைவேற்ற யாராவது ஒருவரை அமர்த்திக்கொள்ள உரிமை பெற்றிருக்கிறது.

சிறிய பஞ்சாயத்துக்களின் வரி வசூலிப்போர்குமாஸ்தா (Clerk-cum Bill Collector) சம்பள வீதத்தைத் திருத்தி அமைக்கும் விஷயம் ஆலோசிக்கப்பட்டு, [1960-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை (644)யை நோக்க] II-வது வகுப்பு (கிராமப் பஞ்சாயத்துக்கள்) ஊழியர்களின் சம்பள வீதம் திருத்தப்பட வேண்டிய தேவையில்லை என்று கருதப்பட்டது.

கேள்வி 3 (அ) எங்கள் ஊரில் கிராம முன்னேற்ற சங்கம் என்ற ஒரு சங்கம் ஏற்படுத்தி $1\frac{1}{2}$ ஆண்டு காலமாக நன்கு நடத்தி வருகிறோம். அச்சங்கம் ஜனங்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்யலாம்? அதன் நோக்கமும், சட்டதிட்டங்களும் எவ்வாறு அமைக்கப்படவேண்டும்?

(ஆ) அந்தச் சங்கம் பதிவு (Register) செய்யப்பட வேண்டுமா?

(K. சரவணன், ஆண்டிப்பட்டி)

பதில் (அ) கிராம வளர்ச்சித் திட்டங்களுக்கு கிராம மக்களின் ஒத்துழைப்பையும் சக்தியையும் திரட்டி, நல்ல முறையில் அவற்றைப் பயன்படுத்திக் கிராம முன்னேற்றத்துக்குப் பாடுபட, வட்டாரங்களின் ஒவ்வொரு ஊரிலும் இளைஞர்களுக்காக ஒரு "விவசாய இளைஞர்க் கழகமும்", பெரியோர்களுக்காக ஒரு "விவசாயிகள் மன்ற"மும் அமைக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட விவசாய இளைஞர் கழகங்களின் மூலமாகவே, கிராமங்களில் இளைஞர்களுடைய செயல் முறைகளும், பஞ்சாயத்துக்களுடன் அவர்கள் ஒத்துழைக்கும் தன்மையும் நிகழ முடியும். "விவசாய இளைஞர் கழகத்தின்" குறிக்கோள்கள் வருமாறு: —

(அ) சமுதாய உணர்வை உண்டாக்குவது; துரிதமாகப் பரவச் செய்வது.

(ஆ) ஒழுக்கத்தையும், உடல் நலத்தையும் வளரச் செய்வது.

(இ) ஒழுங்கையும், தமக்கு தாமே உதவி செய்து கொள்வதும், பிறருக்கு உதவும் மனப்பான்மையும் ஏற்படச் செய்வது.

(ஈ) விஞ்ஞான ரீதியான மனப்பான்மையை உண்டாக்குவது.

(உ) தலைமையேற்கும் தகுதியை வளர்ப்பது. கிராம இளைஞர்கள், சமுதாய வளர்ச்சி வேலை முறையின் கீழ் இவர்கள் கிராமத்தில் மேற்கொள்ளப்படும் பொது வேலைகளுக்கு "சிரமதானம்" அளித்துப் பெருமளவில் உதவுவதன் மூலம், அத்தகைய வேலைகளுக்கு தல நன்கொடையையும் பெருக்கலாம்.

ஒவ்வொரு கிராமத்திலும் பெரியவர்களுக்கு என்று தொடங்கப்படும் ""விவசாயிகள் மன்றம்", கீழ்க் கண்ட நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள என்று அமைக்கப்படுகிறது :—

(அ) கிராமத்தில் விவசாய சம்பந்தமான விஷயங்களையும், அதைப்போன்ற பிற விஷயங்களையும் பரப்புவதற்கான ஒரு வாயிலாகக் கருதப்படும்.

(ஆ) கிராமத்தின் விவசாய நலத்திறகென்று நடத்தப்படும் திட்டங்களைப் பற்றி இம் மன்றத்தினரைக் கலந்தாலோசிக்கப்படும்.

(இ) தனிப் பட்டவர்களுக்குக் கடன் கொடுக்கும் விஷயம், கால்வாய்ப் பாசன விஷயம் மற்ற கூட்டுறவு விஷயங்கள் ஆகியவைகளை, அவர் கலந்து, அவர்களுடைய ஆலோசனைகள் கேட்கப்படும்.

(ஈ) கிராமத்தில் உரப் பரிசோதனை முதலான பரிசோதனைகள் அல்லது காட்சிகள் இம்மன்றங்களின் மூலம் நிறைவேற்றப்படும்.

(உ) கிராம நிலையில், பொறுக்கு விதைகளைச் சுத்தப்படுத்துதல், முறையான வினியோகம் ஆகியவைகளைக் கவனிக்க அதிகார பூர்வமான நிறுவனமாக அவை கொள்ளப்படும்.

ஓராண்டு காலம் தொடர்ந்து திருப்திகரமாகப் பணி யாற்றிய பட்சத்தில், விவசாய இளைஞர் கழகம் ரூ. 100 தொகையைச் சேர்த்தால், மேலும் வட்டார நிதிகளிலிருந்து ரூ. 100-க்கு மேற்படாமல், மீளா மானியம் அந்தக்கழகத்திற்கு, கொடுக்கப் படும். அந்த மானியம் முக்கியமாகக் கருவிகள் வாங் கும் விஷயத்திலே பயன்படுத்தப்பட வேண்டும். கிராமங்களில் விவசாயிகள் மன்ற அமைப்புக்கென்று வட்டார நிதியிலிருந்து யாதொரு மானியமும் கொடுக்கப்படமாட்டாது.

விவசாய இளைஞர் கழகம், விவசாயிகள் மன்றம் ஆகிய இவை இரண்டு தவிர, வேறு நிறுவனங்கள் வட்டார வேலைத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட மாட்டா.

பதில்.—(ஆ). இந்த நிறுவனங்கள் பதிவு (register) செய்யப் பட வேண்டிய தேவையில்லை.

கேள்வி 4.—ஒரு ரிவின்யூ வட்டாரத்தில், ஒரு பஞ்சாயத் தின் கீழ் மூன்று கிராமங்கள் இயங்கி வந்தன. அப்போது ரேடியோ ஒன்று வாங்கத் தீர்மானிக்கப் பட்டு, வாங்கப்பட்டது. பின்னர் பஞ்சாயத்துக் கலைக் கப்பட்டுத் தனிப் பஞ்சாயத்துக்கள் (இரண்டு) ஏற்படுத்தப் பட்டன. ரேடியோ எஞ்சினியரிடமுள்ள இந்த ரேடியோ எந்தப் பஞ்சாயத்தைச் சேரும்? இந்த விஷயத்தை முடிவு செய்யும் அதிகாரம் மாவட்டக் கலெக்டர், ஸ்தலஸ்தாபன இன்ஸ்பெக்டர், டிவிஷனல் அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்—இவர் களில் யாருக்கு உண்டு? [பி. எம். அரங்கநாதன், பஞ்சாயத்துத் தலைவர், பரையந்தாங்கல், தென்னார்க் காடு மாவட்டம்.]

பதில்.—1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 3 (2) (எ) பிரிவின் கீழ் "மேற்பார்வை ளர்", கிராமம் அல்லது நகரத்தில் சேர்ந்திருக்கும் எந்தப்பகுதியையும், பிரிக்கப்பட்டபின் அந்தக் கிராமம் அல்லது நகரத்தின் ஜனத்தொகை ஐநூற்றுக்குக் குறையாமல் இருக்கும் பட்சத்தில், ஒரு அறிக்கை வெளியிடுவதன் மூலம், பிரிப்பதற்கு அதிகாரம் அளி க்கப்பட்டிருக்கிறார். மேலும், உட்பிரிவு (எ) யின் கீழ், பிரிக்கப்பட்ட அந்தப் பகுதியின் ஜனத்தொகை ஐநூறு பேருக்குக் குறையாமல் இருந்தபட்சத்தில், அதை ஒரு கிராமம் அல்லது நகரமாகத துணைப்பிரிவு (1)-ன் கீழ் அறிக்கை வெளியிட்டு அறிவிப்பார். அந்தப் பகுதியின ஜனத்தொகை ஐநூறு பேருக்குக் குறைந்திருக்கும் பட்சத்தில், அதைப் பக்கத்து கிராமம் அல்லது நகரத்துடன் சேர்த்து அறிவிப்பார். சட்டத் தின் பிரிவு 3 (1)-ன் கீழ்ப் பஞ்சாயத்துக் கிராமம் அல்லது பஞ்சாயத்து நகரம் என்று அறிவிக்கப் பட்டதைத் திருத்தவோ நீக்கவோ மேற்பார்வையா ளர் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறார். (சட்டத்தின் 3 (2) (சி) (ii) பிரிவைக் காண்க).

மேற்குறிப்பிட்ட பிரிவின் கீழ், கிராம அபிவிருத்திக் கமிஷனர், "மேற்பார்வையாளரின்" (Inspector) கடமைகளையும் அதிகாரங்களையும் நிறைவேற்ற அமர்த்தப்பட்டிருக்கிறார்.

மேற்படி பஞ்சாயத்துக்கள் சட்டம் துணைப் பிரிவு (4)-ன் கீழ் மேற்பார்வையாளர், அதனுடைய எல்லையில் ஏதாவதொரு பகுதி பிரிக்கப்பட்ட பஞ்சாயத்திடம் இருக்கும், எந்தப் பகுதி சொத்துக்களையும் விற்க அல்லது வேறு ஏற்பாடு செய்யத்தக்கது என்று கருதி னால், அவர் அது சம்பந்தமாக உத்தரவு பிறப்பிக்க லாம். அத்தகைய சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விஷ யத்தில், பஞ்சாயத்துக்கள் கொடுக்கவேண்டும் என்ற நிலையை நீக்கியும் அவர் உத்தரவு பிறப்பிக்கலாம்.

"மேற்பார்வையாள"ரின் கடமைகளையும் அதிகாரங்களை யும் நிறைவேற்ற, சட்டத்தின் 3 (4) பிரிவின் கீழ் மாவட்டக் கலெக்டர்களும், அமர்த்தப்பட்டிருப்பதால், கலெக்டர் சம்பந்தப்பட்ட ரேடியோ எந்தப் பஞ்சாயத் துக்குச் சேரவேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும்.

உதகையில் நடைபெற்ற கலெக்டர்கள் மகாநாடு:

"சேவை உணர்வுடன், உற்சாகத்தோடு மக்களுக்குப் பணியாற்றுங்கள்"

(கலெக்டர்கள் மகாநாட்டில் முதல் அமைச்சரின் வேண்டுகோள்)

"மக்களிடம் நெருங்கிப் பழகுங்கள். நேரடித்தொடர்பு கொள்ளுங்கள். அவர்கள் உங்களிடம் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கவனமாகக் கேளுங்கள். அவர்களுடைய ஆசைகளை, அபிலாஷைகளை மதித்து, எவ்வளவு தூரம் உங்களால் மக்களுக்குச் சேவை செய்ய முடியுமோ அதைச் செய்யுங்கள். மக்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு, பிரச்னைகளை அனுதாப உணர்ச்சியுடன் பரிசீலனை செய்து, ஆவன புரியுங்கள். மக்களுக்குச் செய்கிற தொண்டு எல்லாத் தொண்டுகளைவிட சாலச்சிறந்தது, தனிப்பெருமை பெற்றது" என்று தமிழ் நாட்டின் முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்கள், 11–5–61 முதல் 16–5–61 வரை உதகமண்டலத்தில் நடைபெற்ற தமிழ் நாடு மாவட்டக் கலெக்டர்கள் மகாநாட்டில் பேசும்பொழுது, மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார்.

கலெக்டர்கள் மகாநாடு, மே மாத மத்தியில், ஐந்து நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. பல முக்கியமான பிரச்சினைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த மகாநாட்டு விவாதத்தில் தமிழ் நாடு அரசாங்கப் பிரதம காரியதரிசி ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்., ரெவின்யூ போர்டு அங்கத்தினர்கள், அரசாங்கத்தின் பல்வேறு துறைகளின் செயலாளர்கள், அரசாங்கத்துறைகளின் தலைமை அதிகாரிகள், மாவட்டக் கலெக்டர்கள் முதலியோர் கலந்து கொண்டனர். 11–5–61 அன்று மாநிலக் கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி அவர்கள், மகாநாட்டினைத் துவக்கி வைத்தார்.

முக்கிய பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன

மகாநாடு, பல முக்கிய பிரச்சனைகளை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டது. பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் முதல் தொகுதியாக 75 மன்றங்கள் 2–10–60 முதல். செயல்படத்தொடங்கி, வேலை செய்து வருகின்றன. பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் அமைக்கப்பட்டிருப்பதினால் ஏற்பட்டிருக்கும் புதிய பொறுப்புகள், அவை எப்படிச் சமாளிக்கப்பட்டிருக்கின்றன, மேலும் எப்படிச் சமாளிக்கப்பட வேண்டுமென்பது பற்றியெல்லாம், மகாநாடு விரிவான முறையில் விவாதித்தது. இது வரையில் புதிய பொறுப்புக்களை, நல்ல முறையில் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் செயல் படுத்தி வருகின்றன என்றும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட நிறைவேற்ற வேலையில், தங்களுக்குள்ள பெரும் பங்கினை அவை நன்றாக உணர்ந்து கொண்டு, சீரிய முறையில் செயலாற்றி வருகின்றன என்றும், பொதுவாக மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது.

உண்மையான மக்களாட்சியின் தத்துவம்

உண்மையான ஜனநாயக ஆட்சியென்றால். அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து கிடக்கக்கூடாது; அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். அதிகாரம் பரவலான முறையில் இருக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவைகளிடம் அதிகாரத்தை அரசாங்கம் ஒப்படைத்தது, நிர்வாக வரலாற்றிலேகுறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் ஏற்படுத்தியதன் மூலம் முழுமையான ஜனநாயகப் பாதையில் தமிழ்நாடு செல்லத் தொடங்கியுள்ளது என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

மற்றும், ஒழுங்கு, சட்டம், அமைதி, குடும்பக் கட்டுப்பாடு, போன்ற எல்லா விஷயங்களும் விவாதிக்கப்பட்டன. 1962-ல் வரும் பொதுத் தேர்தலில், நேர்மையான முறையில் தேர்தல் நடை பெறுவதற்கான நடவடிக்கைகள் பற்றியும், மகாநாட்டில் விவாதிக்கப்பட்ட நிர்வாக பிரச்னைகளைப் பற்றிய அனுபவங்களும் இம் மாநாட்டில் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

மத்திய அரசாங்க நிதி அமைச்சர், ஸ்ரீ மொரார்ஜி தேசாய் 17–5–61ல் அம் மகாநாட்டில் பேசினார். நமது முதல் அமைச்சர் அவர்களை பாரத நிதி அமைச்சர் மனமாரப் பாராட்டி விட்டு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வேலையில் தமிழ் நாடு சீரிய முறையில் பணியாற்றி, ஓங்கு புகழ் எய்தும் என்ற நம்பிக்கையை அவர் தெரிவித்துக்கொண்டார்.

முதல் அமைச்சரின் கருத்தாழ மிக்க பேச்சு

15–5–61 அன்று, முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் மகாநாட்டில் பேசினார்கள். அவருடைய பேச்சு ரத்தினச் சுருக்கமாகவும் கருத்துத் தெளிவுடனும் அமைந்திருந்தது. "புதிய நிர்வாக அமைப்பினையும், மக்களின் இதயத் துடிப்பினையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் புரிந்து கொண்டு, செயலாற்ற வேண்டும். அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து கிடக்கக்கூடாது. அது பரவலான முறையில் அமைய வேண்டும். அதுதான் உண்மையான ஜனநாயகத்தின் தத்துவம் என்பதை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளோம். அந்த லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றத் தொடங்கியுள்ளோம். இந்தப் பணியினை யார் ஏற்றுக் கொண்டுள்ளார்களோ, அவர்களுக்கு அந்த லட்சியத்திலே அசைக்க முடியாத நம்பிக்கையும், உணர்வும், உற்சாகமும் இருக்க வேண்டும். இல்லையென்றால், நாம் எடுத்துள்ள காரியம் சீரிய முறையில் நிறைவேறுவதென்பது சிரமமாகி விடும். அன்றாடம் நிர்வாக வேலையிலே ஈடுபட்டுள்ள யாவரும், இதைத் தெளிவாக மனத்தில் கொள்ள வேண்டும். திட்டம் தீட்டுவது பெரிதல்ல. அதைச் செயல் முறையிலே நடத்துவது தான் பெரிய காரியம். அதற்கான இலட்சியப் பிடிப்பினை அதிகாரிகள் கைக்கொள்ள வேண்டும். காரியம் வெற்றிபெற பிரச்னைகளைப் புரிந்து கொண்டு, உற்சாகத்துடனும், அதே சமயத்தில், கனிவுடனும் பாடுபடுவது மிகவும் அவசியமாகும்" என்று, முதல் அமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழ் நாடு அரசாங்கப் பிரதமக் காரியதரிசி ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்., நன்றி கூறினார். நன்றி கூறுமுகத்தான் அவர் பேசிய பேச்சு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைத் திட்டத்தில், நம்முடைய பங்கை நல்ல முறையில் நிறை வேற்றியுள்ளோம் என்ற மன உணர்வுடனும், உற்சாகத்துடனும் செயலாற்ற வேண்டும் என்று அவர் எல்லா அதிகாரிகளையும் கேட்டுக்கொண்டார்.

"குடிமக்கள் சொன்னபடி குடி வாழ்வு"

சோஷியலிச சமுதாய அமைப்பும், பஞ்சாயத்தும்

[திரு அ. பெ. ஜெயராமன், பஞ்சாயத்து யூனியன் அலுவலர், மூசிறி.]

[அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து கிடக்காமல், உண்மையான மக்கள் பிரதிநிதிகளிடையே அது பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதுதான் ஜனநாயக ஆட்சியின் உண்மையான இலக்கணமாகும். அந்த லட்சியத்தை அடைவதற்குப் புதிய பஞ்சாயத்துச் சட்டம் எந்தெந்த வகையில் உறுதுணையாக அமைந்துள்ளது என்பதை விளக்க முயல்கிறது இக் கட்டுரை. —ஆசிரியர்.]

அன்னிய ஆதிக்கத்தினின்று விடுதலை பெற்ற பின் நம் நாடு முன்னேற்றமடைய, தமிழ் நாடு அரசாங்கம் அநேக சிறந்த சட்டங்களை இயற்றி வருவது நாம் அறிந்ததே. குறிப்பாகக் கிராமங்கள் முன்னேற்றமடைய, கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, நசிந்துபோன கிராமக் குடிசைத் தொழில்கள் புத்துயிர் பெற்று வளர, மக்கள் யாவரும் வயிறார உண்டு களிக்க கிராமத்திற்குத் தேவையானவைகள் அனைத்தையும் தாமே பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் ஒன்று, 1950 ஆண்டில் இயற்றப்பட்டது. அதன் மூலம் எதிர்பார்த்த பலனை அடைய முடியவில்லை. அதற்குக் காரணம் எதுவாக இருந்தாலும், இன்றுள்ள நிதி வசதி அன்று பஞ்சாயத்துக்களுக்கு இல்லாமல் இருந்தது உண்மை. ஆகவே ஒவ்வொரு கிராமமும், தன் சுய தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொள்ள எந்தெந்த வகையில் சட்டத்தைத் திருத்தினால், அதை அடைய முடியுமென்று ஆழ்ந்து சிந்தித்து, எல்லா அரசியல் கட்சியினரும் ஒரு மனதுடன் ஒப்புக்கொண்ட சட்டம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டது. அதுதான் 1958-ம் வருட தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டமாகும்.

சோஷியலிச சமுதாயம் அமைக்க...

நம் நாடு சோஷலிஸ சமுதாய அமைப்புக்கொண்டதாக இருக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் நம் அரசாங்கம் பணியாற்றி வருகின்றது. கிராம சுயாட்சியைப் பொறுத்த வரையில், 1958-ம் வருட தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் மூலம் இந்தக் கொள்கை அமுலாக்கப்படுகின்றது. அன்று குவியல் முறையிலிருந்த அதிகாரங்களை இன்று பரவல் முறையில் பகிர்ந்தளிக்க புதுப் பஞ்சாயத்துச் சட்டம் வகை செய்துள்ளது. அன்று 12 மாவட்டக் கழகங்கள் செய்துவந்த பணியை இன்று 375 பஞ்சாயத்து யூனியன் சபைகளிடம் ஒப்படைத்து, எல்லா அதிகாரங்களையும், பொறுப்புக்களையும், நல்ல முறையில் செயல்பட, வேண்டிய அளவு வருவாயையும் பெருக்கி, மக்களிடத்தில் பூரணமாக ஒப்படைத்து வருவது, நம் நாடு முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு ஓர் சிறந்த அறிகுறியாகும். வரும் 2-10-1961-ம் தேதியன்று இன்றுள்ள 12,000 பஞ்சாயத்துக்களிடமும் 375 பஞ்சாயத்து யூனியன் சபைகளிடமும் சகல அதிகாரங்களும் பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டுவிடும்.

இந்த 375 பஞ்சாயத்து யூனியன் தொகுதிகளும் பொருளாதாரத் துறையிலும், சமூகத் துறையிலும் ஒரே நிலையில் இருப்பதாகக் கருத முடியாது. ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியானது நில வளமும், நீர் வளமும் ஒருங்கே அமையப்பெற்ற பிரதேசமாக இருக்க முடியும். மற்றொரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதி மிக வரண்ட பிரதேசமாக இருக்கக் கூடும். ஒரு தொகுதியிலுள்ள மக்கள் பொதுவாக செல்வந்தர்களாக இருக்க முடியும். மற்றொரு தொகுதியில் வாழும் மக்கள் ஏழைகளாக இருக்கக் கூடும். ஒரு தொகுதியில் வாழும் குழந்தைகள் கல்வி வசதி பெற அனேக ஆரம்பப் பள்ளிகள் அமைக்கப்பட்டிருக்கும். மற்றொரு தொகுதியில் ஆரம்பப் பள்ளிகள் மிகக் குறைவாய் இருக்கக்கூடும். இவைகளைப் போன்ற அனேக ஏற்றத் தாழ்வுகளை நீக்க, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் சபையும் நல்ல முறையில் செயல்பட, தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் கீழ், அரசாங்கம் சிறந்த விதிகளை இயற்றி வருகின்றது. எல்லாருக்கும் ஒரே சீரான வசதிகள் ஏற்பட, சோஷியலிச சமுதாய அமைப்பைச் சட்ட ரீதியாக அமுலாக்க, 375 பஞ்சாயத்துயூனியன் சபைகளைப் பாகுபாடு செய்து, ஏ, பி, சி. டி. என நான்கு வகைகளாகப் பிரித்துள்ளார்கள். சோஷியலிச தத்துவத்தைச் சட்ட ரீதியாக அமுலாக்க இதுவே முதற்படியாகும்.

பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் பெறும் மானியங்கள்

இந்தப் பாகுபாட்டின் பயனாக, இம் மாநிலத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்து யூனியன் சபைகளும் சற்றேறக்குறைய ஒரே அளவு அரசாங்க மானியம் பெற வாய்ப்பு ஏற்படுகின்றது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 6 முதல் 11 வயது வந்த எல்லாக் குழந்தைகளுக்கும் 1 முதல் 5 வகுப்பு வரைக் கட்டாயமாகக் கல்வி வசதி அளிக்கப்பட வேண்டுமென்ற குறிக்கோளுடன் ஆரம்பப் பள்ளிகளை நடத்தும் பொறுப்பை பஞ்சாயத்து யூனியன் சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு நபருக்கு ஆண்டுக்கு ரூபாய் 3-50 செலவாகக் கூடுமெனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் சபைக்குப் பொது நிதி, கல்வி நிதியென இரு வகை நிதிகள் உண்டு. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் சபைக்கும் கல்விநிதிக்காக சட்ட ரீதியாக சில வருவாய்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவைகளில் முக்கியமானவை அந்தத் தொகுதியில் வசூலிக்கப்படும் பிரதேச வரியில் 20 நயா பைசா

வீதமும் அங்கு வாழும் மக்கள் தொகையில் அடிப்படையில் ஆள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் நில வரி ஒப்படைப்புத் தொகையும், பிரதேசக் கல்வி மானியத் தொகையும்,பஞ் சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து ஈடு செய்யப்படும் தொகையுமாகும். இதில் பிரதேசக் கல்வி மானியம் எந்த அளவு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் சபைக் கும் கொடுக்கப்படும் என்பதை அறிந்தால் சோஷிய லிசக் கொள்கை எந்த அளவு சட்ட ரீதியாக அமுலாக்கப் படுகிறதென்பது விளங்கும். இதில் ஒரு ரூபாய் நில வரி ஒப்படைப்பு மூலமாக, முதற்படியாக, ஒவ்வொரு பஞ் சாயத்து யூனியன் சபைக்கும் கொடுக்கப்படுகின்றது. பாக்கி நிற்கும் 250 நயா பைசாக்களில் வகுப்பு வாரியாகப் பிரிக் கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் சபைகளில் தரத்திற்கு ஏற்றவாறு 50 சத வீதத்திற்குக் குறையாமலும், 80 சத வீதத்திற்கு மேற்படாமலும் மானியத் தொகை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் சபைக்கும் கொடுக்கப்படும். அதா வது ஏ வகுப்பில் வரும் பஞ்சாயத்து யூனியன் சபைகள் 50 சத வீதமும், பி வகுப்பில் வரும் யூனியன் சபைகள் 60 சத வீதமும், சி வகுப்பில் வரும் யூனியன் சபைகள் 70 சத வீதமும், டி வகுப்பில் வரும் யூனியன் சபைகள் 80 சத வீதமும் பிரதேசக் கல்வி மானியமாகப் பெறும். இன்னும் சற்று விளக்கமாகக்கூறவேண்டுமெனில் ஏ வகுப்பில் வரும் யூனியன்களுக்கு ரூபாய் 1-25-ம், பி வகுப்பில் வரும் யூனியன்களுக்கு ரூபாய் 1-50-ம், சி வகுப்பில் வரும் யூனியன்களுக்கு ரூபாய் 1-75-ம், டி வகுப்பில் வரும் யூனியன்களுக்கு ரூபாய் 2-00-ம் பிரதேசக் கல்வி மானியமாக அரசாங்கம் கொடுக்கும்.

பிரதேச வரி சர்சார்ஜ்

அடுத்தபடியாக பஞ்சாயத்து யூனியன் சபைக்கு அளிக் கப்பட்ட வரி விதிக்கும் அதிகாரமானது பிரதேச வரி சர்சார்ஜ் ஆகும். இந்த சர்சார்ஜ் விதித்தால்தான் மூன் றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 6 வயது முதல் 11 வயதுவரை உள்ளஎல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி 1 முதல் 5 வகுப்புகள் வரை அளிக்க முடியும். இந்த சர்சார்ஜ் விதித்து வசூல் செய்யும் தொகைக்கு அரசாங்கம் நிர்ணயம் செய்யும் விகிதாசாரப்படி, ஈட்டு மானியம் ஒவ்வொரு யூனியன் சபைக்கும் அளிக்கப்படும். இதிலும் சோஷியலிசக் கொள்கை புகுத்தப்பட்டிருப்பது புலனாகும். நில வரி அதிகமாகக் கிடைக்கும் பஞ்சாயத்து யூனியன் தொகுதிகளில் சர்சார்ஜ் தொகை அதிகமாகக் கிடைக்கும். நில வரி குறைவாகக் கிடைக்கும் பஞ்சாயத்து யூனியன் தொகுதிகளில் அதே விகிதாசாரத்திற்குக் குறைந்த அளவு சர்சார்ஜ் தொகை கிடைக்கும். நில வரி சர்சார்ஜ் ஈட்டு மானியம் ஒரே அளவில் எல்லா அபிவிருத் தித் தொகுதிகளுக்கும் அரசாங்கம் அளிக்குமாயின் நில வரி குறைவாயுள்ள தொகுதிகளுக்கு வருவாய் அதிக மாகக் கிடைக்காது. ஆகவே 4 வகுப்புகளாக பாகுபாடு செய்த அடிப்படையில் அரசாங்கம் அளிக்கும் ஈட்டு மானிய மானது முறையே 75, 100, 125, 150 சத வீதத்தில் யூனி யன் சபைகள் பெறும். அதாவது பிரதேச வரி சர்சார்ஜ் வசூல் செய்யும் தொகையில் ஏ வகுப்பு பஞ்சாயத்து யூனியன் சபைகளுக்கு ¾ பங்கும், பி வகுப்பு யூனியன் சபைகளுக்கு சரிசமமான பங்கும், சி வகுப்பு யூனியன் சபைகளுக்கு 1¼ பங்கும், டி வகுப்பு யூனியன் சபை களுக்கு 1½ பங்கும், ஈட்டு மானியத் தொகை கிடைக்கும். இவ்வாறு மானியம் அளிப்பதால் எல்லா யூனியன் சபை களும் ஒரே சீரான வருவாய் பெற வசதி ஏற்படுகின்றது.

கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு வருவாய் ஆதாரங்கள்

இவ்வாறு பஞ்சாயத்து யூனியன் சபைகளுக்கு வருவாய் ஏற்படுத்தியதோடல்லாமல், கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் இதே முறை பின்பற்றப்பட்டிருக்கிறது. சாதாரண மாகக் கிராமப் பஞ்சாயத்துக்களில் முக்கிய வருவாய் நில செஸ் மூலமாகவும், வீட்டு வரி மூலமாகவும், கேளிக்கை வரி மூலமாகவும், சொத்து மாற்றங்களின் பேரில் விதிக் கும் தீர்வை மூலமாகவும், சந்தைகள் மூலமாகவும் கிடைக்கின்றது. பட்டணப் பஞ்சாயத்துகள் எப்படியும் தம் வருவாயைப் பெருக்கிக்கொள்ள முடியும். ஆனால் கிரா மப் பஞ்சாயத்துக்கள் அவ்வாறு வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடியாது. தவிர, கிராமப் பஞ்சாயத்துக்களி லும், ஏற்றத் தாழ்வுகள் அனேகமுண்டு. 500 மக்கள் கொண்ட பஞ்சாயத்து உண்டு; 5,000 மக்கள் கொண்ட பஞ்சாயத்துமுண்டு. நில வளமும், நீர் வளமும் நிறைந்த பஞ்சாயத்துண்டு; வரண்ட பிரதேசம் கொண்ட பஞ்சாயத்தும் உண்டு. தனவந்தர்கள் நிறைந்த பஞ் சாயத்துண்டு; ஏழைகள் மலிந்த பஞ்சாயத்தும் உண்டு. ஆகவே, இந்த ஏற்றத் தாழ்வை ஓரளவு நீக்க தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் வழி வகை செய்துள்ளது.

ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் முக்கிய வருவாய் வீட்டு வரி மூலம் கிடைக்கின்றது. இந்த வரி ஒன்றுதான் கிராமத்தில் வாழும் எல்லாக் குடும்பத்தினரும் கட்டாய மாகக் கொடுத்துதவும் வரியாகும். ஆகவே கிராமப் பஞ்சாயத்துக்களுக்கெல்லாம் ஒவ்வொரு அரை ஆண்டும் எவ்வளவு தொகை வீட்டு வரியின் மூலம் வசூல் செய்கின்றதோ அந்த அளவு ஒவ்வொரு அரை ஆண்டும் வீட்டு வரி ஈட்டு மானியம் வழங்கப்படுகின்றது.

இதுவரை மாவட்டக் கழகங்கள் நில செஸ் என்று ரூபாய்க்கு 2 அணா வீதம் வசூல் செய்து பஞ்சாயத்துக்கள் உள்ள பகுதிகளுக்கு அங்கு கிடைக்கும் செஸ் தொகையில் அரை அணா கொடுத்து வந்தது. இதைத் தவிர, கல்வி வரி என்றும், நில வரி சர்சார்ஜ் என்றும் விதித்து வசூ லித்து அந்தத் தொகை முழுவதும் மாவட்டக் கழகங்கள் அடைந்து வந்தன. இதன்படி, நில வளம், நீர் வளம் நிறைந்த பகுதியிலுள்ள பஞ்சாயத்துக்கள் நில செஸ் மூலம் அதிக வருவாய் பெற்று வந்தது. நில வரி குறைந்துள்ள பகுதியிலிருக்கும் பஞ்சாயத்துக்கள், நில செஸ் மூலம் மிக சொற்ப வருவாய் பெற்று வந்தது. 1958-ம் வருட பஞ்சாயத்துக்கள் சட்டப்படி. மேலே கண்ட

[28-ம் பக்கம் பார்க்க]

அளவுள்ள குடும்பம்:

குடும்பக் கட்டுப்பாடு

" கிராமவாசிகள் பலனடைய, பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் முயலவேண்டும் "

மூன்றாவது திட்டக் காலத்தில், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை, கிராமப்புறங்களில் பரப்பவும், அதைச் சீரிய முறையில் அமுல் நடத்தவும், தமிழ்நாடு அரசாங்கம் முடிவு செய்து, அதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் இறங்கியுள்ளது," என்று, சென்னை ரோடரி க்ளப்பின் (Rotary club) சார்பில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், "ஜனத்தொகை பிரச்னை" பற்றி பேசுகையில், தமிழ்நாடு அரசாங்கப் பிரதமக் காரியதரிசி **ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி ஐ.சி.எஸ்.** அவர்கள் கூறிப்பிட்டார்.

பஞ்சாயத்து ஸ்நாபனங்களின் பங்கு

"கிராமப் புறங்களில் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பரப்பும் வேலையானது கிராம வாழ்க்கையின் முதுகெலும்பாய்த் திகழும் பஞ்சாயத்துக்கள் மூலம், செய்யப்படும். கிராமப் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து நிறுவனங்கள் கிராமங்களின் பிரதிநிதித்துவம் பெற்று, பலம் வாய்ந்த சக்திகளாகும். கிராமங்களுடன் நேரடித் தொடர்பு கொண்டு, பிரச்னைகளைச் சமாளிப்பதில் பெரும் வாய்ப்பினை பெற்றிருக்கும் இந்த ஸ்தாபனங்களின் மூலம், இந்தத் திட்டம் சீரிய முறையில் நடைபெற, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வேலைத்திட்டம் நல்ல முறையில் நடைபெற்று, வெற்றியைத் தேடித்தரும் என்று அரசாங்கம் நம்புகிறது."

"நமது நாட்டில் ஜாதி, மத பேதமற்ற தூய்மையானஒரு சமுதாயத்தை நிறுவவும், மக்களின் பிரச்னைகளை நல்ல முறையில் சமாளித்து, மக்கள்நல ஆட்சியை நிறுவவும் பாடுபடுவதை தன்னுடைய லட்சியமாகக் கொண்டு அரசாங்கம் பணிபுரிந்து வருகிறது. மக்களின் பிரச்னைகளில் மிகப்பெரிய பிரச்னைகளில் ஒன்றான "ஜனத்தொகைப் பெருக்கத்தை"க் கட்டுப்படுத்தும்" முறையில், ஒரு திட்டத்தைத் தீட்டி, நடைமுறையில், நமது அரசாங்கம் செயலாற்றிவருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே, இது பற்றி நல்லதொரு முடிவுக்கு இந்தியா அரசாங்கம் வந்தது. இப்படிப்பட்ட ஒரு முடிவினை செய்ததின் நோக்கம் புனிதமானது. மக்கள் தொகையை ஒரே நிலையில் உள்ளதாகப் பார்த்துக் கொள்வதுதான் அந்த லட்சியமாகும். இது இயலவில்லையென்றால், குறைந்தபட்சமாக, மேலும் ஜனத்தொகை பெருகாமல் அதைக் குறைக்கப் பாடுபட வேண்டும் என்பதுதான், அந்த முடிவாகும். இந்த லட்சியத்தை எப்படிச் செயல் படுத்துவது என்பதைப் பற்றிய பரிசீலனை முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நடைபெற்றது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு அரசாங்கம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் துவக்கக் காலத்திலேயே, இது பற்றிச் செயல் புரியத் தொடங்கிவிட்டது. முதலில் மருத்துவச் சாலைகளிலும், சேய்நல நிலையங்களிலும், குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள வருபவர்களுக்கு, அறுவைச் சிகிச்சைசெய்து கொள்ள வசதிகள் செய்து தர வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த வேலை முதலில் சென்னை நகரத்திலும், மாவட்டத் தலைமை மருத்துவச் சாலைகளிலும் செயல்படத்தொடங்கியது.'

தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது

"இந்தத் துறையிலே, தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நல்ல வேலை நடைபெற்றிருக்கிறது என்பதைப் பெருமையுடன் சொல்ல முடியும். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றி மக்களிடையே நல்ல விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. கிராம மக்களும் இந்தத் துறையில் அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் பொழுது, உண்மையிலே நாம் மகிழ்ச்சி அடைகிறோம். ஜனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதில், கிராம மக்கள் காட்டும் ஆர்வம், மெள்ள மெள்ள வளர்ந்தோங்கி வருகிறது. கிராமப் பஞ்சாயத்துக்களிலும், மற்ற மாநாடுகளிலும், சாத்திரங்களிலும், கிராம மக்களும், கிராம மக்கள் பிரதிநிதிகளும் இந்த விஷயத்தில் காட்டும் அக்கறையும், ஆர்வமும் வரவேற்கத்தக்கதாகும். ஆகவே, மக்களின் இதயத்துடிப்பை அரசாங்கம் புரிந்து கொண்டு, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை கிராமப் புறங்களில் பரப்ப முன் வந்துள்ளது. இந்த வேலை பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மூலமாக நடைபெறும். ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள், ஒவ்வொரு வட்டாரத்திற்கும், 250 பேராவது அறுவை சிகிச்சை செய்துகொள்ள வேண்டும் என்ற இலக்கினை [Target] லட்சியமாகக் கொண்டுள்ளோம். அப்படியென்றால், ஒவ்வொரு கிராமத்திலும் இப்படி அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் என்று குறைந்தது இரண்டு அல்லது மூன்று பேர்களாவது இருப்பார்கள். இந்த நிலை உருவானால், இதனால் விளையும் பயன் மகத்தானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. கிராமத்தில் இரண்டு அல்லது மூன்று பேர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் இருப்பார்களேயானால், பின்பு நம்முடைய வேலை மிகவும் சுலபமாகி விடும் என்பது உறுதி. இந்த இயக்கத்தைப் பற்றி சிலபேரிடையே தவறாக நிலவியுள்ள அச்ச உணர்ச்சி ஒழிந்து விடும். அறுவைச் சிகிச்சை முறை, அபாயமில்லாதது, சுலபமானது, நல்லது என்ற உணர்வு கிராம மக்களிடையே தானாக ஏற்பட்டுவிடும். இந்தத் துறையில் மக்களின் பிரதிநிதியாக உள்ளவர்களை, பெரும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள முன் வந்துள்ள பஞ்சாயத்து ஸ்தாபனங்களும், மற்றவர்களும், பாடுபட்டு உழைக்கவேண்டும்."

[23—5—61-ல் சென்னை ரோட்டரி கிளப்பில் (Rotary Club) தமிழ்நாடு அரசாங்கப் பிரதமக் காரியதரிசி ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ். அவர்கள் பேசிய பேச்சின் சாரம்)

ஆதிவாசி மாணவர்களுக்குப் புதிய உணவு விடுதி (ஹாஸ்டல்)

சென்ற 14—5—61 நீலகிரியைச் சேர்ந்த குன்னூரில் ஸ்ரீ சத்குரு ராஜயோகாஸ்ரம ஆஸ்டலின் புதிய கட்டிடத்திற்கு முதலமைச்சர் திரு. கே. காமராஜ் அவர்கள் அஸ்திவாரக் கல் நாட்டினார்.

ஆரம்பத்தில் ஆதிவாசிகள் தங்கள் பண்டைய வாத்தியங்களுடன் முதலமைச்சரை எதிர்கொண்டழைத்தனர். விழாவிற்கு ராஜா சர் முத்தையா செட்டியார் தலைமை வகித்தார். ஆஸ்ரம நிர்வாகி ராமசாமி அடிகள் முதலமைச்சருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்து அளித்துவிட்டுப் பேசுகையில் மேற்படி ஆஸ்ரமம் ஆதிவாசிகளின் முன்னேற்றத்திற்காக சுமார் முப்பது ஆண்டுகளாக சேவை செய்து வருகிறது என்றும்; ஆதிவாசிகளின் குடும்பத்தைச் சேர்ந்த சுமார் 250 மாணவர்கள் அந்த ஆஸ்ரமத்தில் தங்கிக் கல்வி பயின்று வருகின்றனர் என்றும், அவர்களில் மிகவும் பிற்போக்கான சமூகத்தைச் சேர்ந்தவர்களும் உள்ளனர் என்றார்.

முதலமைச்சர் திரு. காமராஜ் பேசுகையில் ஆதிவாசிகளின் முன்னேற்றத்திற்காக ஸ்ரீ சத்குருராஜயோகாஸ்ரமம் செய்துவரும் சேவைகளைப் பாராட்டிவிட்டு, "நாமும் இந்நாட்டு ஆதிவாசிகள் தான், நாம் மற்ற பிரதேசங்களில் குடிபுகுந்து நமது வாழ்க்கைத் தரத்தை இடத்திற்குத் தக்கவாறு அமைத்துக் கொண்டு வாழ்கிறோம். ஆனால் இவர்கள் பழைய நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். வயதானவர்களைத் திருத்துதல் மிகவும் கஷ்டம் தான். அந்த வகுப்பைச் சேர்ந்த சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பது மூலம் நாளாவட்டத்தில் அவர்களை முன்னேற்றத்திற்குக் கொண்டு வர முடியும். கல்வி அளிப்பது கண் கொடுப்பதற்கு ஒப்பானது. அந்தப் புனித வேலையில் ஈடுபட்டிருக்கும் இந்த ஆஸ்ரமத்தாரையும், ராமசாமி அடிகளையும் நான் பாராட்டுகிறேன். அவர்கள் எந்த விதமான பிரதிபலனையும் எதிர்பாராமல் சேவை செய்து வருகின்றனர். இந்த மாதிரி சேவை செய்யும் ஸ்தாபனங்கள் நம் நாட்டிற்கு அதிகம் தேவை" என்றும் கூறினார்.



நீலகிரி மாவட்டக் கிராம முன்னேற்ற ஊழியர்கள் மாநாடு

தமிழ்நாடு கிராம முன்னேற்ற ஐக்கிய சங்கச் சார்பில், நீலகிரி மாவட்டக் கிராம முன்னேற்ற ஊழியர்கள் மாநாடு 14—5—61 அன்று குன்னூர் தாலுக்காவைச் சேர்ந்த காரக்கொரை கிராமத்தில் நடைபெற்றது. மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டனர்.

குன்னூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு பி. எம். ஜோகய்யா மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். சட்டசபை உறுப்பினர் திரு ஜெ. மாதா கவுடர் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் மாநாட்டை ஆரம்பித்து வைத்து அறிவுரை நிகழ்த்தினார். தமிழ்நாடு கிராம முன்னேற்ற ஐக்கிய சங்கத் தலைவர் திரு. கே. எஸ். சிவவடிவேலு உடையார், உபதலைவர் திரு. ராமசாமி அடிகள், திரு வெங்கட்ராமய்யர் மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர். ஸ்தல சங்க சார்பிலும் இதர ஸ்தாபனங்களின் சார்பிலும் அமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அமைச்சர் மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் நாட்டின் முன்னேற்றம் கிராமங்களைப் பொறுத்தேயுள்ளது என்றும், கிராம மக்களின், குறிப்பாக பிற்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக மகாத்மா காந்தி பாடுபட்டார் எனவும், அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கும் பிரதமர் நேரு அவர்களின் தலைமையில் நடக்கும் சர்க்கார், கிராம மக்களின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் பாடுபடுகின்றது என்றும், இப்போது அமுலில் வரும் பஞ்சாயத்து யூனியன்கள் துரிதமாக கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே என்றும், சர்க்கார் என்னதான் சட்டங்களை இயற்றினாலும், மக்களின் ஒத்துழைப்பு இருந்தால் தான் வெற்றிகரமாக அவற்றை நிறைவேற்ற இயலும் என்றும், அதற்கு இதுபோன்ற ஊழியர்கள் பெரும் பங்கு கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

[இந்திய சுதந்திரப் போராட்டத்தைப்பற்றி விளக்கமாகக் கூறி வந்த கட்டுரை ஆசிரியர், இந்த இதழில் மகாத்மா காந்தியடிகளின் நற்பண்புகளையும், சீரிய வாழ்க்கை நெறி முறையையும் பற்றி, அழகாக விளக்கியுள்ளார்கள். —ஆசிரியர்.]

காந்தியடிகள் கடைப்பிடித்த சில ஒழுங்கு முறைகள்

கிராமநலப் பணியில் ஈடுபட்டிருக்கிறவர்கள் காந்தியடிகளின் வாழ்க்கையிலிருந்தும் அவருடைய அன்றாடவேலைத் திட்டங்களிலிருந்தும் எத்தனையோ பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர் பொது நலப் பணியை, பொழுதுபோக்காகக் கொள்ளவில்லை; ஆயுட்காலப் பணியாகவே கொண்டார். மற்றும், பிறர் மீது இரக்கம் காட்டுகின்ற முறையிலோ, பிறர்க்கு நன்மை செய்யக்கூடிய அளவுக்குத் தம்மிடம் தகுதியும் சக்தியும் இருக்கின்றன என்ற தன்முனைப்பு உணர்ச்சியினால் உந்தப் பட்டோ, அவர் பொதுநலப்பணியில் இறங்கவில்லை. தன் நலத்தை மறந்து பிறர் நலத்திற்காக வாழ்கிறவனே முழு மனிதன் என்ற உண்மையை உணர்ந்திருந்ததனாலும், மக்களுக்குப் பணிபுரிய வேண்டுமென்ற கடமை யுணர்ச்சிக்கு ஆட்பட்டிருந்ததனாலுமே அவர் பொதுநலப் பணியில் இறங்கினார். இன்னும், பட்டம், பதவி, புகழ் இவற்றுள் ஏதோ ஒன்றை அடைவதற்கு, பொது நலப் பணியை ஒரு கருவியாக அவர் கருதவில்லை; மறந்தும் உபயோகிக்கவில்லை. "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற நாவுக்கரசரின் மணிவாக்குதான் அவருடைய வாழ்க்கையின் மூலமந்திரமாயிருந்தது.

கிராமநலத் தொண்டில் ஈடுபட்டிருக்கிற பலருக்கும் இப்படியெல்லாம் நடந்து கொள்வது சாத்தியமில்லாதிருக்கலாம்; காந்தியடிகள் அடைந்த உயர்ந்த நிலையை எட்டிப்பிடிக்க முடியாதிருக்கலாம். இதற்காக யாரும் சோர்வோ வருத்தமோ கொள்ளத் தேவையில்லை இந்த உயர்ந்த நிலையைத் தங்களுக்கு வழி காட்டும் விளக்காகக் கொண்டால் போதும்.

காந்தி வழி

கிராமநலத் தொண்டு செய்கிறவர்கள், காந்தியடிகளின் அன்றாட வாழ்க்கையிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டியவைகளை இங்கே வரிசைப்படுத்திக் காட்டுவோம்.

காந்தியடிகள், எந்த ஒரு சிறிய காரியத்தைச் செய்ய முற்பட்டாலும் அதில் தம் முழுக் கவனத்தையும் செலுத்துவார்; கண்ணொன்று காண, கருத்தொன்று நாட அவர் எதையும் செய்யமாட்டார். எடுத்த காரியம் முடிகிற வரையில், எந்த விதமான சுற்றுச்சார்பும் அவர் கவனத்தைத் திருப்பமுடியாது.

செய்யவேண்டிய காரியங்கள் எவ்வளவு அதிகமாயிருந்தாலும், எவ்வளவு பெரியவையாயிருந்தாலும் அவைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார். இதற்காக, தமது உணவையும் உறக்கத்தையும் சில சமயங்களில் துறந்து விடுவார். இன்று செய்யவேண்டிய காரியத்தை நாளைக்கு என்று அவர் ஒரு போதும் தள்ளிப் போட்டது கிடையாது.

சிறிய விஷயந்தானே என்று எதையும் அவர் அலட்சியம்செய்ய மாட்டார். இதே பிரகாரம், சிறிய மனிதன் தானே என்று யாரிடத்திலும் பாராமுகங்காட்ட மாட்டார். எந்த ஒரு சிறிய காரியத்திலும் ஒழுங்கைக் கடைபிடிக்க வேண்டுமென்பதே அவர் கொண்ட நியதி.

சுத்தத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்பதில் அவர் மிகவும் கண்டிப்பாயிருந்தார். எண்ணுகின்ற எண்ணம் முதல் உடுக்கின்ற உடை வரையில் எல்லாம் சுத்தமாயிருக்க வேண்டும் என்பதை, தம்மைச் சுற்றி யுள்ளவர்களுக்கு வலியுறுத்திச் சொல்வார். எதிலும் அரைகுறை யென்பது அவருக்குப் பிடிக்காது.

தலைவரென்று தமக்கு எந்தவிதமான சலுகையும் கோரமாட்டார். அப்படி யாராவது தமக்குச் சலுகை காட்டினால் அதைக் கண்டிப்பாக நிராகரித்து விடுவார்; காட்டியவர்களை, இனிய மொழிகளால் கண்டிக்கவும் செய்வார். சபர்மதியிலாகட்டும், சேவாகிராமத்திலாகட்டும், வேறெங்காகட்டும், மற்றவர்களுக்கு என்ன விதிகள் உண்டோ, என்ன கட்டுப்பாடுகள் உண்டோ அவைகளுக் கெல்லாம் தாம் உட்பட்டே நடப்பார்.

தாம் செய்ய வேண்டிய காரியத்தைத் தாமே செய்வார்; பிறரை ஏவமாட்டார். தமக்கு வரும் கடிதங்களுக்குத் தம் கையாலேயே பதில் எழுதுவதில் தான் அவர் திருப்தி கண்டார். ஒரு கை வலித்தால் மற்றொ

கையால் எழுதுவார். எழுதுவதற்காக, மேஜை நாற்காலி முதலிய சௌகரியங்களை நாடமாட்டார். ஊற்றுப்பேனாவைக் கூட அவர் அதிகமாக உபயோகித்ததில்லை. தாம் எழுதும் பதில் கடிதங்களை, மறு முறை படித்துப்பார்த்து விட்டுத்தான் அனுப்புவார். உறையுள்போட்டு அனுப்ப வேண்டிய கடிதங்களாயிருந்தால் , உறை பசையினால் நன்றாக ஒட்டப்பட்டிருக்கிறதா, சரியான கணக்குக்குத் தபால் தலைகள் ஒட்டப்பட்டிருக்கின்றனவா என்றெல்லாம் பார்த்து விட்டு, பிறகுதான் தபால் நிலையத்திற்கு அனுப்பச் செய்வார்.

ஒரு சிறிய காகிதத்தைக் கூட வீணாக்கமாட்டார். தமக்கு வரும் கடிதங்களில் எழுதப் பெறாத பகுதியை கிழித்தெடுத்துக்கொண்டு, அதில் தாம் எழுத வேண்டியதை எழுதுவார். அப்படியே கடித உறைகளைப் பிரித்து அவற்றின் உட்புறத்தில் எழுதுவார். அவருடையகருத்துச் செறிந்த கட்டுரைகள், அவர் சம்பந்தப்பட்டிருந்த ஸ்தாபனங்களைப் பற்றிய தீர்மானங்கள், இப்படிப் பலவும் இந்த மாதிரியான துண்டுக் காகிதங்களில் எழுதப்பட்டவையேயாகும்.

குறித்த நேரத்தில் குறித்த காரியத்தைச்செய்ய அவர், தம்மை மறந்தும் தவறியதில்லை. தம்மைப் போலவே மற்றவர்களும் செய்யவேண்டுமென்று எதிர்பார்ப்பார்; செய்யாவிட்டால் கண்டிப்பார். காடோ, மேடோ, குளிரோ பனியோ, எந்த இடத்திலிருந்தாலும் சரி, எந்தக்காலத்திலும் சரி விடியற்காலை பிரார்த்தனை செய்யவும், ராட்டையில் நூற்கவும் அவர் தவறியதேயில்லை.

சொன்னபடி செய்யவேண்டுமென்பதில் அவர் மிகவும் கண்டிப்பாயிருந்தார். சொன்னபடி செய்யாதவர்கள், தங்களால் செய்து காட்ட முடியாத ஒன்றைப்பற்றி நீளம் நீளமாக பேசுகிறவர்கள் இவ்விரு வகையினரும் அவரிடமிருந்து லேசிலே தப்பிவிட முடியாது. வாய்ப் பந்தல் வேய்ந்து அதில் அவரை அமர்த்திப்பார்க்க முயன்றவர்கள் அத்தனை பேரும் தோல்வியே கண்டிருக்கிறார்கள்.

சொல்லும் செயலும்

சொன்னபடி செய்யவேண்டுமென்பதில் அவர் காட்டிய கண்டிப்புக்கு ஒரே ஓர் உதாரணம் :

1917-ம் வருடம் பீகார் மாகாணத்தைச் சேர்ந்த சம்பாரனுக்கு, அதன் சுற்றுப்பகுதிகளில் வேலை செய்யும் அவுரித்தோட்ட விவசாயிகளின் அவல நிலைமையைப் பற்றி விசாரித்தறிய காந்தியடிகள் சென்றிருந்தார். இந்தக் காலத்தில்தான் அவருக்கும் பாபு ராஜேந்திர பிரசத்துக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ஒரு நண்பருடைய வீட்டில் தங்கி, காந்தியடிகளும் அவர் சகாக்களும் விசாரணை நடத்திக் கொண்டிருந்தனர். விசாரணையில் கலந்து கொள்ள தினந்தோறும் விவசாயிகள் வருவதும் போவதுமாயிருந்தனர். இதனால், அந்த வீட்டிலுள்ளவர்கள் சங்கடப்படுவதாக ஒரு நாள் காந்தியடிகள் உணர்ந்தார். ஏனவே, அருகிலுள்ள ஒரு பெரிய வீட்டைப் பிடித்து அதற்கு அன்றிரவே தம் சகாக்களுடன் குடி போய்விட வேண்டுமென்று தீர்மானித்து, தமது சகாக்களுக்கும் இந்தத் தீர்மானத்தைத் தெரிவித்தார். சகாக்களும் இதற்கு ஒப்புக்கொண்டு, மாலையே அந்த வீட்டை சுத்தம் செய்வதற்கு ஏற்பாடு செய்வதாகவும், இரவு அங்கு படுக்கைக்குப் போய்விடலாமென்றும் சொன்னார்கள். காந்தியடிகளும், "அதுவே சரி" யென்று சொல்லிவிட்டு, தம் அலுவல்களைக் கவனிக்கச் சென்றார். சகாக்கள் சொன்னபடி, மாலைக்குள் வீடு சுத்தம் செய்யப்பட்டுவிட்டது ஆனால் இருந்த வீட்டில் விசாரணை முடிய நேரமாகி விட்டது. இருட்டும் வந்து விட்டது. "இந்த நேரத்தில் அந்த வீட்டுக்குப் போவானேன்? மறு நாள் காலை போவோம்" என்று சகாக்கள், இருந்த வீட்டிலேயே இருந்து விட்டார்கள். இரவு எட்டு மணிக்கு மேல் காந்தியடிகள் வந்தார்; "வேறு வீட்டுக்குப்போவது எப்பொழுது" என்று கேட்டார். "நாளை காலை போகலாமென்றிருக்கிறோம்" என்று சகாக்கள் சாவதானமாகப் பதில் சொன்னார்கள். இதற்கு மகாத்மா, "இப்படிச் சொல்வது சரியன்று, ஒரு காரியத்தைச் செய்வதென்று முடிவுசெய்து விட்டால், அதனபடியே நடந்து தீரவேண்டும் அதிலிருந்து மாறவே கூடாது. குடிபோகும் வீட்டைச் சுத்தம் செய்யவேண்டுமேயென்று யோசிக்கிறீர்களா? நாம் தங்கும் வீட்டை நம் கையாலேயே சுத்தம் செய்துகொண்டால் போகிறது. அதில் என்ன கௌரவக்குறைவு இருக்கிறது?" என்று பதில் சொல்லிவிட்டு, தமது படுக்கையும் துணிமணிகளும் அடங்கிய ஒரு சிறிய மூட்டையை ஒரு கையிலும் தம் உணவுப் பொருள்களான பேரீச்சம்பழமும் நிலக்கடலையும் அடங்கிய சிறிய தகரடப்பாவை மற்றொரு கையிலுமாக எடுத்துக்கொண்டு, "நான இன்றிரவு அந்த வீட்டில்தான் படுக்கப்போகிறேன்" என்று சொல்லிய வண்ணம் அந்த வீட்டுக்கு வேகமாகச் சென்றுவிட்டார், கூட இருந்தவர்கள் அப்படியே திகைத்துப் போனார்கள். பிறகு சமாளித்துக்கொண்டு, அன்றிரவுக்கு மட்டும் தேவையான படுக்கை முதலிய வற்றுடன், மகாத்மாவைப் பின்பற்றி அந்த வீட்டுக்குச் சென்றார்கள். அங்குச் சென்றதும் மகாத்மா சும்மா இருக்கவில்லை ஒரு மூலையில் கிடந்த துடைப்பமொன்றை எடுத்துப் பெருக்கத்தொடங்கினார். சென்றவர்கள் பார்த்துக்கொண்டிருப்பார்களா? அவர் கையிலிருந்து துடைப்பத்தை வாங்கி, வீடு முழுவதும் பெருக்கிவிட்டு, பிறகு தங்கள் தங்கள் படுக்கைகளை விரித்துக் கொண்டார்கள்.

பொது நல விவகாரங்களில் காந்தியடிகள் மிகவும் கண்டிப்புக் காட்டிவந்தார். பொது நலத்திற்காக அவரைப்போல் யாரும் நயமான முறையில் பணந்திரட்ட முடியாது. அதுபோலவே, பொதுப்பணத்தைச் செலவழிக்கிற விஷயத்தில் அவரைப்போல் யாரும் சிக்கனம் பிடிக்க முடியாது. வரவு செலவுக் கணக்குகள் ஒழுங்காக இருக்க வேண்டுமென்பதில் அதிகக்கவனம் செலுத்துவார்;

[27-ம் பக்கம் பார்க்க]

சென்னைக்கு அருகில் ஒரு நட்பு உறவு சாலை

சென்னைக்கு அருகேயுள்ள ஒரு கிராமத்துக்கும் தேசிய நெடுஞ்சாலைக்கும் இடையே சாலை இல்லா திருந்தது. அரை மைல் தூரம் சாலை அமைத்துவிட்டால் கிராமத்தை நெடுஞ்சாலையோடு இணைத்து விடலாம். எனவே, அரை மைல் சாலை போட்டு முடித்தார்கள். இது ஒரு முக்கிய நிகழ்ச்சியாகத் தோன்ருது. எனினும்' இது போடப்பட்ட வரலாறு மனங் கவரும் ஒரு கதை : சர்வதேச நட்பாலும், உள்ளூர் மக்கள் முயற்சியாலும் நடைபெற்ற நிகழ்ச்சி இது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச நட்பையும், உள்ளூரார் உழைப்பையும் பயன் படுத்தி, சாலை அமைப்பதில் வெற்றி கண்டவர் டாக்டர் பாளையம் பி. பாலசுந்தரம் என்பவர். அவர் சென்னையி லிருந்து சுமார் 26-வது மைலிலுள்ள ராமாபுரம் என் னும் கிராமத்தைச் சேர்ந்தவர். திருவள்ளூர் சாலையை யும் ராமாபுரத்தையும் புதிய சாலை இணைக்கிறது.

அமெரிக்காவில் நடந்ததும்..

டாக்டர் பாலசுந்தரம் கல்விப் பயிற்சிக்காகப் பல தடவை அமெரிக்கா சென்றிக்கிருர். சென்ற ஆண்டு அவர் அங்கு சென்றிருந்தபோது மாஸசூஸட்ஸிலுள்ள பாஸ்டன் நகரில் யூனிவர்ஸலிஸ்ட் தொண்டுக் குழுத் தலைவரைக் கண்டு பேசினர். இந்தியாவுக்குத் திரும்பியபின் கிராமங் களின் பொருளாதார வளர்ச்சிக்காக, தொண்டரின் செயல் குழுக்கள் அமைக்கத் தாம் விரும்புவதாக டாக்டர் பால சுந்தரம் தெரிவித்தார்.

அதன் விளைவாக, பாஸ்டன் குழு "இந்தியாவுக்கு யூனிவர்ஸலிஸ்ட் நட்புத் திட்டம்" என்னும் தலைப்பில் அழகிய சிறு நூல் ஒன்றை வெளியிட்டது. அமெரிக்காவி லுள்ள ஓய்வுநாள் பள்ளிச் சிறுவர் சிறுமியருக்கு அது அனுப்பப்பட்டது. ராமாபுரத்துக்கு மிகவும் தேவையாக உள்ள சாலை அமைக்கவும், அந்த கிராமத்தில் ஒரு கிராமச் செயல் நிலையம் நிறுவவும், நிதி உதவ இரண்டொரு திட்டங்கள் நடத்துவதற்கு அதில் யோசனைகள் கூறப் பட்டிருந்தன. இந்தியாவையும் அதன் பிரச்னைகளையும் நன்கு உணர்ந்து கொள்வதே மேற்கண்ட செயல் திட்டங் களின் இறுதி நோக்கம்.

புதிய கருத்து அமெரிக்கா முழுவதுமுள்ள இளைஞர் மனத்தைக் கவர்ந்தது. சிலர் ஓர் இந்திய நாடகம் நடித்தினர் ; வேறு சிலர் இந்திய உணவளிக்கும் விருந்து ஒன்று நடத்தினர். வீட்டிலும், வெளியிலும் இத் திட்டத்துக்காகப் பலர் தனித்தனியே சிறிது சிறிதாக நிதி திரட்டினர்.

சென்னையில் நடந்ததும்..

இவ்வளவும் அமெரிக்காவில் நடந்த கதை. சென் னைக்கு அருகேயுள்ள கிராமத்தில் இந்த ஆண்டுத் தொடக் கத்தில் நடந்தவற்றை இனிக் கூற வேண்டும். டாக்டர் பாலசுந்தரம் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். ராமா புரத்து மக்களிடம் அவர் தமது திட்டத்தை எடுத்துரைத் தார். மக்களுக்கு ஊக்கம் பிறந்தது. அரசாங்க அதி காரிகளும், வளர்ச்சித் திட்ட அதிகாரிகளும் இதற்குத் துணை செய்ய முன் வந்தார்கள்.

சாலை போடும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. முதல் நாள் வேலை முக்கியமானது. உடல் உரமுள்ள ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் அனைவரும் அன்று வேலை செய் தனர். வளர்ச்சித் திட்ட அலுவல் பார்ப்போர் எல் லாரும் வேலையில் ஈடுபட்டனர். காலை முதல் நாள் முழுவதும் அவர்கள் வேலை செய்தார்கள். அடுத்த பத்து நாட்கள் கிராம மக்கள் சம்பளம் பெற்று, சாலை போடும் வேலை செய்தார்கள்.

பிப்ரவரி 27-ம் தேதி ஒரு முக்கியமான நாள், அன்று சென்னை அமைச்சர் திரு. பக்தவத்சலம் முறைப்படி சாலையைத் திறந்து வைத்தார்; பொருளாதார வளர்ச்சிக்கான கிராமச் செயல் நிலைய அலுவலகத்துக்கு அவர் அடிக்கல் நாட்டினார். ராமாபுரத்தின் தெரு விளக்குகளையும் அவர் ஏற்றிவைத்தார். ராமாபுரத்து மக்களின் உதவியால் 24 மணி நேரத்துக்குள் மின்விசைக் கழகம் அங்கு விளக்குகள் போட்டு முடித்தது.

அருகேயுள்ள கிராம மக்களுக்கு ஊக்கமூட்டுகிறது ராமாபுரம் சாலை. இத்தகைய திட்டங்களுக்கு உள்ளூர் மக்களின் உழைப்பைப் பெற செயல் நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

பரிசுப் பத்திரக் குலுக்கல்

பரிசுப் பத்திரக் குலுக்கல் சென்னையில் 1961-ம் வருடம் ஜுன் மாதம் 1-ம் தேதி, ராஜாஜி ஹால் கோகலே ஹால், செயின்ட் மேரீஸ் ஹால், மெமோரியல் ஹால், பாலர் அரங்கம் ஆகிய ஐந்து இடங்களிலும் நடைபெற்றது. நூறு ரூபாய் பத்திரங்களில், எல், ஆர், டி, டபுள்யூ ஆகிய தொடர்களும், ஐந்து ரூபாய் பத்திரங்களில் எவி; எடபுள்யூ; எஎக்ஸ்; எஓய்; எஇசட் ஆகிய தொடர்களும் குலுக்கியெடுக்கப்பட்டன. ஐந்து ரூபாய் பத்திரத் தொடர்களில் எவி கோயம்புத்தூர் மாவட்டத்துக்கும்; எடபுள்யு மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களுக்கும்; எஎக்ஸ் திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களுக்கும்; எஓய் தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு மாவட்டங்களுக்கும்; எஇசட், சேலம், செங்கற்பட்டு, நீலகிரி மாவட்டங்களுக்கும்; பொதுவாக விற்பனைக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தொடரிலும் முதற் பரிசும், இரண்டாவது பரிசும் பெற்ற எண்கள், அன்று மாலை அகில இந்திய வானொலியில் அறிவிக்கப்பட்டன. குலுக்கல்களின் முடிவுகளை ஜுன் மாதம் 1, 2-ம் தேதிகளில், கிராம நிகழ்ச்சியில் அகில இந்திய வானொலி விசேஷமாக ஒலிபரப்பியது.

பரிசு பெற்ற எண்விவரங்களை "கிராமநலம்" மூலமாகத் தெரிவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழ்நாட்டில், அநேகமாக எல்லாக் கிராமங்களுக்கும் செல்கின்றது "கிராமநலம்". ஆகவே, இப்படிப்பட்ட ஏற்பாடு, கிராமவாசிகளுக்குப் பயனாக இருக்கும் என நம்புகிறோம்.

"வாழ்வு பிறந்ததடி"

— கவிஞர் பாரதிமோகன் —

வாழ்வு பிறந்ததடி தங்கமே தங்கம்
வந்ததடி பஞ்சாயத்து தங்கமே தங்கம்

தாழ்வெல்லாம் பறந்ததடி தங்கமே தங்கம்
தமிழ் நாட்டுக் கிராம நலம் தங்கமே தங்கம்

பல் ஆயிரம் கிராமங்களில் தங்கமே தங்கம்
பண்புடனே முன்னேற்றம் தங்கமே தங்கம்

நலங்கள் பல உண்டாச்சு தங்கமே தங்கம்
நாட்டிவிட்டார் கிராம ராஜ்யம் தங்கமே தங்கம்

ஒன்றுபட்டால் வாழ்வினிலே தங்கமே தங்கம்
உண்டாகும் நன்மை பல தங்கமே தங்கம்

என்றும் இனி மக்களெல்லாம் தங்கமே தங்கம்
இன்பமுடன் வாழ்வாரடி தங்கமே தங்கம்

தமிழ்நாட்டு அரசாங்கம் தங்கமே தங்கம்
தகுந்த நன்மை செய்யுதடி தங்கமே தங்கம்

நமது மக்கள் கிராமத்திலே தங்கமே தங்கம்
நல்ல பலன் அடைவாரடி தங்கமே தங்கம்

காந்தி அடிகள் கண்ட கனவு தங்கமே தங்கம்
கண் முன்னே நடக்குதடி தங்கமே தங்கம்

பாந்தமுடன் பாரதமும் தங்கமே தங்கம்
பாருக்கெல்லாம் வழிகாட்டும் தங்கமே தங்கம்

மக்கள்சர்க்கார் திட்டத்தாலே தங்கமே தங்கம்
மாபெரும் நன்மை விளையும் தங்கமே தங்கம்

பூமகளும் திருமகளும் தங்கமே தங்கம்
புன்மையெல்லாம் போக்குகின்றார் தங்கமே
தங்கம்.

[6-ம் பக்கம் தொடர்ச்சி]

செய்யப்படும் கல்லுப்பட்டி "மகன்சுலா" அடுப்புகள் தனிப் பெருமை வாய்ந்தவை. இந்த "மகன்சுலா" அடுப்பை இப்பொழுது மக்கள் மெள்ள மெள்ள உபயோகிக்க ஆரம்பித்துள்ளனர். பல விஷயங்களில் இந்த அடுப்பினை உபயோகிப்பதில் பயன் உண்டு. புகை இல்லை. விறகு சிக்கனமாக உபயோகப்படுத்தினால், போதும். சீக்கிரமாக சமையல் ஆகிறது. பாத்திரங் களுக்கு கரி பிடிப்பதில்லை. உபயோகிக்கும் இடம் கரி படாமல் சுத்தமாக இருக்கும். பெண்களுக்கு ஓய்வு நேரமும் அதிகமாகக் கிடைக்கிறது. கல்லுப்பட்டி "அடுப்பு" ஒன்றே இதற்கு பெயர். சுற்றுப்புற ஊர்களிலும், மதுரை யிலும் இந்த அடுப்பை உபயோகிக்கின்றனர். தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் இது பெருவாரியான முறையில் பரவ வேண்டும். நம் பெண்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். கையிலேயே எடுத்துச் செல்லும்படியான (Portable) மகன்சுலா அடுப்பும் இங்கே தயாரிக்கப் படுகிறது. இந்தியாவிலேயே இந்த வகையான கையிலே எடுத்துச் செல்லும்படியான மகன்சுலா அடுப்புகள் தமிழ் நாட்டில் கல்லுப் பட்டியில்தான் செய்யப்படுகின்றன வாம்!

புதுமாதிரியான குயவன் சக்கரம் இங்கே தயாரிக்கப் பட்டுள்ளது. இதற்கு பால்-பேரிங் முறை பொருத்தப் பட்டுள்ளது. இதனால் சக்கரம் ஆட்டமில்லாமல் ஒரே, சீரான முறையில் இயங்க முடிகிறது. அத்துடன் இந்தச் சக்கரம் மரத்தினாலும், இரும்பினாலும் செய்யப்பட்டுள்ளது. அதனால் இதைச் சுலபமாக ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல முடியும். இதன் விலை ரூபாய் நூறுதான் ஆகிறது.

கண்ணைப் பறிக்கும் முறையில் அழகான மண் பாண் டங்கள் இங்கு செய்யப்படுகின்றன. அன்னம் வடிவில் குடி தண்ணீர்ப் பானை செய்திருக்கிறார்கள். கண்ணை யும் கருத்தையும் கவர்ந்து நிற்கிறது இது.

ஆசிரமத்தின் மேற்பார்வையில் இந்த நிலையம் நடைபெறுகிறது. வேண்டிய உபகரணங்கள் இலவசமாக குயவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. அவர்கள் உற்பத்தி செய்துதரும் பொருள்கள் ஆசிரமத்தாரால் ஸ்டோர் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. ஆகவே உபகரணங்கள், உற்பத்தி செய்த பொருள்களை விற்றல் ஆகிய இரு முக்கியமான சிரமங்கள் தொழிலாளிக்கு இல்லை. இதனால் வேலைப்பாடு சுத்தமாகவும், கலை உணர்ச்சியுடன் அழகாகவும் இருக்கின்றது.

எண்ணெய் ஆட்டும் தொழில்

எண்ணெய் தயாரித்தல் நிலையம் ஓர் உற்பத்தி நிலை யமும், பயிற்சிநிலையமும் ஆகும். இங்கே தயாரிக்கப்படும் "எண்ணெய்கள்" மிகவும் பிரசித்தமானவை. "கல்லுப் பட்டி எண்ணெய்" என்றால் சுற்றுப் புறங்களில் நல்ல கிராக்கி. எண்ணெய் சுத்தமாகவும், தெளிவாகவும் உள்ளது.

1954-ம் ஆண்டிலிருந்தே இந்த நிலையம் வேலை செய்யத் தொடங்கிவிட்டது. அகில இந்திய கதர், கிராமக் கைத் தொழில்கள் கமிஷனின் பண உதவி இதற்குக் கிடைக்கிறது.

"கல்லுப்பட்டி செக்கு" என்ற புகழ்பெற்ற செக்கு இங்கே தயாரிக்கப்படுகிறது. இந்தக் செக்கு உபயோகிப்ப தினால் பலவித நன்மைகள் உண்டு. ஒரு மாடு தான் கட்டி ஓட்டுகிறார்கள். 22 அடி அகலம், 20 அடி நீளமுள்ள ஒரு சிறிய இடத்திலேயே இந்தச் செக்கை நிறுவி, இயக்கு விக்கலாம். பால்பேரிங்குகள், ரோலர் பேரிங்குகள் இந்த செக்கில் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் மாட்டிற்கு அதிகச் சிரமம் இல்லை. எண்ணெய் சுத்தமாகவும் சிரம மில்லாமலும் ஆட்டும் முறையில் இந்தக் செக்கு அமைக் கப்பட்டிருக்கிறது. இந்த வகையான செக்குகளைத் தயாரித்து விற்பனை செய்கிறார்கள். ஒரு செக்கின் விலை முன்னூறு ரூபாய் ஆகிறது.

சுற்றப்புற கிராமங்களில் உள்ள விவசாயிகள் தங்கள் எண்ணெய் விதைகளை சேமித்து வைத்து, இங்கே கொண்டு வந்து எண்ணெய் ஆக்கிக்கொண்டு போகிறார்கள். இதற் கான கட்டணம் மிகவும் குறைவு. சமீபத்தில் பழைய மாதிரி செக்குகளை எத்தனை பேர் உபயோகிக்கிறார்கள், அதனுடைய பலா பலன்கள் என்ன என்பது பற்றி ஒரு கணக்கு எடுக்கப்பட்டது. திருந்திய நிலையில் தயாரிக்கப்பட்டுள்ள "கல்லுப்பட்டி செக்குக்கு" இப் பொழுது கிராக்கி ஏற்பட்டு வருகிறது.

சோப்பு தயாரித்தல்

சோப்புகள் தயாரிக்கும் நிலையம் ஒன்று இங்கே இயங்கி வருகிறது. வேலையில்லாத கிராமவாசிகளுக்கு இங்கே வேலை கற்றுக்கொடுக்கப்படுகிறது. இதுவரையில் உபயோகிக்கப் படாமல் வீணாக்கப்பட்டுவந்த எண்ணெய்வித்துக்கள் சேக ரிக்கப்பட்டு சோப்பு தயாரிக்க உபயோகிக்கப்படுகின்றன. கிராமவாசிக்கு ஓய்வு காலத்தில் ஒரு சிறு தொகை சம்பாதிக்கும் வழியை இந்த நிலையம் வகுத்துக் கொடுக் கிறது. அவருடைய வேலையெல்லாம் எண்ணெய் வித்துக்களை சேகரம் செய்து அளிப்பதுதான். இதற்கு ஒன்றும் மூலதனமே தேவையில்லை! ஏறக்குறைய நாட்டிலே இன்று உபயோகத்தில் இருந்துவரும் சோப்புகளுக்கு இணையான சோப்புகள் இங்கே தயாரிக்கப்படுகின்றன.

இங்கே பயிற்சியாளர்கள் மூன்று மாதம் பயிற்சி பெறுகிறார்கள். இந்த மூன்று மாதம் போதாது என்று தெரிகிறது. இந்தப் பயிற்சியின் காலம் ஆறு மாதமாக இருந்தால் நல்லது என்று சொல்கிறார்கள். 20-லிருந்து 25 பேர் வரை ஒரே சமயத்தில் பயிற்சி பெறலாம். ரூபாய் 45 மாதா மாதம் உதவிப் பணமாக அளிக்கப்படுகிறது. கேரளம், மைசூர், சென்னை முதலிய இடங்களிலிருந்தெல்லாம் வந்து இங்கே பயிற்சி பெறு கிறார்கள். அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில்

கமிஷனால் தென் இந்தியாவில் நடத்தப்படும் நிலையம் இது ஒன்றுதான். இது தவிர, இந்தப் பயிற்சி நிலயத்தில் வளர்ச்சி அதிகாரிகள் (தொழில்), கதர் அலுவலர்கள், கிராம சேவகர்கள், கிராம சேவிகைகள் ஆகியோருக்கு இங்கே இந்தத் துறையில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இந்தத் துறையில் ஆராய்ச்சி செய்ய ஓர் ஆராய்ச்சி நிலையம் இங்கே இயங்குகிறது. தரமான சோப்புகளைத் தயாரிக்கவும், தென் இந்தியாவில் தயாரிக்கப்படும் சோப்புகளைப்பற்றிய ஆராய்ச்சியும் இங்கே செய்யப்படுகிறது.

தோல் கருவிகள் செய்தல்

தோல் கருவிகள் செய்யும் நிலையம் சீரிய முறையில் இயங்கிவருகிறது. இங்கேயே தோலைச் சுத்தமாகப் பதனிட்டு, நேர்த்தியான முறையில் தோல் கருவிகள் தயாரிக்கப்படுகின்றன. தோலைப் பதனிடுதல் பற்றி இங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது. 1954 முதற்கொண்டு இந்த நிலையம் பணியாற்றிவருகிறது. இங்கே பணி புரியும், சிப்பந்திகளுக்கும், தொழிலாளர்களுக்கும் ஊதியத்தை அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் கமிஷன் அளிக்கிறது. இந்தப் பயிற்சி நிலையத்தில், நவீன முறையில் தோல் பதனிடுதல், தோல் கருவிகளைத் தயாரித்தல் ஆகிய துறைகளில் ஓராண்டுக்காலம் பயிற்சியளிக்கப்படுகிறது. எஸ்.எஸ்.எல்.சி படித்து, 20 வயதுக்கு மேற்பட்டிருந்தால் இந்தப் பயிற்சிபெற யோக்கியதை உண்டு. அருமையான தோல் கருவிகளை இந்த நிலையம் தயாரிக்கிறது, விலையும் கொஞ்சம் மலிவாகத்தான் இருக்கிறது. "கல்லுப்பட்டி செருப்பு" என்றே இங்கு தயாரிக்கப்படும் செருப்புக்கு பெயர் உண்டாகியுள்ளது. மதுரை போன்ற நகரங்களில், இங்கே தயாரிக்கப்படும் இந்தக் கருவிகளுக்கு மெள்ள மெள்ள கிராக்கி அதிகரித்துக்கொண்டுவருகிறது. மதுரை மாவட்டம் மட்டுமல்ல, தமிழ் நாடு பூராவிலுமே இங்கே தயாரிக்கப்படும் பொருள்களை மக்கள் தாராளமாக வாங்கலாம். பொருள் தரமாக இருக்கிறது. விலையும் மலிவு.

தோல் சாமான்கள் தயாரித்தல் துறையில் இங்கே பலவித பரிசோதனைகளை இந்த நிலையம் நடத்திப் பார்க்கிறது. தோல் பதனிடுதல் துறையிலும், கருவிகள் தயாரித்தல் முறையிலும் இன்னும் மேலான முறைகளைக் கையாள கருவிகளின் தரத்தை இன்னும் அதிகப்படுத்த முயற்சிகள்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. மற்றும் வளர்ச்சி அதிபர் (தொழில்) வட்டார அபிவிருத்தி அதிபர்கள், கதர் அலுவலர்கள் கிராம சேவக்குகள் போன்றவர்களுக்கெல்லாம் அவ்வப்போது இங்கே பயிற்சி தரப்படுகிறது.

தீப்பெட்டி தயாரித்தல்

தீப்பெட்டி தயாரிக்கும் நிலையம் செவ்வனே இயங்குகிறது. மிகவும் முக்கியமான தொழில் தீப்பெட்டி தயாரிக்கும் தொழில். இந்த நிலையத்தில் சுற்றுப்புறத்தில் உள்ள ஸ்திரிகளுக்கு பெருவாரியான முறையில் வேலை தரப்படுகிறது. இந்தத் தொழிலில் பெண்கள் அதிகமாக ஈடுபட்டுள்ளனர். அதனால் அவர்களுக்கு ஒரு தொழிலும் தெரிந்து விடுகிறது. ஊதியமும் கிடைக்கிறது. இங்கே செய்கிற தீக்குச்சிகள் எல்லாம் மூங்கிலிலிருந்தே செய்யப்படுகின்றன என்பது முக்கியமாக குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஒவ்வொரு ஆண்டும் இங்கே வளர்ச்சி அதிகாரிகள் (தொழில்), மற்றும் கிராம சேவக்குகள், கதர் அலுவலர்கள், உயர்மட்ட ஆதாரக் கல்வி பயிலும் மாணவர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. கிராமத் தொழில் பயிற்சி பெற அனுப்பப் பெறும் வட்டார வளர்ச்சி அதிகாரிகள், மாவட்டக் கிராமக் கைத்தொழில் அதிகாரிகள் போன்றவர்களும் இங்கே பயிற்சி பெறுகிறார்கள்.

தேனீ வளர்க்கும் தொழில்

தேனீ வளர்த்தல் நிலையம் மகத்தான பணி புரிந்து வருகிறது. கல்லுப்பட்டி ஆசிரமத்தில் உள்ள தேனீ வளர்ப்பு நிலையத்தின் அதிகார எல்லை மதுரை, ராமநாதபுரம், கோயமுத்தூர், நீலகிரி மாவட்டங்களாகும். அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் கமிஷனின் ஆதரவில் நடைபெறுகிறது இந்த நிலையம். தற்சமயம் 3 பிரதேச அதிகாரிகள், 60 உப நிலையங்கள், 15 தேனீ வளர்த்தல் நிலையங்கள், 17 சம்பந்தமான பள்ளிகள், மற்றும் இத்தொழில் சம்பந்தப்பட்ட பயிற்சி நிலயங்கள் நடைபெறுகின்றன. கல்லுப்பட்டியில் தயாரிக்கப்படும் தேன் மிகவும் பிரசித்தமானது. விலையும் மலிவா இருக்கிறது.

தேனீ வளர்த்தலை மிகவும் தீவிரமாகவும் விஞ்ஞான அடிப்படையிலும் விரிவான முறையில் பெருக்க வேண்டும் என்பதே இந்த நிலையத்தின் நோக்கமாகும். 1954-லிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் மூன்றுமாதப் பயிற்சி, பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது. இதுவரையில் இத்துறையில் 124 பேர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

இத்தொழில் துறையில் இறங்கியுள்ளவர்களுக்கு தேனீப் பெட்டிகள் 5 ரூபாயில், குறைந்த விலையில் அளிக்கப்படுகிறது. மற்ற உபகாணங்கள் இலவசமாக வழங்கப் பெறுகின்றன. இவ்வளவு மலிவான முறையிலும், அவர்களுக்கு எந்த வகையிலும் கஷ்டம் அளிக்காத வரையிலும் உபகரணங்கள் வழங்கப்படுவதால், மக்கள் தேனீ வளர்க்கும் தொழிலில் மிகுந்த அக்கறை காட்டிவருகின்றனர். தேனீ வளர்க்கும் தொழிலில் மதுரை மாவட்டம் தான் தலைசிறந்து விளங்குகிறது. இதற்குக் காரணம் தேனீ வளர்ப்புக்கு சாதகமான சூழ்நிலை உள்ள கொடைக்கானல் மலை இந்த மாவட்டத்தில் இருப்பது தான். வாழை, காப்பி, ஆரஞ்சு போன்ற மரம் செடிகொடிகளில் தேன் அதிகமாக வந்து அடையும். வாழையில் வருடம் பூராவும் தேன் கிடைக்கும். நீலகிரி மலையில் தேயிலைதான் கிடைக்கிறது. அதனால் அங்கே அவ்வளவு அதிகமாகத் தேன் கிடைப்பதில்லை. இந்தக் கைத்தொழிலைப் பரப்ப முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. முதல் அதிகம் போடாமல் மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபடலாம்.

ஈடுபடும் நேரமும் மிககுறைவு. கல்லுப்பட்டி சாந்திநிகேதன் ஆசிரமத்தில் இயங்கி வரும் தேனீ வளர்ப்பு நிலையம் மற்ற நிலையங்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக விளங்கிவருகிறது. ஒரு லட்சம் பவுண்டு தேன் இதுவரையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு மகத்தான சாதனையாகும்.

கையால் காகிதம் செய்தல்

கையால் காகிதம் தயாரிக்கும் நிலையம் சிறப்பாகக் காட்சியளிக்கிறது. இது ஒரு உற்பத்தி நிலையம் மட்டுமல்ல, பயிற்சி நிலையமும் கூட. 1955-ம் ஆண்டில் இது துவக்கப்பட்டது. ஆசிரமத்தின் மேற்பார்வையில், அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில்கள் கமிஷன் பண உதவியுடன் இந்த நிலையம் இயங்கி வருகிறது. கையால் செய்த காகிதம் என்று சொல்லமுடியாத நிலைக்கு நல்ல தரமான காகிதம் இங்கே தயாரிக்கப்படுகிறது. வளர்ச்சி அதிகாரிகள் (தொழில்), கதர் அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கும் இங்கே இந்த முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தச்சவேலைகள், கொலுத்துவேலைகளும் இங்கே நடைபெறுகின்றன. தச்சர்கள், கம்மார்கள் ஆகியோருக்கு இங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது. சுற்றுப்புறங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு வேலையும் அளிக்கப்படுகிறது.

பனை வெல்லம் காய்ச்சும் தொழில்

பனை வெல்லம் காய்ச்சும் தொழில் நிலையம் கல்லுப்பட்டியிலிருந்து ஒன்பது மைல் தொலைவில் உள்ள பாலையூரில் அமைந்துள்ளது. இங்கே 3,000 பனைமரங்கள் உள்ளன. பனை வெல்லம் காய்ச்சும் தொழில் மிகப் பூர்விகமான கிராமத் தொழில்களில் ஒன்றாகும். இந்தத் தொழிலில் போதிய பயிற்சி அளிக்கும் பயிற்சி நிலையமாக இது திகழ்கிறது. தொழிலாளர்கள், காந்தி கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள், காந்திநிகேதனில் படிக்கும் உயர்மட்ட ஆதாரக் கல்வி மாணவர்கள், காதி கிராம உத்யோக் வித்யாலயத்தில் பயிற்சி பெறும் வளர்ச்சி அதிகாரிகள் (தொழில்), கிராமக் கைத்தொழில் மாதிரி நிலையத்தில் பயிற்சி பெறுபவர்கள், கிராம சேவகர்கள் ஆகியோருக்கு இந்தத் துறையில் பயிற்சி இங்கே அளிக்கப்படுகிறது. மரமேறுபவர்களுக்கு ஒரு மாதிரி குடியிருப்புக் காலனி என்றும் துவக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நிறுவனங்கள்

பயிற்சி நிறுவனங்கள் இரண்டு பெரிய அளவில் இயங்குகின்றன. கதர் அபிவிருத்தித் துறையில் அருமையான பயிற்சி நிலையமாகத் திகழும் கதர் கிராம உத்யோக் வித்தியாலயமும், வளர்ச்சி அதிகாரிகள் (தொழில்) பயிற்சிபெறும் பயிற்சி நிறுவனமான காதி கிராம உத்யோக வித்தியாலயமும், இந்த இரண்டும் கல்லுப்பட்டி காந்தி நிகேதன் ஆசிரமத்தின் சேவைக்கும், புகழுக்கும் பெரும் சான்றாகத் திகழ்கின்றன. கதர் அபிவிருத்தித் துறை வித்தியாலயம் 1956-ல் ஆரம்பிக்கப்பட்டது. கதர் நூற்க, நெய்ய, இந்தத் தொழிலில் எல்லாத் துறைகளிலும் நல்ல பயிற்சி பெற நிலைக்களனாகத் திகழ்கிறது இந்த வித்தியாலயம். இங்கே பயிற்சி பெற்று செல்பவர்கள், அரசாங்கத்தின் கதர் இலாக்காவிலும், மற்றும் சம்பந்த பட்ட ஸ்தாபனங்களிலும் வேலையில் அமர்த்தப்பட்டுக் கொள்கிறார்கள், இங்கே பயிற்சிபெறும் பயிற்சியாளர்கள் கதர், சர்வோதயம் ஆகியவற்றின் தத்துவங்களைப் புரிந்து கொண்டு, அந்த முறையில் அவர்கள் வாழ வழிவகை செய்து கொடுக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியாளர்கள் சுற்றுப்புறங்களில் உள்ள கிராமங்களுக்குச் சென்று கதரின் முக்கியத்துவத்தைப் பற்றியும், காந்திய தத்துவத்தைப்பற்றியும் ஏழை எளிய மக்களுக்கு புரியும்படிச் சொல்லி வருகிறார்கள். தொழில் வளர்ச்சி அதிகாரிகளைப் பயிற்றுவிக்கும் வித்தியாலயம் பெரும் பணியாற்றுகிறது. இதை ஒரு பெரிய கல்லூரிக்கே ஒப்பிடலாம். இந்த நாட்டில் மொத்தம் இந்த மாதிரி ஏழு நிலையங்கள் தான் உள்ளன. அதில் ஒன்று இந்த மகாவித்தியாலயம்.

இங்கே பயிற்சி பெறுபவர்கள் எல்லோரும் பட்டதாரிகள்தான். அளிக்கப்படும் பயிற்சி காலம் ஓராண்டு. எட்டு மாதத்திற்கு இங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது. வளர்ச்சி அதிகாரிகள் (தொழில்) மிகவும் மேலான நிலையில் பல துறைகளிலும் பயிற்சி பெற வேண்டும். வேளாண்மைத் துறையில் பல்வேறுபட்ட பிரிவுகளிலும் பயிற்சி வேண்டும். கைத்தொழில்கள், மற்றும் பொருளாதார நுணுக்கங்கள் பற்றிய பயிற்சி வேண்டும். கூட்டுறவு பற்றிய பயிற்சி வேண்டும். இதையெல்லாம் இந்த வித்தியாலயம் செய்கிறது. சமுதாய அபிவிருத்திப்பணியில் இவர்களைச் சிறந்த பணியாளர்களாக பயிற்றிவிடும் பெரும் நிலைக்களனாகத் திகழ்கிறது இந்த மகாவித்தியாலயம்.

அரசாங்க சார்புடைய நிறுவனங்கள்

மற்றும் அரசாங்கச் சார்பில் நான்கு நிறுவனங்கள் இங்கே நடைபெறுகின்றன. கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையம் (Rural Extension Training Centre) குடும்ப இயல் பகுதி, தொழில் நுணுக்கப் பகுதி, கிராமக் கைத்தொழில் மாதிரி நிலையம், அரசாங்க கதர் நிலையம் ஆகியவை அரசாங்கச் சார்புடையவை. குடும்ப இயல் பகுதியில் கிராம சேவிகைகள் பயிற்சி பெறுகிறார்கள். அமைதியும், லட்சியமும் இணைந்து திகழும் அழகான சூழ்நிலையில் பயிற்சி பெறும் கிராம சேவிகைகள் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடாமல் இருக்க முடியுமா ? கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையத்தில் கிராம சேவக்குகளுக்குப் போதிய பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கே பயிற்சி பெறும் கிராம சேவக்குகள், கிராம சேவிகைகள் எல்லோரும் நல்ல வாய்ப்பினைப் பெற்றவர்கள். எல்லா வசதிகளும் உடைய காந்தி நிகேதன் ஆசிரமத்தில் பயிற்சி பெறும் வாய்ப்பு உண்மையிலேயே ஒரு பெரிய வாய்ப்பல்லவா ?

"பயிற்றிப் பல கல்வி தந்து"

காந்தி நிகேதன் ஆசிரமத்தைப்பற்றி நினைக்கும் பொழுது நம் நெஞ்சில் நீங்காத இடம் பெறுவது அங்கே நடைபெறும் உயிர்மட்ட ஆதாரப்பள்ளி (Post Basic School) தான் இந்தப் பள்ளி ஆசிரமத்தால் நடத்தப் பெறுவது. இளைஞர்களை நாட்டின் நல்வாழ்வில் அக்கறை கொண்டவர்களாய், சேவை மனப்பான்மை யுடையவர்களாய், தொண்டுள்ளம் படைத்த சீரிய பண்பாளர்களாய் மாற்றி அமைக்கும் திருப்பணியில் இந்தப்பள்ளியின் சேவை மகத்தானது.

உயர் மட்ட ஆதாரப்பள்ளியில் மூன்றுண்டுகள் படிப்புச் சொல்லித்தரப்படுகிறது. இது எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புக்குச் சமானமாகும். இப்பொழுது 62 பேர் இந்தப் பள்ளியில் படிக்கிறுர்கள். இதில் 10 பேர் பெண்கள். இங்கே ஏறக்குறைய தமிழ் நாட்டின் ஆறு மாவட்டங்களிலிருந்தும் வந்தவர்கள் இந்தப் பள்ளி மாணவர்கள். இதே மாதிரி உயர் மட்ட ஆதாரப்பள்ளிகள் காந்தி கிராமத்திலும், வேதாரணியத்திலும், திருப்பராய்த்துறையிலும் நடைபெறுகின்றன. ஆனல் கல்லுப்பட்டி காந்தி நிகேதன் ஆசிரமத்தில் நடைபெறும் பள்ளி தான் பழமையானது. முதன் முதலில் துவக்கப்பட்டது.

உடல் வளர்ச்சி, உள்ள வளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி ஆகிய மூன்றினையும் மாணவர்களிடையே வளர்ப்பது இந்தப் பள்ளிச்சாலையின் அடிப்படை நோக்கமாகும். மாணவர்களை வெறும் பள்ளிப்படிப்பு மட்டும் தெரிந்த இளைஞர்களாக ஆக்காமல், கைதேர்ந்த கலைஞர்களாய், அறிவு விற்பன்னர்களாய், தொண்டுள்ளம் படைத்தவர்களாய், தன்னம்பிக்கை உடையவர்களாய், நாட்டின் லட்சியப் பிரஜைகளாய் மாற்றியமைக்கும் திருப்பணி, இங்கே அமைதியாக, ஆனல் திட்டமிட்டு நடைபெறுகிறது. மாணவர்களுக்கு எந்தப் பிரச்னையையும் புரிந்துகொண்டு, எப்படி அதைச் சமாளிக்க வேண்டும் என்ற அடிப்படைக் கல்வி தான் முக்கியம். தன்னம்பிக்கையையும், கட்டுப்பாட்டையும் வளர்க்கும் கல்வி தான் சீரிய கல்வி. இங்கே பயிலும் மாணவர்கள் தங்களுக்கு வேண்டிய தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்துகொள்ளும் வகையில் பயிற்சி பெறுகிறுர்கள். இவர்கள் ஆண்டு விவசாயத் திட்டம் என்று தங்களுக் கென்று ஒன்று உருவாக்கி நடத்துகிறுர்கள். உணவு வகையில் தங்களைப் பொறுத்த வரையில் தன்னிறைவு பெறத் திட்டம் தீட்டி செயல் முறையில் செய்து காட்டுகிறுர்கள். தங்களுக்கு எவ்வளவு உணவு வேண்டும், எவ்வளவு உணவு இருக்கிறது, சீரான உணவு (Balanced diet) எப்படி அமைய வேண்டும், சீரான முறையில் எப்படிப் பயிர்த் திட்டம் அமைய வேண்டும் என்பதையும் தெரிந்து வைத்திருக்கிறுர்கள். இவர்களே தங்களுக்கு வேண்டிய உணவு தானியங்களை பயிர் செய்துகொள்கிறுர்கள். இந்த மாணவர்கள் இந்தப் படிப்பு முடிந்ததுமே கீழ்க்கண்ட துறைகளில் ஓரளவாவது தெரிந்து கொண்டவர்களாவார்கள் :—

நூற்பு, நெசவு, விவசாயம், வீடுகள் கட்டுதல், சோப் செய்தல், எண்ணெய் ஆட்டுதல், பனைவெல்லம் காய்ச்சுதல், பாய் முடைதல், தையல் வேலை, இத்தனையும் தெரிந்து கொள்கிறுர்கள். அது தவிர, தச்சவேலை, தேனீ வளர்த்தல், தோல் கருவிகள் செய்தல், கையால் காகிதம் செய்தல், மண்பாண்டம் செய்தல் என்று ஏதாவதொன்றையும், இத்துடன் தெரிந்து கொள்கிறுர்கள். ஏட்டுப் படிப்பு, தொழில் படிப்பு, உடல் வளர்ச்சி, உள்ள வளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி, அத்தனையையும் இளைஞர்களிடையே கூட்டிக் குழைத்து தந்து அவர்களை நாட்டின் உபயோகமுள்ள பிரஜைகளாக மாற்றியமைக்கும் திருப்பணி எல்லாப் பணிகளிலும் சிறந்த பணியாகும். இந்தப் பணியினை திறம்பட செய்கிறது காந்தி நிகேதன ஆசிரம உயர்மட்ட ஆதாரப்பள்ளி நிலையம்.

அன்பும், பண்பும் மிளிர—தொண்டுள்ளம் வளர......

பொதுவாக, காந்தி நிகேதன ஆசிரம அன்றுட வாழ்விலே அமைதியும், அன்பும், சேவை மனப்பான்மையும், சீரிய பண்பும் இழைந்தோடுகிறது. நல்ல பழக்க வழக்கங்கள் நிலையான, நேர்மையான வாழ்வு முறைக்கு அடித்தளமாகும். மனிதனை, முழு மனிதனுக,பயனுள்ள பிரஜையாக சுயநலமற்றவனுக, "எல்லோரும் வாழ வேண்டும்" என்ற பெரு நோக்கம் கொண்டவனுக மாற்றியமைக்கும் தொண்டை விட பெரிய தொண்டு வேறு என்ன இருக்கிறது ? ஆசிரம வாழ்க்கையிலே கட்டுப்பாடும் ஒழுங்கும் பரவி நிலவுகிறது. ஆசிரம வாசிகள் எல்லோரும் கதர் அணிகின்றனர். கைக்குத்தல் அரிசி தான் உபயோகப்படுத்துகின்றனர். ஆசிரமத்தில் தயாரிக்கப்படும் காப்பியில் அஸ்கா சக்கரை போடுவதில்லை. தினம் அதிகாலையிலும், மாலையிலும் ஆசிரமவாசிகள் இறை வணக்கம் செலுத்தும் காட்சி கண்ணையும் கருத்தையும் கவரும் ஒப்பற்ற காட்சியாகும். தொண்டுள்ளம் படைத்த ஆசிரமவாசிகள், ஆண்டவன் வழிபாடு செய்யும் பொழுது, ஆன்மீக ஒருமைப்பாடு மனிதனுக்கு எத்துணை அவசியம் என்பது தெளிவாகத் தெரிகிறது. மனத்தை ஒரு நிலைப் படுத்தி ஆண்டவனை வழிபட்டால் ஆகாத காரிய முண்டோ?

கல்லுப்பட்டி காந்தி நிகேதன ஆசிரமம் தமிழகத்தின் பெருமைக்கு அணிகலனுகத் திகழ்கிறது. விளம்பரமில்லாமல் செய்கிற சேவை தான் உண்மையான சேவை. காந்தி நிகேதன் ஆசிரமம் விளம்பரத்தை விரும்பவில்லை. மகத்தான சாதனைகளைச் செய்து வரும் இந்த ஆசிரமம் தமிழகத்தின் பண்புக்கு நல்லதொரு எடுத்துக் காட்டு. நாட்டின் முதுகெலும்பான கிராமங்களிலே ஒரு புது மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, "கிராமங்கள் வாழ" "கிராம மக்கள் வாழ்விலே வளம் கொழிக்க" பாடுபடும் காந்தி நிகேதன் ஆசிரமத்தின் தொண்டு வளர்க வளர்க என்று வாழ்த்துக் கூறுகிறேம். மகாத்மா காந்தியின் பிரதம சிஷ்யர்களில் ஒருவரான டாக்டர் ஜே. சி. குமரப்பா, இந்த ஆசிரமத்தை வெகுவாக விரும்பி, இங்கேயே நெடுங்காலம் தங்கியிருந்தார்கள் என்பதிலிருந்தே கல்லுப்பட்டி காந்தி நிகேதன் ஆசிரமத்தின் பெருமை நமக்கெல்லாம் புலனுகிறது. கிராமமக்களின் வாழ்வினை வளம்படுத்தும் திருப்பணியிலே சீரிய தொண்டாற்றும் கல்லுப்பட்டி காந்தி நிகேதன் ஆசிரமம் தமிழகத்தின் பண்புக்கு உறைவிடமாய் விளங்குகிறது. கிராமியப் பல்கலைக் கழகமாக மிளிரும் அதனுடைய புகழ் மேலும் மேலும் பெருகி, அதன் தொண்டு ஆல் போல் வேர் விட்டு, அரசு போல் வளர்ந்து, பெருக வேண்டுமென்று, மனிதனின் நல் வாழ்விலே அக்கறை கொண்டுள்ள எவருமே வாழ்த்தாமல் இருக்க முடியாது.

மக்கள் கூடிச் செயலாற்றும்

குடி மராமத்து

தஞ்சை மாவட்டம், பாபநாசம் பஞ்சாயத்து யூனியன் வழிகாட்டுகிறது..

" மக்களாட்சியிலே உரிமையும் கடமையும்
இணைந்து விளங்கும் அற்புதக்காட்சி.."

தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டாரத்தில், பஞ்சாயத்து யூனியன் மேற் கொண்டுள்ள குடிமராமத்து வேலையில், மக்களே பங்கேற்றுப் பணிபுரிகின்றனர்.

"மறந்து விட்டிருந்த பணி மறுபடியும் மலர்ச்சி பெற்றுத் திகழ்கிறது.."



"சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்"

கல்லுப்பட்டி வட்டாரத்தில் பெரும் பணியாற்றி வரும் காரைக்கேணி, காடனேரி ஆகிய இரு பஞ்சாயத்துக்களின் பணிகளை, படங்கள் விளக்குகின்றன.

படம் 1லிருந்து 6 வரை :—காடனேரி பற்றிய படங்கள். 7லிருந்து 12 வரை காரைக்கேணி பற்றியவை. (இந்த இரு பஞ்சாயத்துக்கள் பற்றிய கட்டுரைகள் 'கிராம நலம்' மார்ச், மே இதழ்களில் வெளிவந்துள்ளன.)

நாட்டின் முதுகெலும்பு பஞ்சாயத்துக்கள். கிராமங்க[illegible]ளம் பெற்றால்தான் நாடு வளம் [illegible] முடியும். காந்தியடிகள் கண்ட கிராம ராஜ்யக் கனவு நனவாக வேண்டுமென்றால், கிராமமக்கள் பொறுப்பினை உணர்ந்து, செயலாற்ற முன் வர வேண்டும். மக்கள், ஒத்துழைப்பின்றேல் எந்தக்காரியமும் செவ்வனே நடைபெறாது. காரைக்கேணி, காடனேரி போல, தமிழகத்தின் மற்றகிராமங்களும் விளங்கும் முறையில், பணிபுரி[illegible] எனக் கைகூப்பி அழைக்கிறோம்.

ஆசிரியர்.





‘ நல் வாழ்வுக்கான
திட்டங்கள்
நல்ல முறையில்
செயல்பட..”

-2 : 21—5—61 அன்று பரம்பிக்குளம் அணைக் கட்டில் முதல் அமைச்சர் காமராஜ் அவர்கள் ஒரு பகுதி வேலையைத் துவக்கி வைத்தார்.



3—5: 21—5- 61 அன்று வேலை மிக மும்முரமாக நடைபெற்று வரும் அலியாறு வேலைத் திட்டப் பகுதியை முதல் அமைச்சர் பார்வையிட்டார்.

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொன்றுக்கும் ஆதாரமிருக்க வேண்டுமென்று வற்புறுத்துவார். பொதுப்பணத்தை யாராவது கையாடிவிட்டால் அவரைத் தப்பவிடமாட்டார். அப்படிப்பட்டவர்களிடம் அவர் நடந்து கொள்ளும் விதம், சில சமயங்களில் "என்ன இவ்வளவு கருணையற்றவராக இருக்கிறாரே" என்று நம்மை நினைக்கும்படிச் செய்யும். ஆனால், கையாடியவர், திருந்த வேண்டும், நல்ல மனிதராக வாழ வேண்டும் என்ற நன்னோக்கத்துடனேயே அவரிடத்தில் கடுமையாக நடந்துகொண்டார் என்பது பிறகு தெரிய வரும்.

ஒழுக்கமும் இரக்கமும்

ஒரு சமயம், காங்கிரஸ் கமிட்டி யொன்றின் பணப் பொறுப்பாளாயிருந்த ஒருவர், இந்த கமிட்டியின் ஒரு பகுதிப் பணத்தைத் தம் சொந்தத்திற்கு உபயோகப்படுத்திக் கொண்டுவிட்டார். கமிட்டியைச் சேர்ந்த மற்றவர்களுக்கு இது தெரிந்தது. விசாரித்தார்கள். குற்றம் ருஜுவாயிற்று. எனவே, எடுத்த பணத்தைத் திருப்பிக்கொடுத்துவிட வேண்டுமென்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள். பணத்தை எடுத்தவர் திருப்பிக்கொடுக்க வகையில்லாமல், காந்தியடிகளிடம் சென்று முறையிட்டுக்கொள்வோம்; கருணைகாட்டுமாறும், பணத்தைத் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தாதிருக்குமாறு கமிட்டியைச் சேர்ந்தவர்களுக்கு உத்தரவிடுமாறும் கேட்டுக்கொள்வோம் என்று எண்ணி, கையிலிருந்த சொற்பப் பணத்தைச் செலவழித்து ரெயில்பிரயாணம் செய்து, காந்தியடிகள் தங்கியிருந்த வார்தாவுக்குச் சென்றார். தாம் வந்த காரியத்தை விளக்கிக்கூறினார். காந்தியடிகள் எல்லாவற்றையும் சாவதானமாகக் கேட்டுக்கொண்டார். பிறகு "எடுத்த பணத்தை உடனே திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அப்படி ரொக்கமாகக் கொடுக்க வசதியில்லாவிட்டால், உங்களுக்குச் சொந்தமான சொத்து பற்றுக்களை விற்றுக் கொடுத்து விடவேண்டும். பொதுப்பணத்தைக் கையாடியவர்கள் விஷயத்தில் தயவோ தாட்சண்யமோ காட்ட முடியாது; காட்டவும் கூடாது" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். அந்த நண்பர் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப் போனார். ஊருக்குத் திரும்பிப்போகக் கையில் பணமில்லையென்றும், ரெயில் கட்டணத்திற்காவது பணம் தரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இதற்குக் காந்தியடிகள், "வரும்போது எப்படி வந்தீர்கள்" என்று கேட்டார். "கையிலிருந்த சொற்பப் பணத்தைக் கொண்டு டிக்கட் வாங்கி வந்தேன், இப்பொழுது கைவசம் ஒன்றுமில்லை எல்லாம் செலவழிந்துவிட்டது" என்று பல்லிளித்தார் அந்த நண்பர். "அப்படியானால் ஊருக்கு நடந்து போங்கள். கண்டிப்பாக ஒரு காசுகூட கொடுக்க முடியாது" என்று கூறிவிட்டார் காந்தியடிகள். இந்தப் பேச்சுவார்த்தைகளை அருகிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தார் கருணை வடிவமென்று சொல்லத்தக்க சி. எப். ஆண்ட்ரூஸ். அந்த நண்பர்மீது இரக்கம்கொண்டார். இவரை வழியனுப்புவது போல் ரெயிலடிக்கு அழைத்து வந்து தம் சொந்தப் பணத்திலிருந்து டிக்கெட்டு வாங்கி அவரிடம் கொடுத்து ரெயிலேற்றிவிட்டார். ஆண்ட்ரூஸ் இப்படி இரக்கம் காட்டியது பிறகு காந்தியடிகளுக்குத் தெரிந்தது. பொதுப்பணத்தைக் கையாடியவர்களுக்கு இரக்கம்காட்டுவதா என்று ஆண்ட்ரூஸை இனிய முறையில் கடிந்துகொண்டார்.

காந்தியடிகள் நடைமுறையில் கொண்டுவந்த நற்பண்புகள் பலவற்றிற்கு இன்னும் எத்தனையோ உதாரணங்களை எடுத்துக்காட்டலாம். பொதுவாக, கிராமநலத் தொண்டிலே ஈடுபட்டிருக்கிறவர்கள், காந்தியடிகளின் வாழ்க்கையை முற்றும் அறிந்து, அவருடைய அடிச்சுவடுகளைக் கூடிய மட்டில் பின்பற்ற முயல வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுடைய பணி நிலையான பயனைத் தரும்.

—0—

அறிவொளி பரவுகிறது—

கிராம வாழ்வுக்கு விஞ்ஞானம்...

கிராமங்கள் நாட்டின் முதுகெலும்பு. கிராமிய மறுமலர்ச்சிதான் நாட்டின் மறுமலர்ச்சி. அடித்தளம் வலுவில்லையென்றால், கட்டிடம் ஆட்டம் கண்டுவிடும். கிராமங்களில் அறிவொளி பரவவில்லையென்றால், எடுக்கின்ற பிரயாசைகள், சிரமங்கள் அத்தனையும் வீண். நாட்டுமக்கள், வளர்ந்து வரும் நாகரிகத்தை—விஞ்ஞான அறிவினை—அறிவு வளர்ச்சியை — புரிந்துகொள்ள வேண்டும். இல்லையென்றால், விளைவு பயங்கரமானதாக இருக்கும்.

பாமரரும் அறிய வேண்டிய விஞ்ஞான விந்தைகளை அளிக்க, 'கிராம நலம்' முன் வந்துள்ளது. விஞ்ஞான அறிவு, முக்கியமாக கிராம மக்களுக்குத்தான் தேவை. மதிகெட்டு பாமரராய் மாயாமல், புத்தம் புதிய விந்தைகளைப் புரிந்து கொள்ளவேண்டும். சமுதாயக் கல்வியைப் பரப்புதல்—கிராமவாசிகளுக்குப் பயன் அளிக்கும் விஞ்ஞான அறிவை ஊட்டுதல்—இத்துறையில் "கிராம நலமும்" பணிபுரிய ஒரு வாய்ப்பு உண்டாகி இருக்கிறது.

சிறந்த அறிஞர்களைக் கொண்டு, 'கிராம நல'த்தில் எளிய தமிழில், கருத்தாழம் கொண்ட அற்புத விஞ்ஞானக் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்ற செய்தியை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த நல் வாய்ப்பினை கிராம மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வார்களென நம்புகிறோம். இக்கட்டுரைகள் 'கிராம நல'த்தில் விரைவில் வெளிவரும்.

"அறிவுக்கண் பெற்ற பின்னர்
அல்லல் போகுமே—ஊரில்
அறியாமை இருள் நீங்கி
ஆக்கம் பூக்குமே!"

என்று புதிய விஞ்ஞானப் பள்ளு பாடுவோமாக!

—ஆசிரியர்

(12-ம் பக்கத் தொடர்ச்சி(

வரிகளை நீக்கி ரூபாய்க்கு 45 நயா பைசாக்கள் வீதம் பிரதேச செஸ்விதித்து, அதில் 20 நயா பைசாக்கள் பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதிக்கு ஒதுக்கிவிட்டு, பாக்கியுள்ள தொகையை ஜனத் தொகையின் அடிப்படையில் ஆள் ஒன்றுக்கு 20 நயா பைசாக்களுக்குக் குறையாமல் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு பிரதேச செஸ் ஒதுக்க வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் நில வரி குறைந்த பகுதியிலுள்ள பஞ்சாயத்துக்களும் ஓரளவு அதிக வருவாய் பெற முடியும்.

அடுத்து சொத்து பரிவர்த்தனையின் பேரில் தீர்வை விதித்து வசூல் செய்யும் தொகையைப் பற்றி ஆராயலாம். இந்தத் தீர்வை ஸ்தல ஸ்தாபனங்களில் வருவாயைப் பெருக்குவதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. இதில் கிடைக்கும் சர்சார்ஜ் தொகையானது இதுவரை அந்தந்த பஞ்சாயத்துக்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டப்படி, ஒரு பஞ்சாயத்து யூனியன் தொகுதியில் கிடைக்கும் சர்சார்ஜ் தொகைகளை அந்த பஞ்சாயத்து யூனியன் சபையிடம் ஒப்படைத்து ஒவ்வொரு ஆண்டும் ஒன்று சேர்த்து, ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் அதன் நில வரியின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும். ஆகவே இந்தவருமானமானது, எல்லா பஞ்சாயத்துக்களும், ஓரளவு பங்கு பெற வாய்ப்பு ஏற்படுகின்றது.

மூன்றாவதாக, கேளிக்கை வரியை எடுத்துக்கொண்டால், இதன் மூலம் கிடைக்கும் வருவாயை எந்தப் பஞ்சாயத்து எல்லையில் கேளிக்கை நடத்தப்படுகிறதோ, அந்தப் பஞ்சாயத்து மட்டும் இதுவரை பெற்று வந்தது. சாதாரணமாக, கேளிக்கை பார்க்க வருபவர்கள் பல பகுதிகளிலிருந்தும் வருகின்றனர். ஆகவே, இந்த வருவாயில் 10 சத வீதம் வசூலிக்கும் இலாகாவிற்கு ஒதுக்கிவிட்டு, பாக்கி நிற்கும் 90 பங்கை பஞ்சாயத்து யூனியனும், பல பஞ்சாயத்துக்களும் பங்கு பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பொதுச் சந்தைகளைக் கவனித்தால், சாதாரணமாகப் பஞ்சாயத்து நடத்தும் சந்தையும், பஞ்சாயத்து யூனியன் நடத்தும் சந்தையும் உண்டு. சந்தையை யார் நடத்துகிறார்களோ அவர்களுக்கு சந்தை வருவாய் முழுவதும் கிடைத்து வந்தது. சில பஞ்சாயத்து யூனியன் சபைகள் நடத்தும் சந்தைகளில் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பங்கை அந்த எல்லையிலுள்ள பஞ்சாயத்துக்கள் நன்கொடையாகப் பெற்று வருகின்றன. அவ்வாறு எல்லாப் பஞ்சாயத்து யூனியனும் பஞ்சாயத்துக்களுக்கு ஒரு பங்கு நன்கொடையாகக் கொடுத்துதவுவதில்லை. இவ்வாறு நன்கொடை அளிக்கும் பொறுப்பை சட்ட ரீதியாக அமுலாக்க புதுப் பஞ்சாயத்துச் சட்டத்தில் மூலம் முடியும். பஞ்சாயத்து நடத்தும் சந்தை வருவாயில் ஒரு பங்கு, யூனியன் சபை பெறவும், பஞ்சாயத்து யூனியன் நடத்தும் சந்தை வருவாயில் ஒரு பங்கு பஞ்சாயத்தும் பெற சட்டத்திலே அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவைகளின் மூலம் எல்லாக் கிராமப் பஞ்சாயத்துக்கள் ஓரளவு சீரான வருவாய் பெற வாய்ப்பு ஏற்படுகிறது.

சோஷியலிஸ சமுதாயக் கொள்கை—கிராமிய வாழ்வில் ஒரு திருப்பம்

இந்த சோஷியலிஸ தத்துவம், வருவாய் இனத்தில் மட்டும் கையாளப்படவில்லை. செலவினத்திலும் பின்பற்றப்படுகின்றது. இதுவரை கிராம வேலைகள் மானியத் தொகையானது,அனேக துறையிலிருந்து கிடைத்து வந்தது. தேசியக் குடிநீர், சுகாதாரத் திட்டம், நீங்கலாக இதர எல்லாத் திட்டங்களையும் ஒன்றுபடுத்தி, எல்லாத் தொகுதிகளுக்கும் ஒரே கூட்டுத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன்படி, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் சபைக்கும் பள்ளிக்கூட கட்டட மானியமும், ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் குடிநீர் திட்டத்திற்கு கிராம இணைப்பு ரோடுகளுக்கும் மானியம் கிடைக்கும். கிராம இணைப்பு ரோடுகள் சீர்திருத்தம் செய்யும்பொழுது நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியனின் அடிப்படையில் மக்கள் நன்கொடை அளித்தால் போதும். உதாரணமாக ஏ வகுப்பில் 50 சத வீதமும், பி வகுப்பில் 40 சத வீதமும், சி வகுப்பில் 30 சத வீதமும், டி வகுப்பில் 20 சத வீதமும் மக்கள் நன்கொடை அளித்தால் போதுமானது. பாக்கியுள்ள தொகையை அரசாங்கத்திலிருந்து செலவு செய்யப்படும். குடி நீர்த் திட்டங்களை நிறைவேற்ற, 75 சத வீதம் அரசினர் மானியம் கொடுக்கப்படும். ஹரிஜன மக்கள், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் வாழும் பகுதியில் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற ஏற்படும் செலவு முழுவதையும் ஏற்றுக்கொள்ள அரசினர் முன்வந்துள்ளனர். இவைகளைப் போன்று இன்னும் அனேக விதிகளை ஏற்படுத்த அரசாங்கம் ஆலோசனை செய்து வருகின்றது. இத்தனை விஷயங்களையும் மனக் கண்முன் நிறுத்தி ஆழ்ந்து சிந்தனை செய்தால், எந்த அளவு சோஷியலிஸ சமுதாயக் கொள்கை கிராமங்களில் சட்ட ரீதியாக அமுலாக்கப்படுகிறதென்பது தெளிவாகும்.

பஞ்சாயத்து – அரசினர் இதழ்

மாதர் நலம் : சமூக நல போர்டைத் திருத்தி அமைத்தல்

(Reconstitution of State Social Welfare Board.)

கிராம அபிவிருத்தி வேலையின் முக்கியமான பகுதிகளில், கிராமப் பகுதிகளில் வாழும் மாதர் நலம், குழந்தைகளின் நலம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்ட நிகழ்ச்சிகளும் ஒரு பகுதியாகும். கடந்த பல ஆண்டுகளாக, தமிழ்நாடு அரசாங்கம் மாதர் நலத் துறையின் வாயிலாகப் பல பணிகளைச் செய்து வருகிறது. இந்தத் துறை, மாவட்டங்களில் பல மாதர் நல நிலையங்களை நடத்தி வருகின்றது. இந்த நிலையங்களில் மாதர் சங்கங்கள் அமைக்கப்பட்டு, கிராமப்புறப் பெண்களுக்குத் தையல், பின்னல் முதலான கைவேலைகளில் திறமை பெறக் கற்றுத் தரப்படுகிறது. மேலும், மாதர் நலத் துறை பல தொழில் நிலையங்களை நடத்தி, கிராமப் பெண்களுக்குப் பல கைத்தொழில்களில் பயிற்சி அளிப்பதன் மூலம்' அவர்களுடைய குடும்ப வருவாயைப் பெருக்கவும் துணை செய்கிறது. இந்தத் துறை எல்லா வசதிகளுடனும் கூடிய அரசாங்க சேவை இல்லங்களை நடத்தி, ஆதரவற்ற பெண்களை அதில் சேர்த்துக்கொண்டு, தகுந்த பயிற்சியளிப்பதன் மூலம் அவர்களுக்குச் சமுதாயத்தில் புனர்வாழ்வளிக்கிறது. மாதர் நலத் துறை இயக்குநர், [Director of Women's Welfare] ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு உதவி மாதர் நல அதிகாரி, மாதர் நல நிலையங்களில் பணியாற்றும் மாதர் நல அமைப்பாளர்கள் இவர்களுடன் பல்வேறு இடங்களில் பணியாற்றும் பணியாளர்கள் ஆகியோர் இத்துறையில் பணியாற்றுவோராவர்.

சமுதாய வளர்ச்சி வேலை முறையின் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் "சமூகக் கல்வி" என்றதலைப்பில் இடமளிக்கப்பட்டு இருக்கிறது. அதன்படி, மாதர் நலனும், குழந்தைகள் நலனும் கவனிக்கப்படுவதுடன், மாதர் சங்கங்களுக்கு, கருவிகள் வாங்கிக்கொள்ள உதவி நிதி அடிப்படையில் உதவுவதும், குழந்தைகள் நலன் மாதர் நலனுடன் தொடர்பு கொண்ட பிற வேலைகளுக்கும், பாலர் மன்றங்கள் நடத்தவும் மேற்குறிப்பிட்ட தலைப்பில் வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பணி ஒரு பெண்சமுதாய நல அமைப்பாளர், இரண்டு கிராம சேவக்குகள் ஆகியோர் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இவர்கள், சமுதாய வளர்ச்சி வேலை முறையின்கீழ் ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள திட்டமிடப்பட்ட மாதிரிப் பணியாளர்களின் ஒரு பகுதியாக விளங்குவர்.

1953-ம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தின் தீர்மானத்தின் பேரில், மத்திய சமூக நல போர்டு அமைக்கப்பட்டது. அந்த மத்திய சமூக நல போர்டின் ஆலோசனையின் மேல், மாநில சமூக நல ஆலோசனை போர்டு அமைக்க, மாநில அரசாங்கம் ஒப்புக்கொண்டு அதன்படி 1954-ல் முதல் போர்டு அமைக்கப்பட்டது. மாநில சமூக நல போர்டின் செயல்முறை என்று கருதப்பட்டன வருமாறு:

(அ) வட்டாரத்துக்கும் மத்திய அமைப்புக்கும் செய்தித் தொடர்பு ஏற்படுத்தும் ஒருதொடர்பு படுத்தும் அமைப்பாக பணியாற்ற,

(ஆ) தாமே முன் வந்து பணியாற்றும் அமைப்புக்களிடமிருந்து உதவி மானியம் கோரிவரும் மனுக்களை வரவேற்று ஆராய,

(இ) உதவி பெறும் அமைப்புக்களைக் கண்காணித்து அறிக்கையை அனுப்ப,

(ஈ) புதிய நல வேலை முறைகளை அமைப்பது குறித்தும் மாநிலத்தில் எங்கெங்கு அத்தகைய பணி செய்யப்பட வேண்டும் என்பது குறித்தும், மத்திய சமூக நல போர்டுக்கு ஆலோசனை கூற,

(உ) மாநில அரசாங்கம் எடுத்து நடத்தும் சமுதாய நல வளர்ச்சிப் பணிகளைத் திருப்பிச் செய்வதை விடக்கும் வகையில் இணைந்து பணியாற்ற,

(ஊ) இந்தக் குறிக்கோள் எய்தக் கூடிய வகையில் செய்யப்படும் பிற பணிகளை எடுத்து நடத்த—

மாநில போர்டின் வரவு செலவுத் திட்டத்தை ஆய்ந்து பின்னர் மாநில போர்டு ஆபீஸின் செலவில் 50 சத வீதத்தை மாநில அரசு மேற் கொள்ளும்.

இப்போதைக்கு, மாநில சமூக நல ஆலோசனை போர்டு' இரண்டு பெரிய பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது. முதலாவது, தாமே முன் வந்து சமுதாய நல வேலைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் உதவி மானியக் கோரிக்கை மனுக்களை மத்திய சமூக நல போர்டுக்கு சிபாரிசு செய்வது சம்பந்தமான வேலைகள். அவ்வாறு உதவி பெறும் நிறுவனங்களை மேற்பார்வையிடுதல், அவற்றுக்குத் துணையாக இருத்தல் ஆகியவையும் இப் போர்டின் தொடர்ந்த பணியாகும். தாமே முன் வந்து சமுதாய நலப் பணிகளை மேற்கொண்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருளாதார உதவி அளிப்பதன் மூலம் அவற்றை வலிவு பெறச் செய்து, திட்டமிடப்பட்ட வளர்ச்சிக்கு அடிப்படை அமைப்பதற்கே உதவி மானியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இரண்டாவதாக, கிராமப் புறங்களில் சமுதாய நலத் திட்டங்களை நடத்திவைப்பது சம்பந்தமான வேலைகளும் இந்தப் போர்டின் பணிகளாகும். இதுவரை பரப்பப்படாத கிராமப் பகுதிகளிலெல்லாம் சமுதாய நலச் செயல் முறையைக் கொண்டு வருவதும், சமுதாய நலப் பணிகளைப் பரப்புவதுமான பணிகளில் அதிகாரப் பற்றற்ற பெண்

தொண்டர்கள், மாநில நிலையிலிருந்து மாவட்ட நிலை, கிராம நிலை வரை எல்லா நிலைகளிலும் விரும்பிப் பங்கு கொண்டு பணியாற்றுமாறு செய்வதே இச் சமூக நலத் திட்ட நிறுவனங்களின் சிறப்பான அம்சங்களாகும். மாதர் நலம், குழந்தைகள் நலம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்ட இத்திட்டங்களின் நிர்வாகம், மாநில சமூக நல ஆலோசனை போர்டினால் நியமிக்கப்படும் அதிகாரப் பற்றற்ற தலைவர், உறுப்பினர்களுடன் கூடிய திட்ட நிறைவேற்றக் குழுக்களினால் நடத்தப்படும். இந்தத் திட்டங்கள் முதன் முதலில் சமுதாய வளர்ச்சிச் செயல் முறைத் திட்டத்தில் சேராமல், தனியாகவே திட்டமிடப் பட்டதுடன், மாவட்டங்களின் மூலை முடுக்குகளிலெல்லாம் இருக்கும் சமூக நல நிலையங்களை உள்ளடக்கி ஒரு ரெவின்யூ மாவட்டத்துக்கு இரண்டு அல்லது மூன்று சமூக நலத் திட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பின்னால் இத் திட்டங்களின் அமைப்பு, ஒரு இணைந்த அமைப்பின் கீழ் மாற்றப்பட்டது. அந்தந்தப் பகுதிகளின் இணை அமைப்பும்—சமுதாய நலத்திட்டத்துடன் செயல்படும் கால மும்—தொடங்கப்பட்டு விட்டன. ஐந்தாண்டுகளின் தனித் தனி இரண்டு நிலைகளின் அடிப்படையில் சமுதாய வளர்ச்சித் திருத்திய செயல் முறைகளுக்கு ஒத்து வருமாறு, இத்திட்டங்கள் மேலும் திருத்தி அமைக்கப் பட்டன. இத்திட்டத்திற்குட்பட்ட, மேற்பார்வை நிலையில் முக்கிய சேவிகைகளையும், கிராம சேவிகைகள், மருத்துவத் துணைவர்கள், கைத்தொழில் துணைவர், ஆகியோரையும் மாநில போர்டின் பணியாளர்கள், திட்ட நிறைவேற்றக் குழுக்களின் பணியாளர்கள் ஆகியோருடன் சேர்த்து மாநில போர்டு நிர்வகிக்கிறது.

1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் இப்பொழுது படிப்படியாக அமுல் செய்யப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்கீழ், 1961 அக்டோபர் 2-ம் தேதிக்கு முன்னால் இந்த மாநிலத்தின் வளர்ச்சி வட்டாரங்களில், மூன்று பகுதிகளாகப் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட வேண்டும். மேலும், இச்சட்டப்படி, தாய்-சேய் நலப் பணிகளை முன்னேற்றமடையச் செய்யும் பொறுப்பு பஞ்சா யத்து யூனியனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் 66-வது பிரிவு, அரசாங்கம், சமுதாய வளர்ச்சிப் பணிகளை யும் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்க இடமளிக்கிறது. இப்பணிகளை மூன்று பகுதி பஞ்சாயத்து யூனியன்களிடமும் முறையே 1-4-61, 1-7-61, 1-1-62 தேதிகளில் ஒப்படைப்ப தென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

புதிய நிலைகளுக்கேற்ப, மாதர், குழந்தை நலன் திட்டங்களை நிறைவேற்றும் விஷயத்துடன் தொடர்பு கொண்ட அமைப்புக்களைத் தகுந்தவாறு இணைத்துத் திருத்தி அமைப்பது சம்பந்தமான பிரச்னையை மாநில அரசாங்கம் சில காலமாக ஆராய்ந்து வருகிறது. இப்பிரச்சினை பற்றிய திருத்தியமைக்கும் யோசனைகளை அரசாங்கம், மாநில சமுதாய நல ஆலோசனை போர்டுடன் கலந்தாலோசித்துள்ளது. அதன் பேரில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இம்முடிவுகள், மத்திய சமூக நல போர்டுடன் ஒத்திருக்கும்படி அமைத்திருக் கின்றன.

மாநில சமூக நல போர்டு

(1) மாநில சமூக நல ஆலோசனை போர்டு இனி மேல் மாநில சமூக நல போர்டு என்று குறிக்கப்படும். இந்த அமைப்பும், மாநிலக் கதர்-கிராமத் தொழில் போர்டைப் போல், இந்த அமைப்பின் மாற்றம் சட்டபூர்வமான அமைப்பாக மாறும் வகையில் வேலை முறையில் தொடர்பு உண்டாக்கப்படவேண்டும் என்பதே அரசாங்கத் தின் நோக்கமாகும். இப்பொழுது மாதர் நலத் துறைக் கென்று இருந்து வரும் ஆலோசனைக் குழு கலைக்கப்படும்.

(2) மாநில அரசாங்கம், மத்திய சமூக நல போர்டின் யோசனையுடன், மாநில சமூக நல போர்டைத் திருத்தி அமைக்கும்.

(3) அந்தப் போர்டில் தலைவருடன் 21 பேர் இருப்பர்.

அதிகாரப் பற்றற்றவர்கள் 12 பேர். சென்னை நீங்க லாக ஏனைய மாவட்டங்களிலிருந்து மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் ;

அதிகாரிகள்—4 பேர்.

அதிகாரப் பற்றற்றவர்கள்—5 பேர்.

(4) மாநில சமூக நல போர்டு, மாநிலத்தில் மாதர் நலம்-குழந்தை நலம் சம்பந்தமான திட்டத்தைப்பற்றிய கொள்கைகளை வகுக்கும் விஷயங்களிலும், இத்திட்டத் தின்கீழ் வரும் எல்லாச் செயல் முறைகளையும் அமைத்து நிறைவேற்றும் விஷயங்களிலும்—பொறுப்பேற்றுக் கொள் ளும். பொருளாதாரச் செலவு முறை, அதை நிறை வேற்றுதல், திட்ட வளர்ச்சி விளக்கம், பயிற்சிக்கான வேலைத் திட்டங்கள் தயாரித்தல், அதிகாரப் பற்றற்ற நிறுவனங்களுக்கு அரசாங்க மானியங்களைச் சிபாரிசு செய்தல், பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பது சம்பந்த மாக அரசாங்கத்துக்கு யோசனை கூறுதல், மாநில அரசாங்கத்திற்கு யோசனை கூற வேண்டிய பிற எல்லா விஷயங்களும் ஆகிய இத்தகைய திட்ட வேலைகள் எல்லா வற்றையும் விரிவாக ஆராயும் பொறுப்பு மாநில சமூக நல போர்டுக்கு உண்டு மாநில போர்டு தானே தயாரித்து அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விதிகளின்படி, தன் அன்றாட வேலைகளைக் கவனிக்கும்.

(5) மாநில போர்டு இரண்டு மாதத்துக்கு ஒரு முறையாவது கூடவேண்டும். அத்தகைய எல்லாக் கூட்டங்களுக்கும் போர்டின் தலைவரே தலைமை வகிக்க வேண்டும்.

(6) மாநில போர்டின் தலைவரும், உறுப்பினர்களும் அவர்கள் சம்பந்தப்பட்ட பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து, ஆங்காங்கு நடக்கும் வேலைகளுக்குத் துணை புரிய வேண்டும்.

(7) மாநில போர்டின் திட்டத்தை நிறைவேற்ற ஒரு முழுநேரச் செயலாளர் இருப்பார். அத்திட்ட நிறைவேற்றத்திற்கு அவரே பொறுப்பாவார்.

(8) மாதர் நலம்—குழந்தைகள் நலம் சம்பந்தமான மாநிலத்தின் எல்லாத் திட்டங்கள் விஷயத்திலும் அரசாங்கத்துக்கும், மத்திய சமூக நல போர்டின் உதவி மானியத்தினுல் நிறை வேறும் திட்டங்கள் விஷயத்தில் மத்திய சமூக நல போர்டுக்கும், மாநில போர்டு கட்டுப்பட்டு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

(9) மாநில சமூக நல ஆலோசனை போர்டு அலுவலகமும், மாதர் நல இயக்குநர் அலுவலகமும் ஒரு அலுவலமாக இணைக்கப்படும்.

(10) மாதர் நலத்திட்ட இயக்குநராகப் பணியாற்றும் மாநில போர்டின் செயலாளர், திருத்தியமைக்கப்பட்ட மாநில சமூக நல போர்டின் மொத்த மேற்பார்வையையும், நிர்வாகத்தையும் மேற்கொள்வார்.

(11) மாதர் நலத் திட்டத்தைச் செயல்படுத்தும் பணியாளர்களாக அத்திட்ட இயக்குநரின் தலைமையில், (1) மாதர் நலத் துறையினர் (2) சமூகக் கல்வி அமைப்பாளர்கள்), சமுதாய வளர்ச்சி வட்டாரங்களின் (பெண்கள்) (3) கிராம சேவிகள் மாநில சமூக நல ஆலோசனை போர்டு பணியாளர்கள் ஆகியோர் பணியாற்றுவர். அவர்கள் மாநில சமூகநல போர்டின்கீழ், மாதர் நலத்திட்ட இயக்குநரின் தலைமையில் இயங்கும் துறையில் கீழ் பணியாற்றுவோராவர். இம்மூன்று பகுதிகளில் பணியாற்றும் பொது வகையான இப்பணியாளர்கள் ஒரே வகையினராகச் சேர்க்கப்படுவர். 1961-ம் வருடம் மார்ச்சு மாதம் 31-ந்தேதியில் பணியாற்றிவந்த இம்மூன்று பிரிவுப் பணியாளர்களின் நலன்களையும் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். இந்தப் பணியாளர்களெல்லாம் அன்றாட நிர்வாகத்தில் மாதர் நலத்திட்ட இயக்குநரின் கீழும், மாநில சமூக நலப் போர்டின் மொத்த மேற்பார்வைக்குக் கட்டுப்பட்டும் பணியாற்றுவர்.

(12) இயக்குநர் **(செயலாளர்)** மாநிலச் சுற்றுப்பயண அதிகாரியாக இருப்பார். அவர் செயலாளர் என்ற முறையில் சமூக நல போர்டின் எல்லாக் கூட்டங்களுக்கும் செல்வார். போர்டினுல் வகுக்கப்படும் திட்ட நிறைவேற்றத்துடன் தொடர்பு கொண்ட எல்லா நிர்வாக வேலைகளுக்கும் அவரே பொறுப்பாவார். போர்டின் மொத்த மேற்பார்வைக்குட்பட்டு, திருத்தி அமைக்கப்பட்ட இத்துறையின் பணியாளர்க்குத் துறைத்தலைவராக அதிகாரம் பெற்று விளங்குவார். அவருக்கு, நிர்வாகம், திட்டம், பயிற்சி, உதவி மானியங்கள் முதலானவற்றுடன் தொடர்பு கொண்ட வேலைகளைக் கவனிக்க, தேவையான பணியாளர்களின் துணை இருக்கும்.

மாவட்ட நிலையில்—அமைப்பு முறை

(அ) ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்துக்கும், மாதர் நலம், குழந்தைகள் நலம் பற்றிய திட்டத்திற்கென்று ஒரு குழு இருக்கும்.

(ஆ) மாநில சமூக நல போர்டுக்கு, சம்பந்தப்பட்ட ரெவினியூ மாவட்டத்திலிருந்து வந்திருக்கும் உறுப்பினர், வளர்ச்சி மாவட்டத்தில் அமைக்கப்படும் குழுவுக்குத் தலைவராக இருப்பார்.

(இ) மாவட்டக் குழு, வளர்ச்சி மாவட்டங்களின் வட்டாரக் குழுக்களின் தலைவர்களடங்கிய குழுவாக அமையும்.

(ஈ) மாநில போர்டுடன் கலந்தாலோசித்து, தாமேமுன்வந்து பணியாற்றும் சமூகத் தொண்டர்கள் நால்வரை குழு சேர்த்துக்கொள்ளலாம்.

(உ) இந்தக் குழு, மாதர் நலம், குழந்தைகள் நலம் பற்றிய திட்டத்தின் விளக்கம், மதிப்பீடு முதலான பொறுப்புக்களையும், அவ்விளக்கத்தின் முடிவுகளை மாநில போர்டுக்கு அறிவிக்கும் பொறுப்பும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(ஊ) ஒவ்வொரு ரெவினியூ மாவட்டத்துக்கும் ஒரு துறைபற்றிய (Departmental) அதிகாரி இருப்பார். அவரே மாவட்டக் குழுக்களுக்குப் பதவியால் வந்த (Ex-Officio) செயலாளராகப் பணியாற்றுவார். மாவட்டத்தில் இருக்கும் அந்த அதிகாரி பல்வேறு வட்டாரங்களில் சுற்றுப் பயணம் செய்து, வட்டாரங்களில் உள்ள மாதர்நலக்குழுக்களுக்கும், முக்கிய சேவிகைகள், கிராம சேவிகைகள் ஆகியோருக்கும், தேவையான ஆலோசனையும் வழி வகையும் கூறுவார். இந்த வேலைகளை மேற்கொள்ளும் விஷயத்தில் அவர் மாவட்டக் குழுக்களின் துணையையும் ஆலோசனையையும் மேற்கொள்வார்.

வட்டார நிலையில்—அமைப்பு முறை

(அ) 1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 66-வது பிரிவின்படி, சமுதாய வளர்ச்சித் திட்டம் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து, மாதர் நலம், குழந்தைகள் நலம் சம்பந்தமான வேலைகளை பஞ்சாயத்து யூனியனின் ஒரு குழு நிர்வகிக்கும்.

(ஆ) அந்தக் குழுவின் அமைப்பு வருமாறு.—

(i) பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் தலைவர் (உறுப்பினராக).

(ii) பஞ்சாயத்து யூனியனின் மூன்று பெண் உறுப்பினர்கள்.

(iii) பஞ்சாயத்து வளர்ச்சி வட்டாரத்தின் பஞ்சாயத்துக்களின் பெண் உறுப்பினர்களிலிருந்து ஐந்து உறுப்பினர்கள்.

(iv) மாநில போர்டின் சிபாரிசின் பேரில், உள்ளூரிலுள்ள தாமே முன்வந்து பணியாற்றும் பெண் தொண்டர்கள் என்ற வகையில் குழுவில் சேர்த்துக்கொள்ளப்படும் உறுப்பினர்கள்.

(v) ஆணையாளர் (Commissioner)

இந்தக்குழுவும், பஞ்சாயத்து யூனியனின் பிற குழுக்களைப் போன்றே அதிகாரங்களைப் பெற்றிருக்கும். பஞ்சாயத்து வளர்ச்சியின் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள மாதர் நல குழந்தைகள் நல மானியங்களைச் செலவழிக்கும் விஷயம், பஞ்சாயத்து யூனியன்களின் தாய்-சேய் நலத்திட்டங்கள் நிர்வாக சம்பந்தமான விஷயம் ஆகியவை அடங்கிய மாதர் நல குழந்தைகள் நலத் திட்டத்துடன் தொடர்பு கொண்ட வேலைகளின் நிர்வாகத்துக்கு இந்தக் குழு பொறுப்பாளியாகிறது.

(இ) பஞ்சாயத்து யூனியனின் இந்த வகைவிஷயங்களில் திட்டம் சம்பந்தமான கொள்கை வகுப்பதும், மாவட்ட நிலையிலுள்ள குழுவின் துணை தேவைப்படும் பொழுது பெற்று, இத்திட்டங்களை நிறை வேற்றுவதுமான பொறுப்புக்கள் இக்குழுவினைச் சாரும்.

(ஈ) இந்தக் குழு 'மாதர் நலக் குழு' என்று அழைக்கப்படும்; இக்குழுவின் தலைவராக ஒரு பெண் இருப்பார்.

(உ) ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் ஒரு முக்கிய சேவிகையும், இரண்டு கிராம சேவிகைகளும் இருப்பர். இந்தப் பணியாளர்கள், பஞ்சாயத்து யூனியனிடம் விடப்பட்டுள்ள வளர்ச்சிப் பணி அமைப்பின் உறுப்பினர்களாக இருப்பர். பஞ்சாயத்து யூனியனுடைய மாதர் நலக் குழுவின் பொது மேற்பார்வை துணையுடனும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனரின் அன்றாட நேரடி நிர்வாகத்தின் கீழும் இவர்கள் பணியாற்றுவர்.

மாநில அரசாங்கத்தின் உதவி மானியத் திட்டம்

தாமே முன் வந்து பணியாற்றும் மாதர் நல அமைப்புக்களுக்கு உதவி-மானியம் அளிக்க என்று மாநில அரசாங்கத்திடம் இருக்கும் நிதிகளும் மாநில சமூகநல போர்டின் சிபாரிசின் பேரிலேயே நிர்வகிக்கப்படும்.

மத்திய சமூக நலபோர்டு, மாநில சமூகநலபோர்டு ஆகியவற்றின் தொடர்பு

(அ) மத்திய சமூகநல போர்டிடமிருந்து மாநில சமூக நல போர்டு மாதர் நல—குழந்தைகள் நலத் திட்டங்கள், பொதுக்கொள்கைகள் பணியாளர்களின், பயிற்சி, தேர்வு முதலானவைபற்றிய யோசனைகள் முதலியவை பற்றி எல்லா உதவியும், விளக்கமும் பெறலாம். இத்தகைய யோசனைகளை மாநில போர்டு கூட்டங்களில் விவாதித்து, நிறைவேற்ற வேண்டிய திட்டத்தை மாநில அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரிலும் துணையுடனும் நிறைவேற்றும்.

(ஆ) மாநில சமூகநல போர்டு, மத்திய சமூக போர்டின் உதவி மானியத் திட்டத்தில், தாமே முன் வந்து பணியாற்றும். மாதர் நல நிறுவனங்களிடமிருந்து வரும் மனுக்களைப்பெற்று ஆராய்கின்ற அமைப்பாகத் தொடர்ந்து பணியாற்றும்.

(இ) மாநில சமூக நல போர்டு, உதவிபெறும் நிறுவனங்களை மேற்பார்வையிட்டு, அவற்றின் பணிகளைப் பற்றிய அறிக்கையை அனுப்பும் வேலையைத் தொடர்ந்து செய்யும்.

(ஈ) மத்திய போர்டின் உதவி மானியத் திட்டத்தின் கீழ் புதியநலப் பணிகளையும், திட்டங்களையும் தொடங்க, மத்தியநல போர்டுக்கு மாநில போர்டு யோசனை கூறவும் துணை இருக்கவும் செய்யும்.

(உ) இந்நலப் பணிகள் மேலும் பெருக்க, மாநில சமூகநல போர்டு மத்திய சமூகநல போர்டுக்கும், மாநில அரசாங்கத்துக்கும் துணையாக இருந்து பணியாற்றும்.

இந்த மாற்றங்கள் 1961-ம் ஆண்டு ஜூன் மீ 1உ-யிலிருந்து அமுலுக்குவரும். மாதர் நலமும், குழந்தைகள் நலமும் வளரத் தீவிரத் திட்டம் வகுக்க, இந்த முக்கியமான புனரமைப்புப் பெரிதும் துணையாக இருக்கும் என்று அரசாங்கம் நம்புகின்றது.

[கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு மே 20-தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1433.]

அரசாங்க மரங்களின் பராமரிப்பைப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்தல்

(Entrustment/vesting of State owned trees to Panchayats.)

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தில், பொதுச் சொத்துக்களைப் பராமரித்துப் பாதுகாக்கும் வேலையில், பஞ்சாயத்துக்களுக்கு உள்ள பங்கினை வலியுறுத்தி, அதற்கு முழு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீர் நிலைகள், சிறிய நீர்ப்பாசன ஆதாரங்கள், பாதைகள், சில குறிப்பிடப்பட்ட புறம்போக்குகள், ஒதுக்கப்படாத காடுகள் முதலானவை, அவைகளை திறமையான முறையில் முழு அளவுக்கு உபயோகப்படுத்தப்பட வேண்டி, பஞ்சாயத்து யூனியன்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. கிராமப் புறங்களில், பொது நிலங்களில் உள்ள மரங்கள் மற்றுமொரு முக்கியமான சொத்தாகும். தங்களிடம் முழுமையும் ஒப்படைக்கப்பட்டுள்ள பொது நிலங்களையும், தங்களுடைய மேற்பார்வையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களையும், கிராமத்தின் விறகு, தீவனம் ஆகிய தேவைகளுக்காவும், அதனுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும், மரங்களை நட, அந்த நிலங்களைப் பஞ்சாயத்துக்கள் உபயோகப்படுத்திக்

கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முறையில் அவைகளுக்கு ஓர் உற்சாகத்தை ஊட்டி, அவைகளின் பொறுப்புக்களை அவை நிறைவேற்றிவைக்கும் வகையில், பொது நிலங்களில் இப்பொழுதுள்ள மரங்களை, சிறந்த முறையில் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டி, அவைகளைப் பஞ்சாயத்துக்களின் வசம் ஒப்படைப்பது மிகவும் அவசியமாகிறது. மரங்களைப் பாதுகாத்து, பராமரிக்கும் பொறுப்பினை கிராமத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்தின் கையில் மாற்றுவதில் எவ்வளவோ நன்மைகள் உள்ளன. அப்படிப்பட்ட ஒரு மாற்றம், கிராம மக்களிடையே, தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பவை ஒரு பொது சொத்து என்ற உணர்வையும், அதன்மூலம் அவை அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட ஒரு பலமான பாதுகாப்பையும் தேடித் தரும்.

2. ஆகவே, பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்ட, சொந்தமாகக் கொடுக்கப்பட்ட மரங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் பஞ்சாயத்துக்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். அதனால் பஞ்சாயத்துக்களின் வருவாய் பெருகவும் வாய்ப்பு இருக்கும் என்று அரசாங்கத்திற்கு யோசனை சொல்லப்பட்டது. அதுமட்டுமல்லாமல், அப்படிச் செய்தால், மரங்கள் சரிவர கவனிக்கப்படாமல், சரியான முறையில் பராமரிக்கப் படாமல், அதனால் வருவாய் குறைவு ஏற்படுகிறது என்ற நிலை இருக்காது. ஏனென்றால், பஞ்சாயத்துக்கள் பொறுப்புணர்ச்சியுடன், மிகவும் கவனமாகவும் இந்த வேலையில் செயலாற்றும் என்றும் சொல்லப்பட்டது.

3. அரசாங்கத்தின் பல்வேறு துறைத் தலைமை அதிகாரிகளுடன், அரசாங்கம் இதுபற்றி பரிசீலனை செய்தது. அதன்படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் நிலங்கள் வகைப்படுத்தப்பட்டு, அந்த நிலங்களில் உள்ள மரங்கள் சம்பந்தப்பட்ட பல்வேறுபட்ட பொறுப்புக்களும், அததற்கு ஏற்ற வகையில், பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது. இந்த விஷயத்திற்காக, கீழ்க்குறிப்பிட்ட நிலங்களை வகைப்படுத்துதல் முறை கையாளப்படும் :—

(அ) பட்டா நிலம்.

(ஆ) 1—1—61-ல் தனிப்பட்ட முறையில் கொள்ளப்பட்ட நிலம்.

(இ) பெருவழித்துறை, கிராமப் பணிகள் துறை பாதுகாப்பில் உள்ள ரோடு புறம்போக்குகள், மாநில அரசாங்கத்தின் நேரடிப் பராமரிப்பில் உள்ள சாலை வகைகள்.

(ஈ) பொது மராமத்துத் துறையின் புறம்போக்குகள்.

(உ) 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் கண்டுள்ளபடி, பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைக்கப்பட்ட புறம் போக்கு நிலங்கள்.

(ஊ) 1958-ம் பஞ்சாயத்துக்கள் சட்டம் 86 (IV) பிரிவின் கீழும், 4—4—60 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 608-ன் படியும், பராமரிப்புக்காக பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலங்கள்.

(எ) மேற் குறிப்பிடப்பட்டவை அல்லாமல், ஒப்படைக்கப்படாத பொது நிலங்கள்.

4. **பட்டா நிலம்** : பட்டா நிலங்களில் உள்ள மரங்களின் மீது பஞ்சாயத்துக்களுக்கு ஒரு உரிமையும் கிடையாது. அப்படிப்பட்ட மரங்களைப் பொறுத்தவரையில், அவைகளின் பேரில் அரசாங்கத்திற்கோ, பட்டாதாரர்களுக்கோ உள்ள உரிமைகளில், இந்த உத்தரவு ஒன்றும் மாற்றம் செய்யாது.

5. **தனிப்பட்டவர்கள் ஆதிக்கத்தில் உள்ள மற்ற நிலங்கள்:** 1—1—61-க்கு முன்பு அரசாங்க நிலங்களில் தனிப்பட்ட நபர்களால் மரங்கள் நடப்பட்டிருந்தால் அவையும், அல்லது 1—1—61-க்கு முன்பே தனிப்பட்டவர்களால் கொள்ளப்பட்ட அரசாங்க நிலங்களில் மரங்கள் இருந்தால் அவை மீதும், தனிப்பட்டவர்களின் ஆதிக்கமானது ஒழுங்கு படுத்தப்பட்டோ அல்லது காலி செய்யப்பட்டோ இல்லை யென்றால், அப்படிப்பட்டநிலங்களின் மீது பஞ்சாயத்துக்களுக்கு உரிமை கிடையாது. தனிப்பட்டோர் உரிமையானது, ஆக்கிரமிப்புச் செய்து கொண்டவர் வசமோ, அல்லது மற்றவர்களிடமோ நிலத்தை ஒப்படைத்து, சட்டப்படி சட்டமுறையாக்கப்பட்ட விஷயங்களில், அந்த நிலங்களில் உள்ள மரங்கள் மீது பஞ்சாயத்துக்கோ, பஞ்சாயத்து யூனியனுக்கோ உரிமை கிடையாது. ஆனால், அந்த உரிமை தள்ளுபடி செய்யப்பட்டாலும், உரிமை நீக்கப்பட்டாலும் அம் மரங்களின்மீது பஞ்சாயத்துக்களுக்கு உரிமை உண்டு. நிலம் எந்த வகையில் உள்ளதோ, அந்த அடிப்படையில், இந்த ஆணையில் உள்ள விதிமுறைகளின்படி அந்த உரிமை உண்டு.

6. **பெருவழித்துறை, கிராமப்பணிகள் துறையினரின் ரோடு புறம்போக்குகள்:**—எல்லாப் பெரு வழிகளின் இருமருங்கிலும் மரங்களை, நட்டுப் பாதுகாத்து பராமரிக்கும் பொறுப்பு இப்பொழுது பெருவழித்துறை, கிராமப் பணிகள் துறையினருடையது. இப்பொழுது உள்ள நடைமுறைப்படி, பட்டுப்போன, காய்ந்துபோன, உபயோகத்திற்கு லாயக்கில்லாத மரங்கள் எல்லாம் பொது ஏலத்தில் விடப்படுகின்றன. அப்படிப்பட்ட சாலைகளில் உள்ள மரங்களின் உரிமை, பாதுகாப்பு போன்ற எல்லா விஷயங்கள் பற்றிய அதிகாரமும் பெருவழித்துறை, கிராமப் பணிகள் துறைகளிடமே தொடர்ந்து இருந்து வரும். புதிய மரங்களை நடுதல், அவைகளைப் பாதுகாத்து வளர்த்தல் போன்ற பொறுப்புக்களை, அந்தத் துறையே தொடர்ந்து ஏற்றுக்கொண்டு வேலை செய்யும். கடந்த நான்காண்டுகளில் இந்த மரங்களை விற்றுக்கிடைத்த தொகையில் ஆண்டுச் சராசரி என்னவோ, அந்தத் தொகைக்குச் சமமான குத்தகைப்பணம் பஞ்சாயத்து யூனியன் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில், இப்படிப்பட்ட மரங்களின் மகசூலை உபயோகித்துக் கொள்ள பஞ்சாயத்து யூனியனுக்கு, எல்லா மரங்களையும் பெருவழித்துறையினரும், கிராமப் பணிகள் துறையினரும் குத்தகைக்கு விட்டுவிட வேண்டும் என்று அரசாங்கம் இப்பொழுது உத்தரவு இடுகிறது.

7. பட்டுப்போன, காய்ந்து போன மரங்களும் பஞ்சாயத்து யூனியனிடம் விற்பனைக்கு ஒப்படைக்கப்படும். பெருவழித்துறை, கிராமப் பணிகள் துறைக்கு, ஒரு விலையை பஞ்சாயத்து யூனியன் கொடுக்க வேண்டும். இந்த விலை காட்டு வரி விகிதாச்சாரத்தில் நிர்ணயிக்கப்படும். பெருவழித்துறை பொறுப்பிலிருக்கும் ஜூனியர் என்ஜினீயர் பட்டுப்போன, காய்ந்து போன மரங்கள் இவை இவை என்று சான்றிதழ் வழங்க வேண்டும். அவர், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன், மரங்களை ஏற்றுக்கொண்டு விற்பனை செய்யும்படி அறிக்கை விடுவார்.

8. பஞ்சாயத்து யூனியன், பெருவழித்துறையின் சாலையின் ஓரங்களில் மரங்கள் நடத் தேவையில்லை. அப்படிப்பட்ட சாலைகளின் ஓரங்களில் மரங்கள் நட பஞ்சாயத்து விரும்பினால், பெருவழித்துறை, கிராமப் பணிகள்துறை விதிக்கின்ற சில நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு, மரங்கள் நட, தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 64 (a) பிரிவு இடம் அளிக்கிறது.

அப்படிப்பட்ட சட்டதிட்டங்களேயும், நிபந்தனைகளேயும் பெருவழித்துறை, கிராமப் பணிகள் துறையினரின் உதவி என்ஜினீயர்களுக்கு நிர்ணயிக்க அதிகாரம் உண்டு.

9. இவை அத்தனையும் ரோடு புறம்போக்குகளைத் தான் கட்டுப்படுத்தும். பெருவழித்துறை, கிராமப் பணிகள்துறையின் பாதுகாப்பில் உள்ள மற்றவகைப் புறம்போக்குகளுக்கு அல்ல.

10. **பொது மராமத்துத்துறை புறம்போக்குகள்.**—பொது மராமத்துத் துறையினரின் அதிகாரத்தில் உள்ள புறம்போக்குகளைப் பொறுத்த வரையில், இமே விவரிக்கப்பட்டுள்ள நடைமுறைகள்—நீர்நிலைகள், நீர் நிலை ஆதாரங்கள் சம்பந்தப்பட்ட நிலங்களுக்குத்தான் பொருந்துமே தவிர, கட்டடம் கட்டுதல் போன்ற மற்ற வேலைகள் சம்பந்தப்பட்ட நிலங்களுக்குப் பொருந்தாது.

11. நீர்நிலைகள், நீர்வழிகள் சம்பந்தப்பட்ட நிலங்களுக்குக்கூட, பொதுமராமத்துத்துறை இந்த உத்தரவிலிருந்து சில வகையான நிலங்களை விலக்கி வைக்கின்ற வகையில் சில விலக்கங்களை ஏற்படுத்தும். அரிப்புத் தடுப்புக் கரைகள் அமை ல் அல்லது மற்ற இலாகா சம்பந்தப்பட்ட வேலைகளுக்காக வேண்டிய நிலப் பரப்புகள் இந்த வேலை முறைகளிலிருந்து விலக்கப்படும். இந்த வேலைகளில் சேராது என்று உள்ள பொதுமராமத்துத்துறைப் புறம்போக்கு நிலங்கள் என்றவகையில் உள்ள நிலங்களைப்பற்றி ஒரு பட்டியல் தயாரித்து, அதைப் பொது மராமத்துத்துறை, மாவட்டக் கலெக்டருக்கு அனுப்பி வைக்கும்.

12. அப்படி விலக்கப்படாத மற்ற எல்லா இடங்களைப் பொறுத்தவரையில், மரம் நடுதல், பாதுகாத்தல், பராமரித்தல், கழிவுகளைப் பயன்படுத்துதல், பட்டுப் போன மரங்கள், காய்ந்துபோன மரங்களை விற்றல், அதனால் வரும் வருவாயைப் பெறுதல் போன்ற எல்லா அம்சங்களும் இனிமேல் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தைப் போய்ச் சேரும்.

13. பொது மராமத்துத்துறை இது சம்பந்தமாக விதிக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மரம் நடுதலை ஒரு திட்டமான முறையில் அபிவிருத்தி செய்தலுக்காக வேண்டிய முறையில், இந்த இடங்களில் மரங்களை நடுதல், மகசூலை அநுபவித்தல், காய்ந்துபோன, பட்டுப்போன மரங்களை விற்றுவிடுதல், இதுபோன்ற மற்ற வேலைகளேயும் பஞ்சாயத்து செய்யலாம். இந்த நிலங்களில் உள்ள மரங்களின் மகசூலை ஏலம் விடவும், காய்ந்துபோன, பட்டுப்போன மரங்களை ஏலம் விடுவதையும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து செய்யும்.

14. **ஒப்படைக்கப்பட்ட பொது நிலங்கள்.**—மாட்டுத் தொழுவங்கள், வண்டிநிலையங்கள், இடுகாடுகள், சுடுகாடுகள், தோப்புகள், ஒதுக்கப்படாத காடுகள் உள்ளிட்ட சில புறம்போக்குகள் 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ், பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. அப்படி ஒப்படைக்கப்பட்ட எல்லா நிலங்களிலும் உள்ள மரங்களைப் பொறுத்த வரையில், அரசாங்கத்திற்குள்ள எல்லா அதிகாரங்களும் சம்பந்தப்பட்ட கிராமப் பஞ்சாயத்தினிடம் மாற்றப்படும். அப்படிப்பட்ட புறம்போக்குகளில் உள்ள மரங்களின் மகசூலை அநுபவிக்கவும், காய்ந்துபோன, பட்டுப்போன மரங்களிமீது உரிமை கொண்டாடவும் பஞ்சாயத்துக்கு உரிமை உண்டு. அந்த வகையான மரங்களின் மகசூல் மற்றும் சாய்ந்துபோன, பட்டுப் போன மரங்களைப் பஞ்சாயத்து ஏலம் விடும். அதனால் வருகின்ற வருவாயைத் தன்னுடைய சொந்த நிதியில் பஞ்சாயத்து சேர்த்துக் கொள்ளலாம்.

15. **பராமரிப்புக்காக பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள புறம்போக்கு இடங்கள்.**—ஒப்படைக்கப்பட்ட பொது நிலங்களுக்கு என்ன நிலையோ, அதே நிலை இதற்கும் உண்டு.

16. **மேற் குறிப்பிடாத, மற்ற ஒப்படைக்கப்படாத பொது நிலங்கள்.**—இந்த நிலங்களில் உள்ள மரங்களின் மீது பஞ்சாயத்துக்கு யாதொரு விதமான அதிகாரமும் இடையாது. மரம் நடுதல், பாதுகாத்தல், பராமரித்தல், அதை அனுபவித்தல் எல்லாம் சம்பந்தப்பட்ட இலாகாவினிடமேதான் இருக்கும்.

17. **2-சி பட்டா முறையில் உள்ள தனிப்பட்ட உரிமைகள் போன்றவை.**—பொது நிலங்களில் ஒப்படைக்கப்பட்டவை, (மற்ற எந்த வகையாயினும்) உள்ள மரங்களைப் பொறுத்தவரையில் 2-சி பட்டா வகையில் உள்ள தனிப்பட்ட உரிமைகள், இந்த உத்தரவினுல் துளிக்கூட பாதிக்கப்படமாட்டாது. அவை அப்படியேதான் இருக்கும். தனிப்பட்டவரிடமிருந்து வசூல் செய்யப்படும் 2-சி நில வருவாய்த் தொகை முழுதும் பஞ்சாயத்துக்களின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

18. இந்த ஆணை பிறப்பித்த தேதியிலிருந்து, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் சிபார்சின்பேரில் அல்லாமல், புதிய 2-சி பட்டா ஒன்றும் அளிக்கப்படமாட்டாது. அப்படி 2-சி பட்டா அளிக்கப்பட்டாலும், பஞ்சாயத்துக்கள் நிர்ணயிக்கின்ற விகிதாச்சாரத்தில் வரிகட்டப்பட வேண்டும். இந்த வரியின் அளவு இந்த விஷயத்தில் தற்சமயம் நடைமுறையில் உள்ள விதிகளின்படி என்ன தொகை விதிக்கப்படுகிறதோ, அதற்குக் குறைந்திருக்கக்கூடாது. இந்த இரண்டு நிபந்தனைகளுக்குட்பட்டு 2-சி பட்டா ஏதாவது அளிக்கப்பட வேண்டுமென்றுல், அளிக்கப்படலாம்.

19. இந்த உத்தரவின்படி, பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்ட மரங்கள் சரியான முறையில் பாதுகாக்கப்படவில்லை அல்லது பராமரிக்கப் படவில்லை என்று கருதுவாரேயானுல், பஞ்சாயத்துக்களுக்குப் போதிய நோட்டீஸ் கொடுத்து, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி ஓர் உத்தரவு பிறப்பித்து, அதன் மூலம், எல்லா வகையான ஒப்படைக்கப்படாத நிலங்களில் உள்ள மரங்களில் மீது பஞ்சாயத்துக்கு உள்ள உரிமையைத் தள்ளுபடி செய்து வைக்கலாம். பெருவழித்துறை, கிராமப் பணிகள் துறை, பொது மராமத்துத் துறை ஆகியவற்றுக்குச் சொந்தமான புறம்போக்குகளைப்பற்றியும், இப்படித் தள்ளுபடி செய்து வைக்கும் அதிகாரத்தைப் பிரயோகிக்க, சம்பந்தப்பட்ட டிவிஷனல் என்ஜினீயர், எக்சிக்யூடிவ் என்ஜினீயர், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியைக் கலந்து கொண்டு செய்ய உரிமை உண்டு. டிவிஷனல் இன்ஜினீயர், அல்லது எக்சிக்யூட்டிவ் என்ஜினீயருடன் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி இந்த விஷயத்தில் கருத்து வேறுபாடு கொண்டால், இந்த விவகாரம் கலெக்டருக்குக கொண்டு செல்லப்படவேண்டும். இந்த விஷயத்தில் கலெக்டர் செய்யும் முடிவே இறுதியானது. அப்படி உரிமை தள்ளுபடி செய்யப்பட்டால், தானே மரங்களை நட்டிருந்தால் கூட, எந்த வகையான நஷ்ட ஈட்டுத் தொகையையும் கேட்க பஞ்சாயத்துக்கு உரிமை கிடையாது.

20. பொது மராமத்துத்துறை, பெருவழித்துறை உள்ளிட்ட எந்த ஒப்படைக்கப்படாத பொது நிலங்களில் உள்ள மரத்தையோ, அல்லது மரங்களையோ பொது மக்களின் நன்மையையும், பாதுகாப்பையும் முன்னிட்டு உடனடியாக அகற்றப்பட வேண்டியது அவசியம் என்ற நிலை வரும்பொழுது சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி, அல்லது டிவிஷனல் என்ஜினியர் அல்லது எக்ஸிக்யூடிவ் என்ஜினீயர் ஆகியோருக்கு, மரத்தையோ அல்லது மரங்களையோ வெட்டி, அந்த இடத்தை விட்டு அகற்ற அதிகாரம் உண்டு. அப்படி வெட்டப்பட்ட மரங்கள் பொது ஏலத்தில் விற்கப்படுவதற்காகப் பஞ்சாயத்தின் கையில் ஒப்படைக்கப்படும். அப்படி விற்று வருகின்ற வருவாய் பஞ்சாயத்து நிதியில் வரவு வைக்கப்படும். பஞ்சாயத்துக்களாலேயே நடப்பட்ட மரங்களானாலும் கூட, எந்த வகையான நஷ்ட ஈட்டுத்தொகையையும் பெற பஞ்சாயத்துக்கு உரிமை கிடையாது.

21 ஒரு ஒப்படைக்கப்படாத பொது நிலம், அரசாங்கத்தால் ஒரு தனிப்பட்ட நபருக்கு ஒதுக்கீடு உத்தரவின் பேரில் ஒதுக்கப்பட்டால், அந்த நிலங்களிலுள்ள மரங்களின் பேரில் உள்ள உரிமையை அந்தத் தனிப்பட்ட நபருக்கு மாற்றிக் கொடுக்கின்ற உறுதிப் பாட்டை அப்படிப்பட்ட உத்தரவு உள்ளடக்கி உள்ளதாகும். அம்மரங்களைப் பொறுத்தவரையில், எந்தவகையான நஷ்டஈட்டையும் பெற பஞ்சாயத்துக்கு உரிமை கிடையாது. இதே விதி முறை, ஒரு பொது நிலமானது அரசாங்க இலாகா வேலைக்கு என்று எடுத்துக் கொள்ளும் விஷயங்களிலும் பொருந்தும்.

22. தஞ்சாவூர் மாநிலத்தில் மரங்களின்மீது விதிக்கப்படும் விசேஷ வரிவிதிப்பின் கீழ் வருகின்ற மரங்களின் மீது அரசாங்கம் எந்தவிதமான உரிமையும் கொண்டாடவில்லை. அத்துடன் புறம்போக்குப் படுகைகளுடன் வாய்க்கால் ஓரங்களிலும், ஆற்றுக் கரைகளிலும், விவசாயிகளால் நடப்பட்டுள்ள மரங்களிலும், ஆற்றங்கரையின் 20 கஜ தூரத்திற்குள் நடப்பட்டுள்ள மரங்கள்மீதும் அரசாங்கம் எந்த உரிமையும் கொண்டாடவில்லை. ஆனால், கடைசியாகச் சொல்லப்பட்ட மரங்கள் 1,364 பசலிக்கு முன்னால் நடப்பட்டு இருக்க வேண்டும். மற்ற மரங்கள் 1—7—1927-க்கு முன்னால் நடப்பட்டு இருக்க வேண்டும். ஆகவே இப்படிப்பட்ட மரங்களைப் பொறுத்த வரையில், பஞ்சாயத்துக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்பது புலனாகிறது.

23. எந்தப் பொது நிலங்களிலும் இப்பொழுது உள்ள எல்லா சந்தன மரங்களின் மீதுள்ள உரிமையும், அல்லது கீழ்க்குறிப்பிட்டுள்ள விசேஷப் பகுதிகளில் இந்த ஆணையின் தேதிக்குப் பிறகு உண்டாகின்ற சந்தன மரங்களின் மீதுள்ள உரிமையும், அரசாங்கத்தினிடமே இருக்கும். அப்படிப்பட்ட மரங்களின் மீது பஞ்சாயத்துக்கு ஒரு உரிமையும் இருக்காது:—

வட ஆர்க்காடு.
தென் ஆர்க்காடு.
திருநெல்வேலி.
சேலம்.
கோயமுத்தூர்.
நீலகிரி.

24. குறிப்பான ஆணைகள் பிறப்பித்து, அரசாங்கம் சில குறிப்பிட்ட வகையான மரங்கள், இந்த ஆணையின் அமுலிலிருந்து விலக்கப்படலாம் என்றும், அப்படிப்பட்ட மரங்களை, குறிப்பிட்ட அரசாங்க இலாகாவினிடம், அரண உபயோகத்திற்காக ஒப்படைக்கலாம் என்றும் உத்தரவு பிறப்பிக்கலாம்.

25. இந்த உத்தரவின்படி, பஞ்சாயத்துக்களுக்கு மாற்றப்பட்டுள்ள மரங்கள் சம்பந்தப்பட்ட வரையில், பஞ்சாயத்துக்களுக்கு இந்த மரங்களின் அனுபவ உரிமையை குத்தகைக்கு விடவும், பட்டுப்போன மரங்களை ஏலம் விட்டு விற்பனை செய்யவும் உரிமை உண்டு. அப்படிப்பட்ட குத்தகை விடுவதோ, ஏலம் விடுவதோ பஞ்சாயத்தின் ஒப்புதலுடன் செய்யப்பட வேண்டும். பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி என்ற அதிகாரத்தில் பஞ்சாயத்து தலைவரால் தனிப்பட்ட முறையில் அவரால் இந்தக் காரியங்கள் செய்யப்படக் கூடாது. குத்தகை, ஏலங்கள், விற்பனைகள் எல்லாம் பஞ்சாயத்தின் சட்டப்படி நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலம், உறுதி செய்யப்படவேண்டும்.

26. இந்த உத்தரவு உடனே அமுலுக்கு வரும், மாவட்டக் கலெக்டர்கள் இந்த உத்தரவை உடனே எல்லா பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களின் கவனத்திற்குக் கொண்டு வருதுடன், அதன்படி நடவடிக்கை எடுக்கும்படியும் செய்ய வேண்டும். இந்த உத்தரவைக் காலதாமதமில்லாமல் நிறைவேற்றிவைக்க, தங்கள் கீழ் உள் எல்லா அதிகாரிகளுக்கும் போதிய அறிக்கைகளை ரெவின்யூ போர்டும், அரசாங்கத் துறைத் தலைவர்களும் உடனே அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

[கிராம அபிவிருத்தி, தலநிர்வாகத்துறை 30—5—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1550.]

பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களிடம் மச்ச மகசூல் வருவாயை ஒப்படைப்பது பற்றிய விளக்கம்

(Assignment of fishery rental revenue to Panchayats and Panchayat Unions.)

தல நிர்வாகத்துறையின் 1941-ம் வருடம் பிப்ரவரி மாதம் 1-ந் தேதியிட்ட அரசாங்க ஆணையில் (எண் 261) கீழ்க்காணும் வகைகளைச் சேர்ந்த நீர் நிலைகள் மச்ச மகசூல் குத்தகைக்கென்று குறிப்பிடப்பட்டுள்ளன—

(i) ஸ்தல ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பருகு நீர் நிலைகள்.

(ii) ரெவினியூ, பொதுப் பணித் துறைகளின் மேற்பார்வையிலுள்ள மீன் பாதுகாப்புக்கும், வளர்ப்புக்கும், என்று மீன் அளத்துறையினரால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நீர் நிலைகள்.

(iii) 1914-ம் வருடம் பிப்ரவரி மாதம் 20-ம் தேதிக்கு முன்னர் கட்டப்பட்டனவாய், பொதுப்பணித் துறையின் அதிகாரத்திற்குட்பட்டுள்ள நீர்ப்பாசனத்திற்கான நீர் நிலைகள்.

(iv) 1914-ம் வருடம் பிப்ரவரி மாதம் 20-ம் தேதியில் கட்டப்படாததும், அல்லது 1914-ம் வருடம் பிப்ரவரி மாதம் 20-ம் தேதிக்குப்பின் பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டதுமான, பொதுப்பணித் துறைக்குட்பட்ட நீர்ப்பாசனத்திற்கான நீர் நிலைகள்.

(v) 1914-ம் வருடம் பிப்ரவரி மாதம் 20-ம் தேதியில் கட்டப்படாததும், ரெவினியு இலாகாவின் அதி

காரத்திற்குட்பட்டதும், அல்லது 1914-ம் வருடம் பிப்ரவரி மாதம் 20-ம் தேதிக்குப் பின் பொதுப் பணித் துறையால் கட்டப்படாததுமான நீர்ப் பாசனத்திற்கான நீர் நிலைகள்.

(vi) பருகு நீர் நிலையாகவும், நீர்ப்பாசன ஏரியாகவும் பயன் படாமல், ஸ்தல ஸ்தாபனங்களுக்குட்பட்டிருக்கும் நீர் நிலைகள்.

(vii) ஸ்தல ஸ்தாபனங்களுக்குட்படாமலும், தனியார் சொத்தாகவும் இல்லாமலும், நீர்ப்பாசன ஆதாரங்களாக இல்லாதவையுமாக உள்ள நீர்நிலைகள்.

(viii) ஸ்தல ஸ்தாபனங்களினால் அளிக்கப்பட்டு, அவைகளுக்குச் சொந்தமான நீர் நிலைகள் .

மேலே குறிப்பிட்டுள்ள (i) முதல் (vii) வரையிலுள்ள வகைகளைச் சேர்ந்த நீர் நிலைகளில், மச்ச மகசூல் உரிமையை அங்கீகரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த குத்தகைப் பணம் ரெவினியூ இலாகா அதிகாரிகள், அல்லது அரசாங்கம், அதற்கென்று குறிப்பிடும் ஏஜென்சியினால் வசூலிக்கப்படும். அவ்வாறு மச்சமகசூல் குத்தகையினால் வந்த தொகை,மாநில வருவாயில் வரவுவைக்கப்பட்டு, ஸ்தல ஸ்தாபனங்களுக்குச் சேரவேண்டிய பகுதிட்டணம் அப்போதைக்கப்போது குறிக்கப்படும் அளவு, அவைகளுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. (viii) வது வகையைச் சேர்ந்த நீர் நிலைகளின் மச்ச மகசூல் உரிமையைப் பொறுத்த மட்டில், சம்பந்தப்பட்ட ஸ்தல ஸ்தாபனங்களினால் அவை ஏலம் விடப்பட்டு, அந்த வருவாயை ஸ்தல ஸ்தாபனங்களின் வருவாய்களுடன் சேர்க்கப்படும்.

1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்ட விதிகளை ஒட்டி, இந்த விஷயம் திரும்பவும் புனராலோசனை செய்யப்பட வேண்டியிருக்கிறது. 1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 85 (3) வது பிரிவின்படி, சட்டத்தின் 85 (1) பிரிவின்கீழ் பஞ்சாயத்துக்களுக்கும் ; பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கும் மாற்றப்பட்டுள்ள நீர்ப்பாசன இடங்களில் மச்ச மகசூல் வசூலிக்கும் அதிகாரம் அரசாங்கத்தினிடமிருந்து பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைக்கப்படும். அதே சட்டத்தின் 84 (1) பிரிவு, எல்லாப் பொது நீரோடைகள், நீரூற்றுக்கள், நீர்த் தேக்கங்கள், குளங்கள், நீர் வெளியேற்ற வசதியுடைய நீர் நிலைகள், ஊருணிகள், கிணறுகள், நிலைக் குழாய்கள் (பொது உபயோகத்துக்கு உரிமையான பொது நீர் நிலைகள் உள்பட) எல்லா நீர்ப்பணித் துறைகளையும் ஒப்படைக்க வசதி செய்து தருகிறது. இவற்றுள் நீர்ப்பாசனத்துக்கு உபயோகப்படும் நீர் நிலைகளும், அத்தகைய நீர்ப்பாசன வேலைகளுடன் சம்பந்தப்பட்ட நீர் நிலைகளும் சேரா. பழக்க வழக்கத்தினாலோ, கிராம அல்லது நகரவாசிகளின் நன்மை கருதியோ, அன்றி ஊர்ப் பொது பட்டாதாரர்கள், அல்லது குறிப்பிடப்பட்ட பகுதியை அனுபவித்து வருவோர் அல்லது நீர்ப்பாசனத்துடன் சம்பந்தப்பட்ட நிலத்தை வைத்திருப்பவர்கள் ஆகியோருடைய பொது நன்மையைக் கருதியோ, நிர்வகிக்கப்படுகின்ற நீர் நிலைகள் பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்பட்டு, மேற்குறிப்பிட்டோரின் பொது நன்மைக்காக நிர்வகித்து வரும் உரிமையைப் பஞ்சாயத்துக்கு அளித்து உத்தரவிடும் அதிகாரத்தை, மேற்படி சட்டத்தின் 83-வது பிரிவு அரசாங்கத்திற்கு. அளித்துள்ளது. 1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள், சட்டத்தின் 85 (1) வது பிரிவின்படி, அதில் கூறப்பட்டுள்ள விதிகளுக்குட்பட்டு, ரிவினியூ இலாகாவின் நிர்வாகத்திற்குட்பட்டுள்ள, ஆற்றுப் பாசனத் திட்டத்தில் சேராத ஏனைய சிறிய நீர்ப்பாசனங்கள் பஞ்சாயத்து யூனியன்களின் நிர்வாகத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்று கிராம அபிவிருத்தி தல நிர்வாகத்துறையின் 1960-ம் வருடம் ஏப்ரல் மாதம் 16-ம் தேதியிட்ட ஆணை (எண் 711)-ல் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. மேற்படி 1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 71 (2) பிரிவின்கீழ், இந்தச் சிறிய நீர்ப்பாசனங்களைப் பஞ்சாயத்து யூனியன்கள் முறையே பஞ்சாயத்துக்களுக்கு மாற்றவும், அவைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றன.

1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தினால் கொண்டு வரப்பட்டுள்ள மேற்குறித்த மாறுதல்களினால், இதற்கு முன்னர் 1941-ம் வருடம் பிப்ரவரி மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை (எண் 261) யில் மீன் அளம் பற்றி வகைப் படுத்தப்பட்டுள்ளதைத் திருத்தி அமைப்பது தேவையாகிறது. சம்பந்தப்பட்ட அரசாங்கத் துறைத் தலைவர்களைக் கலந்தாலோசித்து, மீன் அளம் பற்றி கீழ்க்கண்ட மாறுதல்களை வகைப்படுத்தி அரசாங்கம் உத்தரவிடுகிறது:—

(i) பொதுப் பணித் துறையினால் பராமரிக்கப்பட்டு

(அ) மாநில அரசுடன் தொடர்பு கொண்டவை.

(ஆ) மீன் பராமரிப்புக்கும், வளர்ப்பதற்கென்றும் இருக்கும் மாநில அரசுடன் தொடர்பு கொள்ளாதன என்று கருதப்படும் நீர்ப்பாசன ஆதாரங்கள்.

(ii) பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்படாத வரையில், ரெவினியூ இலாகாவினால் பராமரிக்கப்பட்டு வரும் நீர்ப்பாசன ஆதாரங்கள்.

(iii) 1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 85 (1)வது பிரிவின்கீழ், பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அவைகளினால் பராமரிக்கப்பட்டு வரும் நீர்ப்பாசன ஆதாரங்கள்.

(iv) 1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 85 (1)வது பிரிவின்கீழ், பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டு, ஆனால் நடைமுறையில் பஞ்சாயத்து யூனியன்களின் ஏஜென்சிகளைப்போல் பஞ்சாயத்துக்களினால் பராமரிக்கப்பட்டு வரும் நீர்ப்பாசன ஆதாரங்கள்.

(v) நீர்ப்பாசனத்துக்குப் பயன்படாத மற்ற எல்லாப் பொது நீர் நிலைகளாவும்.

(அ) பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளவை,

(ஆ) பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்படாதவை, என்று கருதப்படுபவையும்.

1914-ம் ஆண்டுக்கு முற்பட்ட நீர் நிலைகள் 1914-ம் ஆண்டுக்குப் பின்னால் ஏற்படுத்தப்பட்ட நீர் நிலைகள் என்ற வேற்றுமை எடுபட்டுவிடும்.

மச்ச மகசூல் நிர்வாகம் பற்றியும் அல்லது வருவாயின் ஒதுக்கீடு பற்றியம், கீழ்க்கண்ட பாராக்களில் ஒவ்வொரு வகையான ஆதாரங்களைப்பற்றி தனித்தனியாக விளக்கப்பட்டுள்ளன :

5. பிரிவு i. (அ) பொதுப்பணித்துறையினால் பராமரித்து வரப்படும் மாநில அரசுடன் தொடர்பு கொண்ட நீர்ப்பாசன ஆதாரங்கள் :

இப்போதையநிலைமையில் ஒருவித மாறுதலும் இருக்காது. இப்படிப்பட்ட விஷயங்களில், மீன் ஏலத்திற்கு விடுதல், அல்லது அதிலிருந்து வரும் வருவாயைப் பங்கீடு செய்து கொள்ளுதல், ஆகிய விஷயங்களில் இது வரையில் உள்ள முறை தொடர்ந்து நடைபெறும். பஞ்சாயத்து நிர்வாகத்துக்கு, இந்த வகை ஆதாரங்களில் கிடைக்கும் மச்சமகசூல் பற்றிய பொறுப்போ, அன்றி உரிமையோ கிடையாது.

6. பிரிவு i-(ஆ) மாநில அரசுடன் தொடர்பற்றதும் பொதுப்பணித் துறையினரால் பராமரிக்கப்படுவதுமான நீர்ப்பாசன ஆதாரங்கள் :

பிரிவு ii : பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப் படாத வரையில், ரெவினியு இலாகாவினால் பராமரிக்கப் பட்டு வரும் நீர்ப்பாசன ஆதாரங்கள் :

இந்த இரண்டு வகை ஆதாரங்களைப் பொறுத்த மட்டிலும், ரெவினியு இலாகா வினரால் இப்பொழுது ஏலம் விடப்படும் முறையே தொடர்ந்து இருக்கும். ஆனால், மச்சமகசூல்அப்படி ஏலத்தினால் வரும் வருவாய் சம்பந்தப்பட்ட வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்து யூனியனுக்குப் போய்ச் சேர வேண்டும். அந்தப் பணம் பஞ்சாயத்து யூனியனின் கணக்கில் உற்பத்தி நிதியில் வரவு வைக்கப் படும். சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன், இத்தகைய ஏலத்தில் பங்கு கொண்டு, ஏலத் தொகையைக் கூறி எடுக்க உரிமையுடையது.

7. பிரிவு iii, 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 85 (1) வது பிரிவின்கீழ் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அவைகளினால் பராமரிக்கப்பட்டுவரும் நீர்ப்பாசன ஆதாரங்கள் :

மேற்குறித்த வகையைச் சேர்ந்தநீர் நிலைகளின் மச்ச மகசூல் நிர்வாகம், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். பஞ்சாயத்து யூனியன் அதை ஏலம் விடுகின்ற உரிமையும், அதனால் கிடைத்த மச்ச மகசூல் வருவாயைத் தாமே உபயோகத் துக்கு எடுத்துக்கொண்டு உற்பத்தி நிதியில் வரவு வைத் துக்கொள்ளும் உரிமையும் பெற்றிருக்கிறது.

8. பிரிவு iv. 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 85 (1) வது பிரிவின்கீழ், பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டு. ஆனால் நடைமுறையில் பஞ்சாயத்துக்களால் பாரமரிக்கப்பட்டு வரும் நீர்ப்பாசன ஆதாரங்கள் :

இத்தகைய நீர்ப்பாசன ஆதாரங்களில் கிடைக்கும் மச்ச மகசூல் நிர்வாகம் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். அதை ஏலம் விடவும், அதனால் வரும் வருவாயை உபயோகப்படுத்திக் கொள்ளவும், பஞ்சாயத்துக்கு உரிமை அளிக்கப்படவேண்டும்.

9. பிரிவு v. (அ) பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள (நீர்ப்பாசனத்துக்கு உபயோகப்படாத)மற்ற எல்லாப் பொது நீர் ஆதாரங்கள் :

பஞ்சாயத்துக்கள் ஏலம் விடவும், வருவாயை உபயோகப்படுத்திக்கொள்ளவும் செய்யும்.

10. பிரிவு v. (ஆ) பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப் படாத (நீர்ப்பாசனத்துக்கு உபயோகப்படாத) மற்ற எல்லா நீர்நிலை ஆதாரங்கள் :

இப்பொழுது நடை முறையில் இருந்துவரும் நிலைமையே தொடர்ந்து இருக்கும். சம்பந்தப்பட்ட நீர் நிலையை நிர்வகித்து வரும் இலாகா அல்லது அதிகாரம் பெற்ற ஸ்தாபனம் தொடர்ந்து ஏலம் விடும் விஷயத்தையும், அந்தப் பணத்தைப் பயன் படுத்தும் விஷயத்தையும் கவனித்துக்கொள்ளும்.

11. (iii), (iv), (v)அ, வகைகளைச் சேர்ந்த நீர் நிலைகளின் மச்ச மகசூல் ஏலத்தை நடத்த பஞ்சாயத்துக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இருந்த போதிலும், இந்த விஷயங்களில், பஞ்சாயத்துக்கள், உணவு, விவசாயத்துறையின் 1961-ம் வருடத்திய ஜனவரி மாதம் 31-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை (எண் 304) யில் கூறப்பட்டுள்ள விதி முறைகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அந்த ஆணையில், ஏலம் விடும் உரிமை அரசாங்கத்திடம் உள்ள எல்லாப் பிரதேச நீர் நிலைகளில் மச்ச மகசூல் உரிமை 1961, 1962 ஆகிய முதல் இரண்டுவருடங்களுக்குப் பொது ஏலம் விடும் வகையில் இருக்கவேண்டுமென்றும், அடுத்த 1963, 1964 ஆகிய இரண்டு வருடங்களிலும் முன் இரண்டு வருட ஏலத் தொகையின் சராசரி தொகையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகை முறையில் அந்த உரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப் பட்டுள்ளது. மேலும், அந்த உத்தரவில், அப்படி உரிமை அளிப்பதென்றால், மீனவர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 80 சத வீத உறுப்பினர்கள் மீன் பிடிப்போராகவும், அந்தப் பகுதியிலேயே வசிப்பவராகவும் அந்தக் கூட்டுறவு சங்கம், பொருளாதாரத்துறையில் வலிவு உள்ளதாகவும் இருக்கிறதா என்று குத்தகைக்கு சங்கம் மனுச்செய்து கொள்வதற்கு முன்னால் பரிசீலனை

செய்யப்படவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. அச்சங்கம் மீன் அளத்துறை, துணை இயக்குநரால் சான்றிதழ் அளிக்கப்படிருக்கவேண்டும். ஆனால், மேற் குறித்த மூன்று வகை நீர் நிலைகளிலும், இது வரை அரசாங்கத்தின் மீன் அளத்துறையின் பெரும் பங்காக விளங்கி வந்த மச்ச மகசூல் ஏலம் விடும் அதிகாரம் தற்போதைய இந்த உத்தரவுகளினால் பஞ்சாயத்துக்களுக்கு மாற்றப்படுகிறது. இந்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகைகள் காட்டும் விஷயத்தில், கூடுமான வரையில் பஞ்சாயத்துக்கள் அக்கறை எடுத்துக் கொண்டு நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது. இந்த மாதிரி விஷயங்களில், பஞ்சாயத்துக்கள் 1964க்குப் பின் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் எப்படி இருக்க வேண்டும் என்பது காலப்போக்கில் தெரிவிக்கப்படும்.

12. I அ, V ஆ, ஆகிய வகைகளைச் சேர்ந்த நீர் நிலைகளிலிருந்து கிடைக்கும் மச்ச மகசூல் வருமானம் இப்போதைப் போன்றே தொடர்ந்து பகிர்ந்து கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. I ஆ, II, III ஆகிய வகை நீர் நிலைகளின் மச்ச மகசூல் வருவாய், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியனின் உற்பத்தி நிதியில் வரவு வைத்துக்கொள்ளப்படும். IV, V-அ வகை நீர் நிலைகளின் மச்ச மகசூல் வருவாய் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் நிதியில் வரவு வைக்கப்படும். பஞ்சாயத்துக்களோ, அன்றி பஞ்சாயத்து யூனியன்களோ, தம் மச்ச மகசூல் வருவாயைக் கீழ்க்குறித்த உற்பத்தி வேலைகளுக்கு மட்டுமே செலவழிக்கவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது :—

முதலாவதாக, சம்பந்தப்பட்ட நீர் நிலைகளில் மீனினத்தைப் மறுபடியும் சேமித்து வைக்கும் விஷயத்தில் ஆகும் செலவு.

இரண்டாவதாக, பராமரிப்பு வேலைகளுக்கு (குடிமராமத்துக்காகும் செலவையும் சேர்த்து) ஆகும் செலவு.

மூன்றாவதாக, உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையில் செய்ய படும் பிற வேலைகளுக்காகும் செலவு.

13. மேற்குறிப்பிடப்பட்ட பல்வேறு வகைப் பொது நீர் நிலைகளில், மச்ச மகசூல் பட்டாவின் அடிப்படையில், தனிப்பட்டவர்கள் சொந்தத்தில் அநுபவிக்கக்கூடிய வகைகளும் இருக்கலாம்.

சில விஷயங்களில் (மச்ச மகசூல் பட்டாவின் கீழ் தனிப்பட்டவர்களின் சொந்தத்தில் இருந்து வந்தபோதிலும்) குறிப்பிட்ட நீர் நிலைப் பராமரிப்பு, கோயில், கோயில் பணிகள், திருவிழாக்கள் போன்ற சில குறிப்பிட்ட பொதுக் காரியங்களுக்கென்று மச்ச மகசூல் வருவாய் உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்று பழக்கம் நிலவி வருகிறது. இவ்வாறு தொன்றுதொட்டு பழக்கத்தில் இருந்துவரும் உபயோக முறையைப் பற்றி முடிவு செய்யவும் அந்தச் சலுகையின் தன்மையை வரையறுக்கவும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன், அல்லது பஞ்சாயத்து கலெக்டர் அவர்களுக்கு மனுச் செய்துகொள்ளலாம். பழக்க வழக்கங்களை ஒட்டி, மச்ச மகசூல் வருவாய் ஒழுங்கான முறையில் திரட்டப்பட்டு, ஒழுங்கான முறையில் உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்பதில், பஞ்சாயத்து திருப்தி ஏற்படும் வகையில் என்ன மேற்பார்வை வேலைகள் செய்ய வேண்டுமோ, அதைச் செய்துகொள்ள பஞ்சாயத்துக்கு உரிமை இருக்கிறது. சரியான முறையில் இந்தக் காரியம் நடைபெறவில்லையென்றால், குறிப்பிட்ட பஞ்சாயத்து மச்ச மகசூல் வருவாயை சட்டத்தில் 83-வது பிரிவின் கீழ் திருப்பி அளிக்கும்படியும், அந்த உரிமையைத் தனக்கு அளிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டு கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்கும்படியும், கலெக்டருக்கு மனுச் செய்துகொள்ளலாம். அவ்வாறு ஒப்படைக்கப்படும் பட்சத்தில், பழக்கத்தில் இருக்கும் மேற்குறித்த நடைமுறைகளை அமுல் நடத்தவேண்டிய பொறுப்பு பஞ்சாயத்தினுடையதாகும்.

தனிப்பட்டவர்கள், மச்ச மகசூல் பட்டாவின் அடிப்படையில், யாதொரு பழக்க வழக்கங்களினால் கட்டுப்படாத நிலையில் இருந்து அனுபவித்து வரும் மச்ச மகசூல் உரிமைகள் ஏதாவது இருந்தால், அவை தொடர்ந்து, இருக்கிறபடியே இருக்கும்.

இந்த வேறுபாடுகளை மனத்தில் கொள்ளாவிட்டால், பஞ்சாயத்து வீணான வழக்குச் சிக்கல்களில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள நேரிடலாம்.

14. பொது நீர் நிலைகளின் மச்ச மகசூல், மச்ச மகசூல் பட்டா இன்றித் தனிப்பட்டவர்களால் அனுபவித்து வரப்பட்டால், அவை,

(1) தவறான பாத்தியதையினால் உரிமையாக்கிக் கொள்ளப்பட்ட நிலையில் உள்ள மச்ச மகசூல் உரிமையாக இருக்கின்ற வகையாக இருக்கலாம்.

(2) தனிப்பட்டவர்களினால் மச்ச மகசூல் உரிமை அனுபவிக்கப்பட்டு ஆனால், நிரந்தரமாகத் தவறான பாத்தியதையினால் உரிமையாக்கிக் கொள்ளப் படாதனதாகவும்—இருக்கலாம்.

முதலில் குறித்த வகையைச் சேர்ந்த விஷயங்களைக் கலெக்டர் விசாரித்து, மச்ச மகசூல் பட்டாக்களை வழங்கி, அவைகளின் உபயோகத்தை ஒழுங்குபடுத்த வேண்டும். அந்த உரிமை பழக்க வழக்கமான நிலைக்கு உட்பட்டு குறிப்பிட்ட பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டால், அந்தச் சலுகையைப் பதிவு செய்து, எந்தக் காரியத்துக்குஅந்த வருவாய் பயன்படுத்தப்படுகிறது என்றும் கலெக்டர் பதிவு செய்ய வேண்டும். பட்டாவும் இல்லாமல், உரிமையை நிரூபிக்க வேறு அத்தாட்சியும் இல்லாத பட்சத்தில், அப்படிப்பட்ட மச்ச மகசூல் அதிகாரம் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் அல்லது பஞ்சாயத்துக்கு மாற்றப்பட்டு, அவை வசம் அந்த உரிமை ஒப்படைக்கப்பட வேண்டும்.

15. மச்ச மகசூல் பட்டாவின்மேல் வசூலிக்கப்படும் குத்தகைப் பணம் :

மச்ச மகசூல் குத்தகை மூலமாக அரசாங்கத்துக்குக் கிடைக்கும் பணம் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் அல்லது பஞ்சாயத்துக்கு மாற்றப்பட வேண்டும்.

இந்த உத்தரவுகளில் கண்டுள்ள அம்சங்களை, எல்லாப் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், ஆகியவற்றின் கவனத்திற்குக் கொண்டுவர எல்லா மாவட்டக் கலெக்டர்களும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறையின் 16-5-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1370

கிராமப் பகுதிகளில் நிறைவேற்றப்படும் திட்டங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை, அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய கூலியின் அளவு:

கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு பிப் வரிமீ 1-ந்தேதியிட்ட அரசாங்க ஆணை (எண் 276) யில் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் எடுத்துச்செய்யப் படும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காக 50 தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டு, ஒரு நாளுக்கு ஆறணா ரொக்கக் கூலியும் ஆறணா மதிப்புள்ள பகலுணவும் அளிக்கப் படலாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக,

(i) 50 பேருக்கு மேற்பட்டும், 100 பேருக்கு மேற் படாமலும் ஆட்களை அமர்த்தி, உழவுக்காலம் தொடங்குவதற்குள், வேலையைச் சீக்கிரம் முடித்து விடலாம் என்றும்,

(ii) ஒரு வேளை உணவும், மீதிக் கூலிப்பணமும் என்றில்லாமல், ஒரு மொத்தமாக 12 அணா கொடுக்கப் படலாம் என்று சில இடங்களிலும்—கூறப்பட்டுள்ளன.

அரசாங்கம் மேற்குறித்த விஷயங்களைஆராய்ந்து பார்த்து, கீழ்க்கண்ட விதிமுறைகளைப் பிறப்பிக்கிறது :

(i) ஐம்பது தொழிலாளர்களுக்கு மேல்வேலை செய்ய முன்வரும் பட்சத்தில், அந்த அளவுக்கு, வேலை நிறைவேறும் காலம் குறையுமானால்—அவர்களைப் பயன் படுத்தி வேலையை நடத்த யாதொரு தடையும் இல்லை. ஆனால் அமர்த்தப்பட்ட ஆட்களின் தொகை எக்காரணத்தைக் கொண்டும் 100-க்கு மேற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

(ii) திட்டத்தின்தொழிலாளர்களுக்குக் கூலி கொடுக்கும் செலவுக்கென்றுமேற்குறித்த அரசாங்க ஆணையில் கூறப்பட்டுள்ள மொத்தத் தொகைக்கு உட்படும் வகையில் அமையுமாறு பார்த்துக் கொண்டு, திட்டவேலையில் தொழிலாளர்களின் மன நிலையைத் திருப்தி படுத்துமென்றால் ஒரு மொத்தமாக, ஒரு நாளைக்கு 12 அணா கூலி என்று கொடுப்பதற்கு யாதொரு தடையும் கிடையாது.

[கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு மே மாதம் 27-ம் தேதியிட்ட அறிக்கை எண் 7868.)

தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தின் கீழ் நடைபெறும் பல்வேறுவேலைகளுக்கு வசூலிக்கப் படும் நன்கொடையின் சதவீத அளவுபற்றிய விதி முறைகள்.

கிராம அபிவிருத்தித் துறையின் 1960-ம் ஆகஸ்டுமீ 16உ-மிட்ட ஆணை (எண் 664)யில் கூறப்பட்டுள்ள நன்கொடைச் சதவீதம், எல்லா வட்டாரங்களிலும் (வரப் போகிறை வட்டாரங்கள் உட்பட) 1961–62-ம் ஆண்டில், இணைப்புப் பாதைகள், கிராமத் தண்ணீர் வினியோகம், பள்ளிக்கட்டிட வேலைகள் ஆகியவற்றுக்கும் பொருந்துமா என்றும், அல்லது அதே ஆணையில் கூறப்பட்டுள்ள நன்கொடைகளின் விகிதாசாரங்கள், 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 66 பிரிவின் கீழ் சமுதாய வளர்ச்சிப் பணிகள் ஒப்படைக்கப்படும் பொழுதுதான், பல்வேறு வட்டாரங்களுக்கும் பொருந்துமா என்றும் ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள, வரப்போகும் வட்டாரங்கள் உட்பட, எல்லா வட்டாரங்களைப் பொறுத்தும், பல்வேறு வேலைகளுக்கான நன்கொடைச் சதவீதம், கிராம அபிவிருத்தித் துறையின் 1960-ம் ஆகஸ்டுமீ 16உ அரசாங்க ஆணை (664)-யில் கூறப்பட்டுள்ள விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்டு, 1961-ம் எப்ரல்மீ 1–லிருந்து அமுலுக்கு வரும் என்றும், நன்கொடைகளின் புதிய விகிதாசாரங்கள் அமுல் செய்யப்படுவதை, 66-வது பிரிவின் கீழ் சமுதாய வளர்ச்சிப் பணிகள் ஒப்படைக்கப்படும்வரை நிறுத்தி வைக்கத் தேவையில்லை என்றும், அரசாங்கம் தெளிவுபடுத்த விரும்புகிறது.

(கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத்துறையின் 19—5—1961-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1413)

1965க்குள் பொதுவான ஆரம்பக்கல்வியை முழு அளவுக்குப் பரப்பும் விஷயத்தில், பஞ்சாயத்து யூனியன்களுக்கு உத்தேச வரவு செலவுத்திட்டம் தயாரித்தல்

முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கான 1961–62-ம் வருட உத்தேச வரவு செலவுத் திட்டத்தை ஆராயும் பொழுது, தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் 116-வது பிரிவின்கீழ், தல செஸ் சர்சார்ஜ் விதிக்கும் விஷயத்தை 75 பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில், இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 49 மன்றங்கள் இன்னும் முடிவு செய்யவில்லை என்று தெரிந்தது. அந்த 49 மன்றங்களில் 34 மன்றங்களின் 1961–62 வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 2,000-க் குறைவாக இருந்து ரூபாய் 63,000 மேற்பட்ட தொகை வரை பற்றுக்குறை இருந்து வருகிறது. மேலும் உபரி தலவரிகளை விதிக்காத பட்சத்தில் பஞ்சா

யத்து யூனியன் மன்றங்களால் இந்தப் பெரிய பற்றுக் குறையை, ஈடுசெய்ய முடியாது. மேலும், இந்தப் பஞ்சா யத்து யூனியன்கள் மிகுதியான பொறுப்புக்களைப் பெற் றிருக்கின்றன. இம்மன்றங்கள், மூன்றுவது திட்டத்தின் கீழ் வரும் உணவு உற்பத்தி, பொது ஆரம்பக்கல்வி முதலான விஷயங்களில் திட்டமிடப்பட்ட அளவு முன்னேற் றத்தை அடையப் பாடுபடவேண்டும். ஆகவே, அவை கட் டாயமாக மிகுதியான தலவரி விதிப்பை மேற்கொள்ள வேண்டியது தேவையாகிறது.

பஞ்சாயத்து யூனியனுக்குட்பட்ட எந்த நிலத்துக்கும், அரசாங்கத்துக்கு நிலவரி கட்டுகின்ற எந்த ஒரு நபரின் மீதும் பஞ்சாயத்து யூனியன் மன்றம், தல செஸ் சர்சார்ஜ் விதிக்கலாம் என்று தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 116-வது பிரிவில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு விதிக்கப்படும் தல செஸ் சார்ஜ், சட்டப் பிரிவு 115-ன்கீழ் பஞ்சாயத்து வளர்ச்சி வட்டாரத் தில் விதிக்கப்படும் தல செஸ் வரியின்மேல் தகுந்த அளவில் இருக்கும்படி, வரிவீதத்தை வகுத்து கொள்ள வேண்டும். இந்த முறை, வரிவிதிப்பு வீதத்தின்மேல் வரையறை வகுக்கப்படாதபட்சத்தில் மட்டுமே கையாளப்படும். இது விஷயத்தில் தெளிவு பெற, தல செஸ் சர் சார்ஜ் விதிதாசாரத்தை நிர்ண யிப்பது குறித்து விளக்கப்பட்டுள்ள, கிராம அபிவிருத்தி- தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு மார்ச்சு மீ 23-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை (எண் 868)யைக் கவனிக்கவும்.

தல செஸ் சர் சார்ஜ் விதிக்கும் விஷயம் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் முடிவுக்கே விடப்பட்டிருந்த போதிலும், கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஜனவரி மீ 25-ம தேதியிட்ட அரசாங்க ஆணை (எண் 211) இணைப்பின் 20-வது பாரா விலும், 27-வது, பாராவிலும், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் இவ்வரி விதிப்பிலிருந்து தவறக்கூடாது என்று விளக்கப்பட்டுள்ளது.

இணைப்பு

தல செஸ் சார்ஜ் விதிக்காத பஞ்சாயத்து யூனியன்.	1961-62 ஆண்டின் பற்றுக்குறை—அதாவது வரவு செலவில் வேற்றுமை.
1	2
	ரூபாய்கள்.
வட ஆர்க்காடு மாவட்டம்.	
கீழ்வைத்தினுங்குப்பம்	8,615
ஆர்க்காடு	16,170
கலசப்பாக்கம்	21,294
ஆரணி	..
துரிஞ்சாபுரம்	13,425
வெம்பாக்கம்	..
போளூர்	58,388
தென்னுர்க்காடு மாவட்டம்.	
மேல் மலையனூர்	38,500
ஒரத்தூர்	..
திருநாவலூர்	1,807
பண்ணுருட்டி	28,865
செஞ்சி	33,110
சின்னசேலம்	31,310
மதுரை மாவட்டம்.	
மதுரை (மேற்கு)	10,075
வாடிப்பட்டி	41,347
அலங்காநல்லூர்	15,022
மதுரை (கிழக்கு)	17,863
மேலூர் I	.. ..
உசிலம்பட்டி	.. ..
தே. கல்லுப்பட்டி	15,898
திருமங்கலம்	1,480
செங்கற்பட்டு மாவட்டம்.	
ஸ்ரீபெரும்புதூர்	..
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	
வேப்பந்தட்டை	46,018
திருவரங்குளம்	..
நீலகிரி மாவட்டம்.	
....	..
கோயம்புத்தூர் மாவட்டம்.	
கோபிசெட்டிபாளையம்	..
பெருந்துறை	..
ஈரோடு	..
இராமநாதபுரம் மாவட்டம்.	
கரியப்பட்டி	24,140
சிங்கம்புணரி	40,142
திருவாடானை	58,610
பரமக்குடி	16,010
கமுதி	33,450
திருநெல்வேலி மாவட்டம்.	
சேரன் மாதேவி	31,290
கோவில் பட்டி	19,960
குருவிக்குளம்	104
மானூர்	..
பரபாக்குடி	24,940
தூத்துக்குடி	15,450
சங்கரன் கோவில்	13,990
சேலம் மாவட்டம்.	
காவேரிப்பட்டணம்	63,228
கிருஷ்ணகிரி	18,559
தர்மபுரி	2,980
தஞ்சாவூர் மாவட்டம்.	
திருத்துறைப் பூண்டி	.. ..
வேதாரண்யம்	57,577
கும்பகோணம்	1,610
சீர்காழி	.. ..
கீவளூர்	18,930
பட்டுக்கோட்டை	.. ..
பாபநாசம்	.. ..

||கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறையின் 1961 ம் வருடம் மே மாதம் 20ம் தேதியிட்ட அறிக்கை எண் 65783||

பஞ்சாயத்து யூனியன்களினால் நடத்தப்படும் ஆபத்தும், சட்டவிரோதமானதுமான தொழில்களைப் பற்றிய அறிக்கை: பஞ்சாயத்துக்களுடன் கலந்தாலோசித்தல்பற்றிய விளக்கம் :

மனித உயிருக்கு, அல்லது தேகநலனுக்கு, அல்லது சொத்துக்கு, அபத்தும், குற்றமும் நேரக்கூடிய காரியங்கள் என்று குறிப்பிட்டு, கிராம அபிவிருத்தி—தலநிர்வாக துறையின் 12-1-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை (எண் 113) யுடன், 1958-ஆம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 111 (1)வது பிரிவின் கீழ், ஓர் அறிக்கை பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி சட்டத்தின் பிரிவு 111, துணைப் பிரிவு (2) உட்பிரிவு (1) ன் கீழ், பஞ்சாயத்துக்களைப் பற்றிய மட்டில் பஞ்சாயத்து யூனியன் மன்றம், குறிப்பிட்ட அதிகாரியின் முன்அனுமதியிருந்தபோதிலும், பஞ்சாயத்து வளர்ச்சி வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துக் கிராம எல்லைக்குள் எந்த இடத்திலும் அல்லது சட்டத்தின் 111வது பிரிவு துணைப்பிரிவு (1)-ன் கீழ் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி, எந்த பஞ்சாயத்துக் கிராம எல்லைக்குள்ளும், அனுமதி (Licence) யின்றியும்—அத்தகைய அனுமதியில் கூறப்பட்ட விதிகளை ஒத்து நடக்காத பட்சத்திலும் அதே அறிக்கையில்கூறப்பட்டுள்ளஎந்த வேலைக்காகவும் பயன்படுத்தக்கூடாது. இதனால், எதந் பஞ்சாயத்துக் கிராமமும் அல்லது கிராமத்தில் எந்த இடமும், மேற்குறிப்பிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ள வேலைகளுக்கு உபயோகப்படுத்தக்கூடாது என்று அறிவிக்கும் உரிமை பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு அளிக்கப்படுகிறது. குறிப்பிட்ட வேலைக்குக் குறிப்பிட்ட பஞ்சாயத்துக் கிராமம், மற்ற வேலைகளுக்கு அதன் எல்லைக்குட்பட்ட மற்ற பஞ்சாயத்து கிராமங்கள், என்றுபஞ்சாயத்து யூனியன் மன்றம் குறிப்பிட்டு வரையறை செய்யலாம்.

பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் இது விஷயத்தில் பஞ்சாயத்துக்களைக் கலந்தாலோசிக்க, சட்டத்தில் குறிப்பாக விதிகள் இல்லை என்ற போதிலும், சட்டத்தின் 111(2) (i) பிரிவின் கீழ் அதற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை அமுல் செய்யுமுன், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களைக் கலந்தாலோசிக்கும்படி யோசனை கூறப்படுகிறது.

அரசாங்கம் இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளுகிறது. பஞ்சாயத்துக்கள் சட்டம் பிரிவு 111(2)(i)ன் கீழ் ஏதாவது அறிக்கை பிறப்பிக்குமுன் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களைக் கலந்தாலோசிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றன ; மேலும், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் கொண்டு வரும் விஷயங்களை அங்கீகாரம் செய்வதற்கு முன்னர், அதற்கென்று குறிக்கப்பட்டுள்ள அதிகாரி, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களின் அபிப்பிராயங்களையும் அறிந்து, அவற்றையும் கவனத்தில் கொண்டு முடிவு செய்ய வேண்டும்.

||கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத்துறையின் 1961 ம் வருடம் மே மாதம் 23ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1540||

விநியோகத்தின் பேரில், செலுத்தப்படும் தவணைப் பணத்தில் சலுகை காட்டப்படும் பொறுக்கு விதைகளுள் உருளைக் கிழங்கு பயிரையும் சேர்த்துக்கொண்டதற்கான உத்தரவு:

உணவு—விவசாயத்துறையின் 16-11-1960-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை (எண் 3792)யின்26-வது பாராவில் (இணைப்பு1 பிரிவு 4), கிராம சேவக்கினால் உண்மையாக விநியோகிக்கப்பட்ட நெல், தினை வகை ஆகியவற்றின் பொறுக்கு விதைகளுக்கு— ஒரு ரெயில்வே மணங்குக்கு ரூ.2 என்று அவருக்கு பணம் கொடுப்பதை நீலகிரி மாவட்டத்தில் உருளைப் பயிருக்கும் விஸ்தரிக்கப்படலாம் என்று தமிழ் நாடு விவசாயத்துறை இயக்குநர், (Director of Agriculture) சிபாரிசு செய்துள்ளார். அரசாங்கம் அவருடைய யோசனையை ஏற்றுக்கொண்டு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆணையில் கூறப்பட்டுள்ள, ஒரு ரெயில்வே மணங்குக்கு ரூ. 2 அளித்தல் என்பதை நீலகிரி மாவட்ட உருளைக் கிழங்கு பொறுக்கு விதைகள், பிற மாவட்டங்களில் வினியோகிக்க உருளை விதைகள் பயிரிடப்படுமானால், அங்கும் அமுலில் வரும் என்றும் உத்தரவிடுகிறது.

(உணவு—விவசாயத் துறையின் 11—5—1961 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1720.)

மாவட்ட நிலையிலும், வட்டார நிலையிலும் வரைப் படங்களைத் (Maps) தயாரித்து காட்சிக்கு வைத்தல் பற்றிய விளக்கம் :

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி, நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமமும் ஒரு மைலுக்குள் இணைப்புப் பாதைகள், பருகுநீர், பள்ளிக்கூடம் முதலான சில அடிப்படை வசதிகளுடனும் விளங்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. எந்தக் கிராமமும் அலட்சியம் செய்யப்படவில்லை என்ற உறுதியை அளிக்கும் வகையில், வட்டாரங்களின் ஒவ்வொரு கிராமத்திலும், தேவையான விவரங்களை எல்லோரும் பார்க்கக்கூடிய இடங்களில், எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் விளம்பரம் செய்யப்படவேண்டும். இத்தகைய விளக்கங்களுக்கு வரைப் படங்களை அமைப்பது நல்ல முறை என்பதால், வட்டாரங்களில் செய்யப்பட்டுள்ள வசதிகளைப் பற்றிய விளக்கத்தைக் காட்டும் இரண்டு தொகுதி வரைப்படங்களைத் தயாரிக்க எல்லா வட்டாரங்களுக்கும் யோசனை கூறப்பட்டுள்ளது.

அரசாங்கம், இந்திய அரசாங்கத்தின் ஆலோசனையை ஆராய்ந்து, ஒவ்வொரு வட்டாரத்திலும் நான்கு தொகுதி வரைப் படங்களைத் தயாரிக்க உத்தரவிடுகிறது. தகுந்த அளவில் வரையப்படும் அப் படங்களில் ஊர்களின் பெயர்களுடன் அவற்றின் எல்லைகளும், ஜனத்தொகையும் குறிப்பிடப்படவேண்டும். நான்கு தனிப் படங்களில், கீழ்க் குறிப்பிட்ட செய்திகள், தகுந்த அடையாளங்களைக் கொண்டு விளக்கப்படவேண்டும் :

(i) பாதைகள், ரெயில்பாதைகள், தபால்-தந்தி நிலையங்கள் முதலான போக்கு வரத்துச் செய்திகள்.

(ii) ஆரம்பப் பள்ளிகளும், பருகு நீர் நிலைகளும்,

(iii) மருத்துவ மனைகள் (Hospitals), மருந்தகங்கள் (Dispensaries), துணை நிலையங்கள் குடும்பக் கட்டுப்பாடு-நிலையங்கள், முதலான மருத்துவ நிலையங்கள்.

(iv) சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், நிலச்சீர் திருத்தத் திட்டங்கள், தொழிற் பகுதிகள், கூட்டுறவு நிலையங்கள் முதலியன.

எல்லா வட்டாரங்களிலும் 1961-ம் வருடம் மார்ச்சு மாதம் 31-ம் தேதியில் உள்ள நிலையை விளக்கும் படங்

களைத் தயாரிக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது. வட்டாரத் தலைமை நிலையங்களின் செய்தி நிலையங்களில், எல்லோருக்கும் தெரியும்படி அவை மாட்டப்படவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் மார்ச்சு 31 தேதி வரையிருந்த நிலையை விளக்கி, ஜூன் மாதத்தில் தயாரிக்கப்பட வேண்டும். படங்களில் விளக்கப்பட்டுள்ள விஷயங்கள் சரியானவை என்று வட்டார வளர்ச்சி அதிகாரிகள் உறுதி அளிக்கவேண்டும்.

மாவட்ட நிலையிலும் அத்தகைய படங்கள் தயாரிக்கப்படவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது. மாவட்டக் கலெக்டர்கள், மாவட்டத்தின் மேற் கண்ட விவரங்களை விளக்கும் 4 தொகுதிப் படங்களைத் தயாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கிராம அபிவிருத்தித் துறையின் 1959-ம் வருடம் நவம்பர் மாதம் 4-ம் தேதியிட்ட அரசாங்க ஆணையின்படி, அவர்களுக்கு அனுப்பப்படும் வெறும் தல வளர்ச்சிப் படங்களில் இவ் விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். இந்தப் படங்களும் ஆண்டுக்கொரு முறை, மார்ச் மாதம் 31 தேதி வரையிலான விவரங்களை ஜூன் மாதத்தில் புதுப்பிக்கப் பட வேண்டும். வட்டார வளர்ச்சி அதிகாரிகளும், கலெக்டர்களும் அவர்களுடைய அலுவலகங்களில், அவர்களுடைய தெளிவுக்காகவும், செய்தியறிவிப்பு நிலையங்களுக்கு வருபவர்களின் விளக்கத்துக்காகவும், எல்லாருக்கும் பயன்படும்படி மாட்டி வைக்க வேண்டும்.

இதற்காக ஆகும் செலவுகளெல்லாம் அலுவலகச் சில்லரைச் செலவுகளில் ரூ. 20-க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். இச் செலவில், ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அதிகாரியும், ஒவ்வொரு மாவட்டத்துக்கும், நான்கு படங்களடங்கிய ஒரு தொகுதி தயாரிக்க வேண்டும்.

(கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத்துறையின் 1961-ம் வருடம் மே மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1397)

அபிவிருத்திக் கமிஷனர், கிராம அபிவிருத்திக் கமிஷனர், கலெக்டர் ஆகியோருக்கு அரசாங்கத்தால் அளிக்கப்பட்டுள்ள சில அதிகாரங்களின் விளக்கம் :

(Delegation of Powers made to Development Commissioner, Additional Development Commissioner and District Collector.)

இணைப்பு

அறிக்கை I

1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் பிரிவு 157 துணைப் பிரிவு (1)-ன்படி அளிக்கப்படும் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் விஷயத்தில், கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத்துறையின் 1960-ம் வருடம் ஜனவரி மாதம் 12-ம் தேதிய அறிக்கையை (எஸ்.ஆர்.ஓ. எண்: பி.88) இதனால் ரத்து செய்து அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கிறது.

அறிக்கை—II

1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் பிரிவு 157, (1), (4) துணைப் பிரிவுகளின்படி அளிக்கப்படும் அதிகாரங்களைப் பிரயோகிக்கும் விஷயத்திலும், கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத்துறையின் 1960-ம் வருடம் ஜனவரி மாதம் 12-ம் தேதிய அறிக்கையை (எஸ்.ஆர்.ஓ. எண்: பி. 89) ரத்து செய்யும் வகையிலும் அரசாங்கம், தமிழ் நாடு கிராம அபிவிருத்திக் கமிஷனருக்கு கீழ்க்கண்ட அரசாங்க அதிகாரங்களைப் பிரயோகிக்கும் உரிமையை அளித்துஅந்த அதிகாரங்கள், அரசாங்கப் பிரதம செயலாளரின் மாற்றத்துக்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டு, கிராம அபிவிருத்திக் கமிஷனரால் பிரயோகிக்கப்படும் என்று அறிவிக்கிறது.

சட்டப்பிரிவு.	அதிகாரங்களின் தன்மை.
3 (3)	பஞ்சாயத்து நகரங்கள், பஞ்சாயத்துக்கிராமங்கள் என்று வகைப்படுத்தி அறிவிப்பது சம்பந்தமாக சட்டப்பிரிவு (3) துணைப் பிரிவு (1) அல்லது (2)-ன்மேல், செய்து கொள்ளப்படும் புனர் விசாரணை மனுக்களைப்பற்றிய முடிவுகளைச் செய்யும் அதிகாரம்.
9 (1)	சட்டப்பிரிவு 3 (1)-ன் படி பஞ்சாயத்து நகரம் பஞ்சாயத்துக் கிராமம் என்று வகைப்படுத்தப்பட்டதை மாற்றுகின்ற அதிகாரம்.
துணைப்பிரிவு (2)-ன் .. 17-வது உட்பிரிவு.	காலியாகும் இடத்திற்குச் சாதாரண தேர்தல் நடத்த உத்தரவிடும் அல்லது அனுமதிக்கும் அதிகாரம்.
20 (2)	பஞ்சாயத்துக்களின் வாக்காளர் பட்டியலை வெளியிடும் வகையை உத்தரவிடுகின்ற அதிகாரம்.
20 (4)	பஞ்சாயத்துக்களின் வாக்காளர் பட்டியல் அல்லது அதன் ஒரு பகுதியைத் திருத்தி அமைத்து, மறு வெளியீடு வெளியிடும் வகையில் உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம்.
21	யாதொரு பஞ்சாயத்தின் வாக்காளர் பட்டியல் திருத்தத்தையும் (amendments) வெளியிடும் வகையில் உத்தரவிடும் அதிகாரம்.
57 (3)	பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரின் எண்ணிக்கை, பதவி, தரம், சம்பளம், கட்டணம், படி, முதலானவற்றை நிர்ணயிக்கவும், மாற்றவுமான அதிகாரமும், இவ்விஷயங்களில் வேறுபட, முன் அனுமதி பெற்றுள்ள பஞ்சாயத்து யூனியன் மன்ற விஷயங்களில் ஒத்துப் போகுமாறு உத்தரவிடும் அதிகாரமும்.

60 (2) .. .. பஞ்சாயத்து யூனியன் மன்ற எந்த ஒரு அதிகாரி அல்லது ஊழியரையும் மாநிலத்தி லுள்ள வேறு எந்த பஞ்சாயத்து யூனியன் மன்றத்துக்கோ அல்லது நகராண்மைக் கழகத்துக்கோ (Municipalities) மாற்றுவதற்கான அதிகாரம்.

101 .. .. .. ஒரு இடத்தைச் சந்தையா அல்லவா என்ற பிரச்சினையில் முடிவு செய்யும் அதிகாரம்.

104 .. .. .. பொதுச் சந்தைகள், தனிச் சந்தைகள் ஆகியவற்றைப் பஞ்சாயத்து யூனியன் சந்தைகள், பஞ்சாயத்துச் சந்தைகள் என்று வகைப்படுத்தவும், அத்தகைய எந்த ஒரு சந்தையின் நிர்வாக ஏற்பாடு செய்யவும், பஞ்சாயத்து யூனியன் பஞ்சாயத்து ஆகியவைகளிடையே அச்சந்தைகளால் வரும் வருவாயை நிர்ணயிக்கவும், அல்லது பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியனுக்கு அவற்றால் அளிக்கப்படும் நன்கொடைகளை நிர்ணயிக்கவும் அதிகாரம்.

121 (5) .. .. ஒரு ரிவினியூ மாவட்டத்தில், ஒரு பகுதியை உள்ளடக்கியுள்ள ஒரு ஸ்தல ஸ்தாபனத்துக்கும், மற்றொரு ரிவினியூ மாவட்டத்தில் ஒரு பகுதியை உள்ளடக்கியுள்ள மற்றொரு ஸ்தல ஸ்தாபனத்துக்கும் இடையில் தொழில் வரியைப் பிரித்துக் கொடுக்கும் அதிகாரம்.

125 .. .. .. ஏதாவதொரு குறிப்பிட்ட விஷயத்தில் சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஏதாவதொரு சர்சார்ஜ் அல்லது வரி ஆகியவைகளைச் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கும் அதிகாரம்.

128 .. .. .. ஒவ்வொரு, பஞ்சாயத்து யூனியன் மன்றத்துக்கும் ஆண்டுதோறும் தலக்கல்வி மானியம் அளிக்கும் விஷயம்.

136 .. .. .. பஞ்சாயத்து யூனியன் (பொது) நிதியிலிருந்து பஞ்சாயத்து யூனியன் (கல்வி) நிதிக்கு நன்கொடை அளிப்பதுபற்றி முடிவு செய்தல்.

139 (1) .. .. பஞ்சாயத்து வளர்ச்சி வட்டாரத்துக்குள், பஞ்சாயத்து யூனியன் மன்ற நிதியிலிருந்து செலவு செய்தல் பற்றிய தனி உத்தரவுகள் பிறப்பிக்கும் அதிகாரம்.

140 (6) .. .. பஞ்சாயத்து யூனியன் வரவு செலவுத் திட்டத்தின் மேல் உத்தரவுகள் பிறப்பிக்கும் அதிகாரம்.

151 (1), (2), (12) .. சட்டம், விதிகள் ஆகியவைகளை அமுல் நடத்தாமல விடுதல், அல்லது மறுத்தல், அல்லது அச்சட்ட விதிகளை மீறி நடத்தல், அல்லது அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தல் ஆகியவைகளுக்காக, பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர் அல்லது துணைத்தலைவரை நீக்குகின்ற அதிகாரம்.

153 (13) .. .. பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின அனுமதிக்கப்பட்ட உறுப்பினர் தொகையில், மூன்றில் இரண்டு பகுதியினரின் ஆதரவுடன், பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர் அல்லது துணைத்தலைவரின் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால், சம்பந்தப்பட்ட தலைவர் அல்லது துணைத்தலைவரை நீக்குகின்ற அதிகாரம்.

177 (1) .. .. ஒரு ரிவினியூ மாவட்டத்தில் ஒரு பகுதியை உள்ளடக்கியுள்ள ஒரு ஸ்தல ஸ்தாபனத்துக்கும், மற்றொரு ரிவினியூ மாவட்டத்தில் ஒரு பகுதியை உள்ளடக்கியுள்ள மற்றொரு ஸ்தல ஸ்தாபனத்துக்கும் இடையில் தகராறு வந்தால், தீர்த்துவைத்துத் தீர்ப்பளிக்கும் அதிகாரம்.

அறிக்கை III

1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 157 பிரிவின் துணைப்பிரிவுகள் (1), (4) ஆகியவைகளில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைச் செயல்படுத்தும் விஷயத்தில், அரசாங்கம், கிராம அபிவிருத்தி-தலநிர்வாகத்துறையின் 1960-ம் வருடத்திய ஜனவரி மாதம் 12-ம் தேதிய அறிக்கை (எஸ்.ஆர்.ஓ. எண்:பி.90) யில் கீழ்க்கண்ட திருத்தத்தைச் செய்து அறிவிக்கிறது :

திருத்தம் (Amendment).

மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கையில், அதன் முன்னுரையில், "அபிவிருத்திக் கமிஷனர்" என்று குறிப்பிடப்பட்டுள்ள சொற்களுக்குப் பதிலாக "அரசாங்கப் பிரதம செயலாளர்" என்ற சொற்கள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.

||கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 10-5-61 தேதியிட்ட அரசாங்க ஆணை (1335) யின் இணைப்பு||

தனியார்ப் பள்ளிகள், முதியோர் பள்ளிகள் ஆகியவற்றுக்கு உதவி மானியங்களை அளிக்கும் முறையில் மாறுதல்

(Change in procedure in disbursement of grants to aided schools, adult schools etc.,)

கல்வித் துறையின் 27–9–1960 தேதியிட்ட அரசாங்க ஆணை (எண்: 2075) யின் இணைப்பு 1, 3-வது பாராவில் கூறப்பட்டுள்ள விஷயம் கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் எல்லைக்குட்பட்ட தனியார் நடத்தும் ஆரம்பப் பள்ளிகளுக்கு அளிக்கப்படும் உதவி மானியத் தொகை பஞ்சாயத்து யூனியன் கமிஷனராலேயே, மாவட்டக் கல்வி அதிகாரிகளினால் அனுப்பப்படும் கல்வி மானியப் பட்டியல்களை ஒட்டி வழங்க வேண்டும் என்று அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடு 1961–62 தொடக்கத்திலிருந்து நடைமுறைக்கு வரும் என்று கல்வித் துறையின் 3–11–1960 தேதியிட்ட அரசாங்க ஆணை (எண் : 2312)யில் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

அரசாங்க உதவி பெறும் பள்ளிகள், பள்ளி உணவுக் குழுக்கள், முதியோர் பள்ளிகள் ஆகியவற்றுக்கு அளிக்கும் மானியங்கள், 1961–62 ஆண்டுக்கான பஞ்சாயத்து யூனியன்களின் வரவு செலவுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வசதி செய்து தரும் வகையில், ஊரக வளர்ச்சித் தல நிர்வாகத் துறையின் 22–9–1960 தேதியிட்ட அறிக்கை (எண் : 165757)யில், உத்தரவாகியுள்ளது. பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள், உதவி நிதி பெறும் பள்ளிகள் (Aided schools) ஆகியவற்றுக்கு ஆகும் செலவு, மொத்தச் செலவுக்கு அளிக்கப்படும் மானியத் தொகை நில வரி ஒப்படைப்பு அடிப்படையில் ஆகும் செலவுக்கான தொகை மாதா மாதம் பகுதி பகுதியாகப் பஞ்சாயத்து யூனியனுக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்.

மேற்குறித்த விவரங்களை ஒட்டி, கீழ்க்காணும் விதி முறைகள் பிறப்பிக்கப்படுகின்றன :—

(1) அரசாங்க உதவி பெறும் பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்க, கல்வித் துறையின் 27–9–1960 தேதியிட்ட அரசாங்க ஆணை (எண் : 2075) யின் 1-வது இணைப்பின் 3-வது பாராவில் கூறப்பட்டுள்ள விதி முறைகள் கையாளப்பட வேண்டும். இந்த முறை அந்த வகைப் பள்ளிகளுக்கு 1–4–1961-லிருந்து வழங்கப்படும் எல்லா மானியங்கள் விஷயத்திலும் நடைமுறைக்கு வரும்.

மாவட்டக் கல்வி அதிகாரி, கல்வி மானியப் பட்டியல்களை ஆராய்ந்து, அவற்றை அங்கீகரித்துப் பணம் பெறுவதற்குப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு, அது எந்த மாதச் சம்பளப் பட்டியலோ அந்த மாதத்துக்கு முன்மாதம் 27-ம்தேதி அளவில் அனுப்பி வைப்பார். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் செக்கைப் பெற்றுப் பணமாக மாற்றிப் பள்ளி நிர்வாகத்தினர் மாதத்தின் முதல் தேதியிலேயே பணம் பெறுமாறு செய்ய இந்த முறை மிகவும் தேவையானது. மே முதல் தேதி கொடுக்கப்பட வேண்டிய ஏப்ரல் மாதச் சம்பளங்களிலிருந்து இந்தத் தேதிமுறை கண்டிப்பாக அனுசரிக்கப்பட வேண்டும். மாவட்டக் கல்வி அதிகாரி, அங்கீகரிக்கப்படும் சம்பளப் பட்டியல்கள் 27-ம் தேதியே பஞ்சாயத்துக் கமிஷனர்களிடம் சேர்வதற்கான ஒரு பொருத்தமான கால அட்டவணையைத் தயாரித்து—தேவையான விதி முறைகளை வகுத்து பள்ளிகளின் துணை மேற்பார்வையாளர்களுக்கும், பள்ளிகளின் நிர்வாகத்தினருக்கும் கட்டளைகள் பிறப்பிக்க வேண்டும்.

(2) இதே போன்ற, நடைமுறை, பள்ளி உணவு மானியங்களையும் முதியோர் பள்ளி மானியங்களையும் வழங்கும் விஷயத்திலும் அமுலாக்கப்பட வேண்டும். மானியங்களை எத்தனைத் தவணைகளில், எந்தக் கால அட்டவணையை அனுசரித்து வழங்க வேண்டும் என்னும் விஷயங்களில், இப்போதைய நடைமுறைகளே தொடர்ந்து இருக்கும்.

(3) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களால், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள், உதவி பெறும் பள்ளிகள் ஆகியவற்றின் பட்டியல் தயாரிக்கப்பட்டுக் கிளைக் கஜானாக்களுக்கு (Sub Treasuries) அனுப்பி வைக்கப்படுவதுடன், 1–4–1961-ல் அல்லது அதற்குப் பின்னர் பாக்கியாக நிற்கும் மானியக் கோரிக்கைகள் விஷயத்தில் கிளைக் கஜானா பெறப்பட்ட பட்டியல்களின் மீது பணம் வழங்கவும் கூடாது.

இணைப்பு

வரிசை எண்.	பஞ்சாயத்து யூனியனின் பெயர்.		யூனியனில் சேர்ந்த பிர்க்காக்கள்.
	வடக்கு திருச்சிராப்பள்ளி வளர்ச்சி மாவட்டம்		
1.	தொட்டியம்	..	தொட்டியம் ; முசிரியின் ஒரு பகுதி.
2.	முசிரி	..	முசிரியின் ஒரு பகுதி புலிவலம்.
3.	லால்குடி	..	லால்குடியின் ஒரு பகுதி.
4.	வேப்பந்தட்டை	..	வெங்கோலம் : வள்ளிகொண்டபுரம்.
	தெற்கு திருச்சிராப்பள்ளி வளர்ச்சி மாவட்டம்		
5.	கே. பரமத்தி	..	சின்னதாராபுரம்; பரமத்தி.
6.	குளித்தலை	..	குளித்தலை ; தோகைமலை.
7.	திருவரங்குளம்	..	ஆலங்குடி ; புதுக்கோட்டை; வல்நாடு ; வரகூர்
	வடக்கு திருநெல்வேலி வளர்ச்சி மாவட்டம்		
8.	தூத்துக்குடி.	..	தூத்துக்குடி.
9.	கோயில்பட்டி	..	கோயில்பட்டி.
10.	சங்கரன்கோயில்	..	சங்கரன்கோயில்.
11.	குருவிக்குளம்	..	பழங்கோட்டை ; திருவேங்கடம்.
	தெற்கு திருநெல்வேலி வளர்ச்சி மாவட்டம்		
12.	சேரன்மாதேவி	..	மேல சேவலின் ஒரு பகுதி; சேரன்மாதேவியின் ஒரு பகுதி. அம்பாசமுத்திரத்தின் ஒரு பகுதி.
13.	பாப்பாகுடி.	..	அம்பாசமுத்திரத்தின் ஒரு பகுதி; சேரன்மாதேவியின் ஒரு பகுதி; பாப்பாகுடி.
14.	மானூர்	..	மாதவக்குறிச்சி ; கங்கைகொண்டான்; திருநெல்வேலி.
	வடக்கு கடலூர் வளர்ச்சி மாவட்டம்		
15	மேல் மலையனூர்.	..	மேல் மலையனூர் ; சேதாம்பாடி.
16	செஞ்சி	..	செஞ்சி ; சேதியமங்கள்.
17	திருநாவலூர்	..	திருநாவலூர் ; உளுந்தூர்ப் பேட்டை.

வரிசை எண்.	பஞ்சாயத்து யூனியனின் பெயர்.	யூனியனில் சேர்ந்த பிர்க்காக்கள்.

தெற்கு கடலூர் வளர்ச்சி மாவட்டம்

18	பண்ணுருட்டி ..	காடம்புலியூர் ; பண்ணுருட்டி.
19	ஓரத்தூர் ..	சிதம்பரம் ; ஸ்ரீமுஷ்ணம் ; சேத்தியாத்தோப்பு ; லால் பேட்டை.
20	கள்ளக் குறிச்சி ..	கள்ளக் குறிச்சியின் ஒரு பகுதி ; வேடகநந்தல்.
21	சின்ன சேலம் ..	சின்ன சேலம் ; கள்ளக் குறிச்சியின் ஒரு பகுதி ; வேடகநந்தல்.

தெற்கு மதுரை வளர்ச்சி மாவட்டம்

22	மதுரை கிழக்கு ..	அரும்பானூர் ; ஒத்த கடை , குண்ணத்தூர்.
23	மதுரை மேற்கு ..	சமய நல்லூர் ; கொள்ளப்பாண்டி.
24	மேலூர் 1 ..	மேலூர் ; வெள்ளாளப்பட்டி ; வெள்ளானூர்.
25	உசிலம்பட்டி ..	உசிலம்பட்டி.
26	தே. கல்லுப்பட்டி. ..	கல்லுப்பட்டி.
27	திருமங்கலம் ..	திருமங்கலம் ; பண்ணிக்குண்டு.

வடக்கு மதுரை வளர்ச்சி மாவட்டம்

28	வாடிப்பட்டி ..	சோழவந்தான் ; நீரேத்தான்.
29	அலங்கா நல்லூர். ..	அலங்கா நல்லூர் ; பாலமேடு. நீரேத்தான்.

வடக்கு வேலூர் வளர்ச்சி மாவட்டம்

30	கீழ்வைத்திநுங் குப்பம். ..	கீழ்விளாகூர் ; குடியாத்தம்.
31	ஆர்க்காடு ..	ஆர்க்காடு ; இராணிப்பேட்டை.

வடக்கு சேலம் வளர்ச்சி மாவட்டம்

32	ஒசூர் ..	ஒசூர்.
33	காவேரிப்பட்டணம் ..	காவேரிப்பட்டணம். பாரூர்.
34	கிருஷ்ணகிரி ..	கிருஷ்ணகிரி.
35	தர்மபுரி ..	தர்மபுரி ; கரியமங்கலம்.
36	கொளத்தூர் ..	மேட்டூர்.

தெற்கு சேலம் வளர்ச்சி மாவட்டம்

37	பெத்தநாயக்கன் பாளையம். ..	கொமாரபாளையம். பெத்தநாயக்கன்பாளையம்.
38	நாமகிரிப் பேட்டை. ..	நாமகிரிப் பேட்டை ; மங்களபுரம்.
39	கங்கவல்லி ..	வீரங்கனூர். கங்கவல்லி.
40	இட்டைப்பாடி ..	இடைப்பாடி. தேவூர். கங்கணபுரம்.

தெற்கு வேலூர் வளர்ச்சி மாவட்டம்

41	கலசப்பாக்கம் ..	கலசப்பாக்கம். கடலாடி.
42	ஆரணி ..	ஆரணி. சத்தியவிஜய நகரம் (எஸ்.வி.நகரம்). அகரபாளையம்.
43	துரிஞ்சாபுரம் ..	திருவண்ணமலை வடக்கு ; நாயுடு மங்கலம் ; கீழ் பெண்ணாத்தூர்.
44	வெம்பாக்கம் ..	தூசி ; செம்பாக்கல் ; பெருங்காத்தூர்.
45	போளூர் ..	போளூர் ; சந்தவாசல்.

மேற்கு கோயமுத்தூர் வளர்ச்சி மாவட்டம்

46	பெரிய நாயக்கன் பாளையம். ..	பெரிய நாயக்கன் பாளையம்.
47	அவிநசி ..	அவிநசி ; அன்னூர் ; செய்யூர்.
48	பல்லடம் ..	பல்லடம்.
49	திருப்பூர் ..	திருப்பூர்.

கிழக்கு தஞ்சாவூர் வளர்ச்சி மாவட்டம்

50	திருத்துறைப்பூண்டி ..	திருத்துறைப் பூண்டி. அலத்தம்பாடி ; தலை ஞாயிறு ; வேதாரண்யம்.
51	வேதாரண்யம் ..	வேதாரண்யம்.
52	மாயவரம் ..	மாயவரம் ; மணல்மேடு ; செம்பெனர்கோயில்.
53	சீர்காழி ..	சீர்காழி ; திருவெண்காடு.
54	கிவனூர் ..	கிவனூர் ; குன்னியூர்.

மேற்கு தஞ்சாவூர் வளர்ச்சி மாவட்டம்

55	பட்டுக்கோட்டை ..	பட்டுக்கோட்டை ; அதிராம்பட்டினம்.
56	கும்பகோணம் ..	கும்பகோணம் ; சோழபுரம்.
57	பாபநாசம். ..	பாபநாசம். மில்லாத்தூர்.

செங்கற்பட்டு வளர்ச்சி மாவட்டம்

58	திருக்கழுக்குன்றம் ..	மானமதி ; திருக்கழுக் குன்றம் ; பொன்விளைந்த களத் தூர்.
59	உத்திரமேரூர் ..	உத்திரமேரூர் ; மாகரல் (தெற்கு) ; சாலைவரக்கம்.

வரிசை எண்.	பஞ்சாயத்து யூனியனின் பெயர்.	யூனியனில் சேர்ந்த பிர்க்காக்கள்.
60	ஸ்ரீ பெரும்புதூர். ..	மதுர மங்கலம் ; ஸ்ரீ பெரும்புதூர் ; சொப்பணஞ்சேரி ; குண்ணத்தூர்.
61	பூந்தமல்லி ..	பூந்தமல்லி.
52	திருவள்ளூர் ..	பாண்டூர். திருவள்ளூர்.
63	கடம்பத்தூர் ..	மப்பேடு. பாண்டூர்.

கிழக்கு கோயமுத்தூர் வளர்ச்சி மாவட்டம்

64	கோபிசெட்டி பாளையம். ..	கோபிசெட்டிபாளையம். குகளூர்.
65	சத்தியமங்கலம் ..	புஞ்சைப் புளியம்பட்டி. நம்பியூர். சத்தியமங்கலம்.
66	பெருந்துறை ..	பெருந்துறை. சென்னிமலை.
67	ஈரோடு ..	ஈரோடு.

கிழக்கு இராமநாதபுரம் வளர்ச்சி மாவட்டம்

68	சிங்கம்புணரி ..	வரப்பூர் ஜமீன்; சதுர்வேதி மங்கலம் ஜமீன்; மாத்தூர் ஜமீன்; திருக்கோஷ்டியூர் ஜமீன்.
60	பரமக்குடி ..	பரமக்குடி ஜமீன்; பரம்பூர் ஜமீன்; தடுத்தளன் கோட்டை ஜமீன; பார்த்தி ஹனூர் ஜமீன்; எமனேஸ்வரம்.
70	கமுதி	அபிராமம் ஜமீன். கொடுமானூர் ஜமீன். முதுகுளத்தூர் ஜமீன். கமுதி ஜமீன். பெருநாலி ஜமீன்.

மேற்கு இராமநாதபுரம் வளர்ச்சி மாவட்டம்

71	ஸ்ரீவில்லிபுத்தூர். ..	ஸ்ரீவில்லிபுத்தூர். மல்லி.
72	சிவகாசி ..	எர்கோட்டை. மங்கலம். சிவகாசி.
73	கரியப்பட்டி ..	கரியப்பட்டி. கல்குறிச்சி. முத்துக்கான்குளம். திருச்சுல்.

கிழக்கு இராமநாதபுரம் வளர்ச்சி மாவட்டம்

74	திருவாடானை ..	திருவாடானைக் கிழக்கு ஜமீன் ; திருவாடானை மேற்கு ஜமீன்; அறுநூத்தி மங்கலம் ஜமீன் ; தொண்டி ஜமீன்; புலையல் ஜமீன்; சருகணி ஜமீன் ; அலைந்தூர் ஜமீன்; திருவாடானை (அரசாங்க பிர்கா).

நீலகிரி வளர்ச்சி மாவட்டம்

75	உதகமண்டலம் ..	குனுனேரி ; உதகமண்டலம் ; குந்தா.

[கல்வி—பொது சுகாதாரத் துறையின் 21-3-61 தேதியிட்ட அறிக்கை எண் 27115-ஈE3/61.]

1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்படி "மேற்பார்வையாள"ருடைய (Inspector) அதிகாரங்கள், பொறுப்புக்களை அமுல் நடத்த அதிகாரி நியமித்தல்

தல நிர்வாகத்துறையின் 12—1—1960-ம் தேதியிட்ட, அரசாங்க ஆணை (எண் 75)-யில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளை ஒட்டி, 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், 2(15) பிரிவின் கீழ், மேற் பார்வையாளரின் அதிகாரங்களையும், பொறுப்புக்களையும், நிறைவேற்றுவதற்கு, கிராம அபிவிருத்திக் கமிஷனரும், சம்பந்தப்பட்ட மாவட்டக் கலெக்டரும் ' மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று, அரசாங்கம் உத்தரவிடுகிறது. இந்த மேற்பார்வையாளரின் அதிகாரங்களும் பொறுப்புக்களும் இவ்வுத்தரவின் பின் இணைப்பில் கூறப்படும் விஷயங்களைப் பொறுத்தே இருக்கும்.

2. 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், 158(2) பிரிவின் கீழ் அரசாங்கப் பிரதம காரியதரிசி மேற்படி பிரிவின் துணைப்பிரிவு (1)-ல் கூறப்படும் அதிகாரங்களை, பிரயோகம் செய்ய அதிகாரமளிக்கப்படுகிறார்.

இணைப்பு

அறிக்கை

1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 2-வது பிரிவு (15) உட்பிரிவின் கீழ், கிராம அபிவிருவிருத்தி—தல நிர்வாகத்துறையின் 12—1—60 தேதியிட்ட அறிக்கை (எண் பி-86) யின்படி அமுல் நடத்துவதை நிறுத்தி வைத்து, கீழே கொடுக்கப்பட்ட பட்டியலின் 1-வது பத்தியில் குறிப்பிடப்படும் அதிகாரிகளை மேற் பார்வையாளராக நியமித்து உத்தரவிடுவதுடன் மேற்படி சட்டத்தின்படி நிறைவேற்றப்பட வேண்டிய மேற்பார்வையாளரின் அதிகாரங்களும், கடமைகளும் 2-வது பத்தியிலும், பொதுவாக அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் அல்லது பஞ்சாயத்து சம்பந்தப்பட்டதா என்பதை 3-வது பத்தியிலும் கூறப்பட்டுள்ளன :

அதிகாரிகள்	விதிகள்	பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் (அ) பஞ்சாயத்துக்கள்
1. கிராம அபிவிருத்திக் கமிஷனர்	(a) பிரிவு 19 (1), 19 (2), 19 (4), 19 (6), 23 (1), 49, 51 (1), 51 (2), 55 (3), 99 (1), 99 (2) 100(2)(d), 100(3), (a) யும் (b) யும், 139(1),	பொதுவாகப் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுடன் சம்பந்தப்பட்டது,

அதிகாரிகள்	விதிகள்	பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் (அ) பஞ்சாயத்துக்கள்
	139 (4), 142, 145 (1), 146, 147, 148, 149, 155 (4), 156, 158, 173, 180 (1)ம் 4-வது அட்டவணையின் விதி 14 ம்.	
	(b) பிரிவுகள் (3) 2, 6-ம் 16ம்.	பொதுவாகப் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுடன் சம்பந்தப்பட்டது
2. கலெக்டர்.	3 (1), 3 (4), 8, 10 (1), 10 (2), 15, 17 (1), 17 (3) (c), 18 (1), 28 (1), 34 (3), 49, 51 (1), 51 (2), 52 (1), 57 (3), 99 (2), 100 (2) (d), 100 (3) (a)யும் (b)யும், 106 (b) 139 (1), 139 (4), 140 (3), 142, 145 (1), 146, 147, 148, 149, 150 (1), 150 (2), 150 (11), 150 (12), 152 (12), 152 (13), 156, 158, 173, 180 (1). 188 (2), 188 (3) ம் 4-வது அட்டவணையின் விதி 7 (2)-ம்.	பஞ்சாயத்துக்களுடன் சம்பந்தப் பட்டது.

[கிராம அபிவிருத்தி-தலநிர்வாகத் துறையின 10—5—'61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண்:1334]

பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு மானியங்கள் அளிப்பதற்கென்று வளர்ச்சி வட்டாரங்களை வகைப்படுத்துதல் :

தலக் கல்வி மானியம், தல செஸ் சர் சார்ஜ் ஈட்டு மானியம் ஆகிய மானியங்களை அங்கீகரிப்பதற்கான வட்டாரங்கள் வகைப்படுத்தப்படுவதை 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் அனுமதிக்கிறது. சட்டமன்றக் குழுவின், தல நிர்வாகத்துறை பற்றிய துணைக்குழு, வட்டாரங்களின் நிலவரிவிதிப்பு அடிப்படையில் அமைந்த ஒரு தலப் பொருளீட்டு பகுப்பு முறையைக் கூறியுள்ளது. அத்துணைக்குழு, பஞ்சாயத்து யூனியன்களை ஏ, பி, சி, டி என்று நான்கு வகையாக பஞ்சாயத்து வளர்ச்சி வட்டாரங்களைத் தரம் பிரிக்கச் சிபாரிசு செய்துள்ளது. அரசாங்கம் மேற்படி குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட முறையை விரிவாக ஆராய்ந்த பின்னர், வட்டாரங்களை வகைப்படுத்தும் விஷயத்தில் கீழ்க்கண்ட முறையை அமுல் நடத்த உத்தரவிடுகிறது :

ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திலும், ஒவ்வொரு பிரிவிலும் இத்தனை வட்டாரங்கள் இருக்க வேண்டும் என்ற எண்ணிக்கையை அரசாங்கம் நிர்ணயிக்கும். மாவட்டக் கலெக்டர், வட்டாரங்களை நிலவரி வருவாய் விகிதத்தின் அடிப்படையில் பல்வேறு வகைகளாகப் பகுத்து ஒரு அறிக்கையைத் தயாரித்து மாவட்ட அபிவிருத்தி மன்றத்திற்குச் (District Development Council) சமர்ப்பிக்க வேண்டும். அதன் பேரில், மாவட்ட அபிவிருத்தி மன்றம் கலெக்டரின் அறிக்கையை அங்கீகரிக்கவோ, அல்லது குறிப்பிட்ட வட்டாரங்களை ஒருவகையிலிருந்து இன்னொரு வகைக்கு மாற்றுதல் செய்யக் கருதினால், ஒன்றுக்கொன்று மாற்றப்பட வேண்டும் என்ற கருத்துக்களையும் குறிப்பிட்டு ஆலோசனை கூறும்.

மாவட்ட அபிவிருத்தி மன்றம், அரசாங்கம் குறிப்பிட்டுள்ள மொத்த எண்ணிக்கையில் மாறுதல் ஏற்படாத வகையில் ஒன்றுக்கொன்று மாற்றம் செய்ய ஆலோசனை கூறியிருந்தால் அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, கலெக்டரே, தாம் தயாரித்த அறிக்கையில் திருத்தம் செய்யலாம். இத்தகைய திருத்தத்துக்குட்பட்டு, அந்த அறிக்கை, கலெக்டரால் அங்கீகரிக்கப்படவேண்டும். அதன்படி 1961–62-ம் வருடத்தில் தற்காலிகமான பகுப்புக்களாக அவை அமுலில் இருக்கும்.

கலெக்டரால் அங்கீகரிக்கப்பட்ட 1961–62-ம் வருடத்துக்கான அந்தப் பகுப்புக்கள் தற்காலிகமானவை. முறையான, ஐந்தாண்டுக் காலத்துக்கான பகுப்பு முறை 1962-63 லிருந்து 1966–67 ஆண்டுவரை அமுலில் இருக்கும். அது 1961–62 ஆண்டு முடிவில் 1961-ம் ஆண்டு ஜனத்தொகைக் கணக்கின்படி ஜனத்தொகை விவரத்தை அறிந்து கொண்டபின் நடைமுறைக்கு வரும். இப்பொழுது ஏற்படுத்தப்பட்ட இந்தப் பகுப்பு முறையே தல செஸ் சர் சார்ஜ் ஈட்டு மானியம், இணைப்புப்பாதைகளுக்காகும் செலவுகளுக்கென்று மக்களிடம் வசூலிக்கப்படும் திருப்பிப் பெறத்தக்க நன்கொடைகள் முதலானவைகளைப் பற்றிய விஷயங்களில் கையாளப்படும். இணைப்புப் பாதைகள் விஷயத்தில் மக்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நன்கொடைகள் ஏ, பி, சி, டி வகுப்பு வட்டாரங்களில் முறையே 50, 40, 30, 20 சதவீதங்களாகும்.



வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்திலிருந்து 1961 ஜூலை மாதத்தில் ஒலிபரப்ப இருக்கும் கிராமிய நிகழ்ச்சிகளின் விவரம் :—

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்

நம் மாதர் மன்றம் ; திரைப்பட இசை ; நாட்டுப் பாடல் பயிற்சி ; பாட்டு

ஒவ்வொரு சனிக்கிழமையும்

முதியோர் இலக்கிய வகுப்பு ; பாரதிப் பாடல்கள் ; பாட்டு

ஒவ்வொரு திங்கட்கிழமையும்

வாராந்தர மார்க்கட் நிலவரங்கள் ; பாட்டு

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும்

திரைப்பட இசை ; கிராம ரேடியோ மன்றம் ; பாட்டு

ஒவ்வொரு வியாழக்கிழமையும்

நமது திட்டம் ; மெல்லிசை ; பாட்டு

இவையன்றி ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகள்.

சனி (1—7—1961) நம் நிகழ்ச்சி நிரல் ; வானொலித் தொடர்

ஞாயிறு (2—7—1961) ஆராய்ச்சிக் கூடம் ; " கிராமம் போவோமா......... " (செய்திக் கதிர்)

திங்கள் (3—7—1961) வானொலியின் டி.எஸ். ஒலிப் பதிவுகள்; அடுத்த வீட்டு அம்பலம் (என். ராகவன் அளிக்கும் தொடர் நிகழ்ச்சி.)

புதன் (5—7—1961). கால்நடைகளைப் பற்றிய விவாதம், சித்தர் பாடல்கள் ;

மன அமைதி : (1) பங்களாவாசம் (தொடர் நிகழ்ச்சி.) (எம். ஆர். ராஜகோபாலன் தயாரித்தளிப்பது.)

வியாழன் (6—7—1961). ஒட்டு மாம்பழம் : (இசை நிகழ்ச்சி.)

ஞாயிறு (9—7—1961). பூமிதானம்—கிராமதானம்—(பேட்டி).

நாடோடிக் கலை : ஒயில் கும்மி.

திங்கள் (10—7—1961) வானொலியின் டி. எஸ். ஒலிப்பதிவுகள்.

சகல கலா வல்லவர் (ஜி. செல்வம் தயாரித்தது.)

புதன் (12—7—1961). திருப்புகழ்.

கிராம நலக் கழகம் (விவாதம்.)

தக்காளிச் செடியில் பூச்சித் தடுப்பு—(விவாதம்).

வியாழன் (13—7—1961). மணல் மேட்டு மாநாடு (தொடர் நிகழ்ச்சி).

சனி (5—7—1961). காஷ்மீரக் கைத்தொழில்கள் (விவாதம்).

ஞாயிறு (16—7—61). நம் நாட்டு விவசாயியின் கடிதம்.

சந்திரஹாசன் (நாடகம்).

திங்கள் (17—7—1961). நாட்டுப் பாடல்.

தங்கச்சி தாராளம் (பட்டுக்கோட்டை குமரவேலு தயாரித்தது).

புதன் (19—7—1961).. அருட்பா.

மீனுக்கு வரும் நோய்கள் (விவாதம்).

ஆடிக்காற்று (இசை நிகழ்ச்சி).

வியாழன் (20—7—1961). திருவள்ளுவர் திரும்பி வந்தார்—(மஹநந்தி தயாரித்தது).

ஞாயிறு (23—7—1961). நலம் தரும் திட்டம் (விவாதம்).

கிராமப் பஞ்சாயத்து.

கள்ளத்தோணி வழக்கு (வாசு தயாரித்தளிப்பது).

திங்கள் (24—7—1961). நாட்டுப் பாடல்.

விறகு வண்டி (எஸ். பூமிநாதன் தயாரித்தது).

புதன் (26—7—1961). காவடிச் சிந்து.

யானைக்கால் நோயும் — சிகிச்சையும் (விவாதம்).

முச்சந்தி விநாயகர் (சிறு கதை).

சனி (29—7—1961). " பிறர் துன்பம் கண்டு........ (பாட்டு).

கோழிப் பண்ணை (பேட்டி).

ஞாயிறு (30—7—1961). " பாட்டைக் கேளுங்கள் " (இசை நிகழ்ச்சி).

'ஒன்றே குலம்' (சிறப்பு நிகழ்ச்சி).

திங்கள் (31—7—1961). நாட்டுப் பாடல்.

" வெள்ளை வேஷ்டி " (சிறப்பு நிகழ்ச்சி).

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.



கவியரசருக்கு அஞ்சலி

1-4. கவியரசர் தாகூரின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் சென்னை அரசாங்க மாளிகைப்பூங்காவில் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

கூட்டுறவுக் கொள்கை மிளிர..

5-6 கும்பகோணத்தில் 20-5-61 அன்று தமிழ்நாடு கூட்டுறவு மகாநாடு அமைச்சர் திரு. வெங்கட்ராமன் தலைமையில் நடைபெற்றது. ரிசர்வ் பாங்க் கவர்னர் திரு. H. V. R. அய்யங்கார் மகாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகிறார்.

Regd.
M. 7277

©
தமிழ்நாடு
அரசாங்கம்
1961.





"கடமையுணர்ச்சி மிக்க காவல் படையினர் கலை உணர்வு பெற்று விளங்குகிறார்கள்...."

உதகமண்டலத்தில் அகில இந்திய போலீஸ் கலாச்சார விழா மிக சிறப்புடன் நடைபெற்றது.